உதயன்
விலை ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 20 ஞாயிற்றுக்கிழமை (06.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 345



09
பொதுநலவாய மாநாடு இலங்கையில்



19
எங்கும் தமிழிசை ஒலிக்கச் செய்தவர்



27
எதிர்ப்பார்களா? மௌனமாக இருப்பார்களா?

# இறுதிப் போரின்போது அரச படையினர் பல தவறுகளைச் செய்தது உண்மை

* நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிப்பு



கொழும்பு, நவ.6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கை இறுதி செய்யப்பட்ட நிலையில் அது அரச தரப்புச் சட்ட நிபுணர்களால் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. அந்த அறிக்கையில் இறுதிப் போரின் போது இலங்கையின் அரச படையினர் பல தவறுகளைப் புரிந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக நம்பகமாக அறிய வந்தது.

''அறிக்கை முப்படையினர் மீதும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளது'' என்று உதயனுக்குத் தெரிவித்தது நம்பகமான செய்தி மூலம் ஒன்று. போரின் இறுதிக் கட்டத்தில் படையினரால் தவறுகள் பல மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிக்கை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்துள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பக் 31

# அரசியல் தீர்வில் அரசுக்கு கடுகளவு ஆர்வமுமில்லை

## அமெரிக்காவுக்கு கூட்டமைப்பு விளக்கம்

வாஷிங்ரன், நவம்பர் 6

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலோ போர்க் குற்ற விசாரணைகளை நடத்துவதிலோ போருக்குப் பின்னரான புனரமைப்புப் பணிகளிலோ இலங்கை அரசுக்குக் கடுகளவு ஆர்வமும் இல்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்தக் கருத்தையே அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளிடமும் கனேடிய அரச தரப்பினரிடமும் தாம் விளக்கிக் கூறியுள்ளனர் என்று தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பினை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த 25ஆம் திகதி வாஷிங்ரன் சென்றனர். அங்கு, ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரத் துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினர். பின்னர் கடந்த முதலாம் திகதி நியூயோர்க் சென்று ஐ.நா. துணைச் செயலாளர் லியம் பாஸ்கோவையும் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்களின்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து நியூயோர்க்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொலைபேசி மூலம் 'அசோஸியேட் பிரஸ்' (ஏபி) செய்தி முகவர் நிலையத்துக்குப் பேட்டி வழங்கியுள்ளார்.

அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் போருக்குப் பின்னரான புனரமைப்புப்

பக் 31

# கிளிநொச்சி, திருநகரிலும் நகைகள், பணம் நேற்றுச் சூறையாடல்

கிளிநொச்சி, நவ.6

கிளிநொச்சிப் பகுதியில் அண்மைக் காலமாக ''விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் வீட்டில் உள்ளன; சோதனையிட வேண்டும்'' எனக் கூறிக்கொண்டு ஆயுதங்களுடன் வரும் கும்பல் பெறுமதிமிக்க பொருள்களைச் சூறையாடும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நேற்றைய. தினமும் கிளிநொச்சி, திருநகர் வடக்குப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் தெய்வேந்திரம் என்பவரின் வீட்டுக்கு மாலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த 5 பேர் கைகளில் தடிகள், பொல்லுகள், வாள், கத்தி என்பவற்றுடன் புகுந்து கைவரிசையைக் காட்டி உள்ளனர்.

பக் 31

# கடல் வளத்தை அழிக்கும் உபகரணத்தை மீனவர்கள் பயன்படுத்தினால் கைது

யாழ்ப்பாணம், நவ.6

கடல் வளத்தை அழிக்கும் சட்ட விரோத கடல் தொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் செய்பவர்களைப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பணித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் குழுக் கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வே.அருந்தவநாதன், மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.நவரட்ணம், வடமராட்சி மீனவர் சங்கங்களின் பிரதிநிதி சூரியகுமாரன் மற்றும் மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன்,

பக் 31

# கைதடி அரச சிறுவர் இல்லத்தின் மற்றொரு குழந்தையும் சாவு

யாழ்ப்பாணம்,நவ.6

கைதடி அரச இல்லத்தைச் சேர்ந்த இரண்டாவது குழந்தையும் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன அதேசமயம் மற்றும் ஒரு குழந்தை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கைதடி அரச சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சதீஸ் என்ற இரண்டுமாதக் குழந்தையே நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு எடுத்து வரப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.

இந்தக் குழந்தை நேற்றுமுன்தினம் காய்ச்சல் காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்னர் மீண்டும் கைதடி அரச சிறுவர் இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இரவு மீண்டும் கடுமையான காய்ச்சல் ஏற்பட யாழ்.போதனா வைத்திய சாலைக்கு

பக் 31

ஐரோப்பிய நாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் பயணக் காப்புறுதிகள் & பயணச் சீட்டுகள் பெற்றுக் கொள்ள...
0773629799
0777380557
AIRMARK Travels & Tours
IATA





நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 0033 / 021 222 0044
#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 4777 / 021 222 4888
Metro Engineering (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய காலநிலை காணப்படலாம்.

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 2013 ஆம் ஆண்டு பெரும் மாற்றங்கள்

## உயர்தரத்துக்கான பாடங்களும் உள்ளடக்கம்

கொழும்பு,நவ.6
கல்வி அமைச்சால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 2013 ஆம் ஆண்டு முதல் பெரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் உயர்தரக் கல்வி பயில்வதற்கான பாடங்களை ஆண்டு 9 முதல் ஒரு மாணவன் தெரிவு செய்யும் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு முதல் புதிய முறைமை உடனடியாக நடைமுறைக்கு வரும் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு முதல் பாடசாலைக் கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள பெரும் கொள்கை மாற்றத்துக்கு அமைவாக அடுத்த ஆண்டு முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

இந்தப் புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தற்போது முழு வீச்சில் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதனது இறுதி அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய கல்விக் கொள்கையின் கீழ் 2013 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவன் 6 கட்டாய பாடங்களையும், தாம் உயர்தரத்தில் கற்கவுள்ள பாடத் தெரிவுக்காக 3 துணைப் பாடங்களையும் எழுத வேண்டியவர்களாக இருப்பார்கள் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கட்டாய பாடங்களுள் தமிழ், கணிதம், சமூகக்கல்வி, சமயம், அறிவியல், ஆங்கிலம் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

இந்தப் பாடங்களுக்கு மேலதிகமாக மூன்று துணைப் பாடங்களை உயர் தரத்தில் தாம் கற்கவுள்ள பாடநெறியுடன் இணைந்ததாக மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும் .

உதாரணமாக ,உயர்தரத்தில் வர்த்தகப் பாடநெறியை கற்க நோக்கமுள்ள ஒரு மாணவன், கணக்கியல், பொருளியல் மற்றும் வர்த்தக கற்கை என்பவற்றை தெரிவுசெய்ய வேண்டும் . இதன்மூலம் ஒரு மாணவன் உயர்தரத்திற்குள் நுழையும்போது தான் கற்க வேண்டிய பாடம் குறித்த அடிப்படை அறிவைக் கொண்டிருப்பான்.

இன்று நிலைமை அப்படியல்ல சாதாரணதரப் பரீட்சை எழுதிய பின்னரே மாணவர்கள் உயர்தரம் குறித்து சிந்திக்கிறார்கள் உயர் தரத்தில் நுழையும் போது தாம் கற்கும் நெறி குறித்து எந்த அடிப்படை அறிவும் அவர்களுக்கு இருப்பதில்லை இது பல மாணவர்களுக்கு பெரும் சுமையாக இருக்கிறது என்றார் கல்வி அமைச்சர்.

இதேபோன்று அறிவியல் பாடத்தைக் கற்க விரும்பும் மாணவர்கள் ஆண்டு 9 முதலே தமக்கான பாடம் குறித்த அடிப்படை அறிவைக்கற்பதற்குஏதுவாகஇருக்கும்.

தற்போது மாணவர்கள் ஆறு கட்டாயபாடங்களுடன் வெவ்வேறான மூன்று பாடங்களை தெரிவு செய்வதற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். புதிய கல்விக் கொள்கையில் இந்த நடைமுறை முற்றாக நீக்கப்பட்டு விடும் என்று அமைச்சர் தெரிவித்தார். (த-311)

# உலகத் தமிழர் பேரவை மாநாட்டுக்கு அமெ.சென்ற சீமான் தடுத்து நிறுத்தம்

## நியூயோர்க் விமான நிலையத்தில் இருந்து திரும்பினார்

நியூயோர்க்,நவ.6
அமெரிக்காவில் நடைபெறும் உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் கலந்து கொள்வதற்குச் சென்ற சீமான் அனுமதி மறுக்கப்பட்டு நியூயோர்க் விமான நிலையத்திலேயே வைத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து, சிங்கள பௌத்த இனவாத ஆட்சியின் அரச பயங்கரவாதத்துக்கு துணை நின்று, தமிழினப் படுகொலைக்கு உதவிய அரசுகள் இன்று தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அரசியல் தளத்திலும் முடக்க இப்படிப்பட்ட வன்செயல்களில் ஈடுபடுகின்றன என, சீமான் திருப்பி அனுப்பப்பட்டமை குறித்து நாம் தமிழர் கட்சி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;

உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு தமிழர் அமைப்புகள் அமெரிக்காவில் தங்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு சீமானுக்கு அழைப்பு விடுத்திருந்தன. அதற்கான முறையான பயண அனுமதியும் அந்நாட்டு அரசிடமிருந்து பெற்று சீமானின் பயண ஏற்பாடுகளை உறுதி செய்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் இரவு சென்னையில் இருந்து அமெரிக்காவுக்கு சீமான் புறப்பட்டுச் சென்றார். நேற்று அதிகாலை சீமான் நியூயோர்க் சென்றடைந்த போது, அவரை நாட்டுக்குள் அனுமதிக்க முடியாது என்று கூறி விமான நிலையத்திலேயே தடுத்து வைத்துள்ளனர்.

இதற்கான காரணம் கேட்டதற்கு, சீமான் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நெருக்கமானவர் என்றும், அவரை அனுமதித்தால் அது அமெரிக்க நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகலாம் என்ற அச்சம் காரணமாக அனுமதி மறுக்கப்படுவதாக கூறியுள்ளனர். உலகத் தமிழர் பேரவையின் தலைவராக உள்ள அருட்தந்தை இம்மானுவேல் அடிகளாரை இதேபோல்தான் சென்னை விமான நிலையத்தில் இந்திய குடியேற்றத்துறை, விமானத்தில் வைத்து இறங்கவிடாமல் திருப்பி அனுப்பியது. அதுதான் சீமானுக்கும் நடந்துள்ளது. (ஒ)

## அனைத்து ஊடகங்களும் பதியப்பட வேண்டும்

இலங்கைச் செய்திகளை வெளியிடும் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள், இலங்கை ஊடக அமைச்சில் பதிவு செய்யப்பட வேண்டுமென அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டைப் பற்றியோ அல்லது அதன் மக்கள் பற்றியோ செய்திகளை வெளியிடும் இணைய ஊடகங்கள் ஊடக அமைச்சில் தங்களைப்பதிவுசெய்துகொள்ளவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய வகையிலும், ஊடக ஒழுக்கக் கோவைக்கு புறம்பான வகையிலும் சில செய்தி இணையத்தளங்கள் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, குறித்த இணையத்தளங்களை நெறிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.(ஒ)

## நீதிமன்றத்தில் சத்தமிட்டவருக்கு ரூ.500 அபராதம்

தென்மராட்சி,நவ.6
சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் உரத்து சத்தமிட்டு நீதிமன்றினை அவமதித்த நபருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் எச்சரிக்கை செய்ததுடன் 500 ரூபா அபராதம் விதித்தார். (த-207)

# கட்டுரைப் போட்டி முடிவுகள்; நாளை பரிசளிப்பு

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு அனுசரணையுடன் 'யூ ஆர் ப்பிரெண்ட் பவுண்டேசன்' நிறுவனத்தால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். பரிசளிப்பு விழாவுக்கு வெற்றியீட்டிய மாணவர்களுடன் (பாடசாலைச் சீருடையில்) அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோரையும் கலந்து சிறப்பிக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பரிசு பெறும் மாணவர் விவரம்: கீழ்ப்பிரிவு தரம் - 6,7,8

ர.மோனிகா-பூநகரி ம.வி., பிரான்சிஸ் றொபேசன் -கிளி/ பாரதி வித்தி., அ.அன்ரனி றொபின்ஸன் - புனித பத்திரிசியார், இதய சிவதாஸ் சங்கீர்த்தனா -உருத்திரபுரம் ம.வி., அ.பஸ்மியா - ஊரெழு கணேசா, மாதங்கி ஜானகிராமன் -வேம்படி மகளிர், சுபாரட்ணம் பிரவீன் டானியல் -மன்/பரிகாரி கண்டல் அ.த.க.பா, ம.மேரிலோயினி - கோப்பாய் ம.வி, பா.வேணுகா -தொல்புரம் விக் னேஸ்வரா, ச.லக்சிகா - ஊரெழு கணேசா.

இடைநிலைப்பிரிவு-தரம்-9,10,11

தேனுகா உருத்திரமூர்த்தி - யா/வேம்படி மகளிர் உயர்தர பா., அ.வேஜினி பிகுறாடோ-மன்/ புனித லூசியா ம.வி., மா.தனுஜா -யா/இராமநாதன் கல்லூரி, ற.அட்சரன்-யா/புனித பத்திரிசியார், த.விஜேந்தினி-வ/விபுலானந்தாக் கல்லூரி, ம.சனுதியா-யா/ ஊரெழு கணேசா வித்தியாலயம், சிவபரன் புருசோத்-யா/இந்துக் கல்லூரி, சந்திரன் றமேஸ்-கிளி/முட்கொம்பன் அ.த.க. பா., சி.திலக்சனா-யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், க.லறினா-யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.(ஒ)

# நிகழ்வுகள்

**சஞ்சிகை வெளியீடு**

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் 16ஆவது சமூகச்சுடர் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடும் ஆங்கில மொழி விருத்தி சார்ந்த போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடை பெறவுள்ளன. நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகறஞ்சினி ஐங்கரன் கலந்து கொள்வார். (ம-28)

**நூல் வெளியீடு**

சிவனாந்த வாரிதி சிவத்திரு வ.குமாரசாமி எழுதிய மௌனகுரு கடவுள் சுவாமிகள் எனும் நூலின் வெளியீட்டு விழாவும் சிவபாக்கியம் அம்மையாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உடுவில் அம்பலவாணர் வீதியிலுள்ள கடவுள் சந்நிதியில் இடம்பெறவுள்ளன. (ம-38)

**ஊக்குவிப்பு விழா**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறை கிளையின் தொண்டர் ஊக்குவிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்த உடையார் ஒழுங்கை பிரிவுக் காரியாலயத்தில் நடைபெறும்.பிரிவுத் தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை உதவி அரச அதிபர் ஆர்.வரதீஸ்வரன் கலந்துகொள்வார். (ம-313)

**காயகல்ப பயிற்சி**

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியினால் வடிவமைக்கப்பட்ட மனவளக்கலை யோகா பயிற்சிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு காயகல்ப பயிற்சி நல்லூர் வடக்கு வீதி மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியில் 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளலாம். (ம-313)

**பொதுக்கூட்டம்**

அச்செழு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதன்போது புதிய நிர்வாக சபைத் தலைவர் தெரிவும் இடம்பெறும். (ம-313)

**கலந்துரையாடல்**

கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு [illegible] நடைபெறவுள்ளது. (ம-313)

**செயலமர்வு**

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை பரத நாட்டியம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை 8.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

**பண்பாட்டு விழா**

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை நடத்தும் பிரதேச பண்பாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயில் பர்வதவர்த்தினி கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். (ம-313)

**கலந்துரையாடல்**

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**போட்டிகள்**

சைவ கலாசார மேம்பாட்டுப் பேரவை சங்கானை கல்விக் கோட்டம் நடத்தும் புராண படனம், பண்ணிசை, கதாப்பிரசங்கப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் கடும் மழை 24,000 குடும்பங்கள் தவிப்பு

## நெற்செய்கையும் மோசமாகப் பாதிப்பு

கிளிநொச்சி, நவம்பர் 6

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று பிற்பகல் முதல் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் வீடற்ற நிலையில் கொட்டில்களில் வசிக்கும் சுமார் 24 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து நேற்று மாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மழை ஓய்ந்திருந்தது. ஓய்ந்திருந்த மழை நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு மீண்டும் ஆரம்பமானது.

ஒரு மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்ச்சியாக சுமார் 5 மணித்தியாலங்கள் மழை கொட்டித் தீர்த்தது.

இரவு சுமார் 7 மணியளவில் மழை ஓரளவு ஓய்ந்திருந்தது.

கடந்த இரு தினங்கள் மழை ஓய்ந்திருந்தமையால் சில விவசாயிகள் வயல்களில் நெல் விதைப்பையும் மேற்கொண்டனர். விவசாயிகளால் இவ்வாறு விதைப்புச் செய்யப்பட்ட நெல் நேற்றுப் பெய்த மழையினால் வெள்ளத்தில் அள்ளுண்டு போய் விட்டது.

கிளிநொச்சியில் ஏற்கனவே காலம் பிந்திப் பெய்த மழையினால் நெற்செய்கை மோசமாகப் பாதிப்படைந்துள்ள நிலையில் விவசாயிகளால் கடந்த தினங்களில் விதைப்புச் செய்யப்பட்ட நெல்லும் நேற்றைய மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து கிளிநொச்சி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலம் பிந்திய மழையினால் இந்த முறை கிளிநொச்சியில் நெற் செய்கை கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள். நேற்றுப் பிற்பகல் முதல் சுமார் 5 மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாகக் கொட்டிய மழையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வீடற்ற நிலையில் வசிக்கும் சுமார் 24 ஆயிரம் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி உள்ளதாகத் தெரியவருகின்றது. இந்தக் குடும்பங்கள் அனைத்தும் இடம்பெயர்வின் பின்னர் தற்காலிக கொட்டில்களை அமைத்தே மீள்குடியமர்ந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. நேற்றுப் பெய்த மழை காரணமாகப் பல இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இதனால் சில இடங்களில் தற்காலிக கொட்டில்களுக்குள்ளேயும் வெள்ளம் புகுந்தது. இவற்றில் வசித்த மக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளானார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வீதிகளை மூடியும் சில பகுதிகளில் வெள்ளம் பாய்ந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் சுமார் 30 ஆயிரம் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவை எனவும், இவற்றில் 16 ஆயிரம் வீடுகள் மட்டுமே நிறுவனங்களினால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன எனவும் அந்தக் குடும்பங்களில் இதுவரை 6 ஆயிரம் வீடுகளே நிர்மாணிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. ஏனைய குடும்பங்களுக்கான வீடமைப்புப் பணிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் அந்தக் குடும்பங்கள் தற்போது தற்காலிக கொட்டில்களிலேயே வசித்து வருவதாகவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. இந்தக் குடும்பங்களுக்கு அரசினால் தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்கான தறப்பாள்களே வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பெய்த மழையினால் இவ்வாறு தற்காலிக கொட்டில்களில் வசிக்கும் சுமார் 24 ஆயிரம் குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் இந்த மழை தொடர்ந்து நீடிக்குமானால் இந்தக் குடும்பங்களின் நிலை மேலும் மோசம் அடைவதுடன் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இந்த மழை காரணமாக கிளிநொச்சியின் சில இடங்களில் வீதிகளும் சேதத்துக்கு உள்ளாகின. (த-6)

# 7 கிலோ கஞ்சா பொதியுடன் சிக்கிய மன்னார் வாசி

மன்னார், நவ.6

மன்னார் உப்புக்குளம் கோந்தைப்பிட்டிக் கடற்கரைப் பகுதியில் கஞ்சாப் பொதிகளுடன் காணப்பட்ட நபரொருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மன்னார் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

கடற்கரைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட மேற்படி நபரை அணுகிய கடற்படையினர் அவர் வைத்திருந்த பொதியைச் சோதனையிட்டபோது அதனுள் கஞ்சாப் போதைப் பொருள் இருப்பது தெரிய வந்தது. இது ஏழு கிலோ 360 கிராம் கொண்ட தாகவும் காணப்பட்டது.

பின்னர் கடற்படையினர் சந்தேக நபரையும் கஞ்சாப் பொதிகளையும் அடுத்தநாள் வியாழக்கிழமை மன்னார் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தி னர். இதனைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபரை ஏழு நாள்களுக்குத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டார்.

தற்போது குறித்த நபரிடம் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மன்னார்ப் பொலிஸ்நிலையத்தின் பொறுப்பதிகாரியான பி.எம். ஜெய வர்த்தன தெரிவித்தார். (க-601)

# ஏறாவூரில் நேற்று கடலில் மூழ்கி இரு மாணவர் சாவு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னக்குடா கடலில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்; ஐந்து பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இன்று பிற்பகல் தளவாய் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் ஏழு மாணவர்கள் மேலதிக வகுப்பு முடிந்த பின்னர் புன்னக்குடா கடலில் குளிக்கச் சென்றுள்ளனர். இவர்களில் ஐந்து மாணவர்கள் உயிர் தப்பியுள்ளனர். முதலில் நேற்று பிற்பகல் குளிக்கச் சென்ற ஏழு மாணவர்களும் குளித்துக் கொண்டிருந்த போது கடலில் மூழ்கியுள்ளனர். இதனையடுத்து பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் குறித்த மாணவர்களை மீட்க முயற்சித்துள்ளனர்.இதன் போது இருவர் சடலமாக மீட்கப்பட்டதுடன் ஏனைய ஐந்து மாணவர்கள் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

# மரண தண்டனையை ஏற்கவும் தமிழ்க் கூட்டமைப்பினர் தயார்

## சிறீதரன் எம்.பி. இனவாதிகளுக்குச் சவால்

யாழ்ப்பாணம், நவ.6

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் அவர்களது வாழ்வுக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மரண தண்டனை விடீணீத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றது. இயலும் என்றால் அவர்கள் அதைச் செய்யட்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றைக் கண்டு ஒரு போதும் அஞ்சாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கை அரசையும் மீறி தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா. உதவிச் செயலரைச் சந்தித்தமைக்காகவும் வெளிநாடுகளில் இலங்கையில் பிரிவினை வாதத்தைத் தோற்றுவிக்கும் வகையில் பேசியமைக்காகவும் வெளிநாடு சென்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி நீக்குவதுடன் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்த கருத்துத் தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களைக் கைது செய்து தான் அவர்கள் தங்களது அராஜகத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றால் கைது செய்யட்டும். அதற்காக ஒருபோதும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயப்படப்போவதில்லை.

தமிழ் மக்கள் இலங்கையில் இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தியை வெளியுலகுக்கு சொன்னவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான். தமிழ் மக்கள் எப்போது தங்களது உரிமைக்காக ஜனநாயக ரீதியாக போராடுகின்றார்களோ அப்போதெல்லாம் சிங்கள இனவாதம் தலைவிரித்தாடிய வரலாறுகள் தான் இருக்கின்றன.

தந்தை செல்வாவின் காலத்தில் அமிர்தலிங்கத்தை கைது செய்தார்கள். பண்டா - செல்வா ஒப்பந்தம் நடந்த வேளையில் அதனைக் குழப்பியவர் ஜே.ஆர். அதன் பின்பு இலங்கை இந்தி ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைந்த வடக்கு, கிழக்கை பிரித்தவர்கள் இனவாதிகளான ஜே.வி.பியினர் தான்.

தமிழ் மக்களுக்கு எப்போதும் தீர்வு கிடைக்கக் கூடாதென்பதுடன், அவர்கள் இலங்கையில் ஒரு தேசிய இனம் இல்லை என்று வெளிக்காட்டுவதில் சிங்கள இனவாதிகளும், சிங்களக் கட்சிகளும், பௌத்த பிக்குகளும் முதன்மை வகித்திருக்கின்றார்கள். இதனை விட விகாரமாதேவி தமிழனின் இரத்தத்தைக் குடிக்க வேண்டும் என்று விரும்பிய வரலாறுகளும் உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மை நிலைப்பாட்டை உலகுக்கு எடுத்துச்சொல்கின்றது. கடந்த 30 ஆண்டுகளாக போராடியவர்கள் நாங்கள். ஆயுதமேந்திப் போராடிய காலம் முடிவடைந்து ஜனநாயக ரீதியாக உலகுக்கு உண்மையைச் சொல்லி எமது உரிமையைக் கேட்கின்றோம்.

முள்ளிவாய்க்காலில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐ.நா. கூறுகிறது. இதனை முழு உலகமும் பார்த்துக் கொண்டு தான் இருந்தது. ஆனால் எமக்குத் தெரிந்த வரையில் ஓர இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கை அரசு இங்கு ஒரு தேசிய இனத்தை அழித்தது என்பதையும் இங்கு இந்த மண்ணில் இன அழிப்பு நடந்தது என்பதை நிரூபித்து இங்கு தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழ முடியாது என்ற நிலைப்பாடு உணர்த்தப்பட வேண்டும்.

இதன் மூலமாக தமிழ்மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் அதற்காக அவர்கள் எம்மை கைது செய்து சிறையில் அடைந்தாலும் மரண தண்டனை வழங்கினாலும் பரவாயில்லை. எதற்கும் முகம் கொடுக்க நாம் தயாராகவே இருக்கிறோம் - என்றார். (ஒ-15)

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

சுஜந்தன் பாமினி தம்பதியரின் செல்வப் புதல்வி

தஸ்மிகா



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.தஸ்மிகாவை கனடாவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தி , சித்தப்பா, சுவிஸில் வசிக்கும் பெரியப்பா குடும்பத்தினர், அத்தை குடும்பத்தினர், ஜேர்மனியில் வசிக்கும் அத்தை குடும்பத்தினர், இலங்கையில் வசிக்கும் தாத்தா, பாட்டி, அம்மப்பா, அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் தஸ்மிகாவை சீரும் சிறப்பும்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.




பாலகிருஷ்ணன்,
தனலக்சுமி (கனடா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



*செல்வி ஜெபதேவி நல்லப்பா*

*(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)*

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜெபதேவி நல்லப்பா 04.11.2011 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி G.C. நல்லப்பாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்விகளான ஜெபலக்சுமி, ஜெபராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (6.11.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு உடுவில் அப்போஸ்தல திருச்சபையில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக தெல்லிப்பழையிலுள்ள குடும்பச் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
'சுகந்தஸ்தான்' மானிப்பாய் வீதி, உடுவில் — குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புமிகு பகுதி நேர விரிவுரையா
எருமீ யாழ்.மாவட்ட உதவி அனர்த்த
முகாமைத்துவ பணிப்பாளருமாகிய
ரவி அவர்களது பாசமிகு தந்தை

**அமரர் சின்னவன் சங்கரப்பிள்ளை**

கடந்தபுதன்கிழமை 02.11.2011 இயற்கை எய்தி விட்டார். அவரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினருக்கும் எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, எமது கண்ணீரையும் காணிக்கையாகப் படைக்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

IDM சாவகச்சேரிக் கிளை, A-9வீதி, சாவகச்சேரி. — பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் **Galle Road** இற்கு மிக, **அருகாமையில் அமைதியானதும்** பாதுகாப்பானதும் ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள **Apartment** இல் **3B/R, 2B/R, 1B/R** வீடுகள் மிகவும் சாதாரண விலையில், எழிமையான கொடுப்பனவு முறையுடன் விற்பனைக்கு உண்டு. முன் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்க : **0777368764**

## சேவை

முதியோர் இல்லம் வெள்ளவத்தை, யாழ்.நகரம் ஆகிய இடங்களில் மருத்துவரின், சிறந்த பராமரிப்பாளரின் சேவையுடன் குறைந்த செலவில் சேவை வழங்குகின்றோம். 0718234691

## விற்பனைக்கு

Steel Welding Plant, குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. - விஜி 0771310530

## பசு மாடு விற்பனைக்கு

யேசி இன மாவெள்ளைப் பசு 9 மாத சினையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0213219900

## தேவை

வவுனியாவில் உள்ள PHARMACY ஒன்றுக்கு PHARMCIST ஒருவர் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். பெண்களுக்குத் தங்குமிட வசதி தரப்படும். தொடர்பு: 0242223141, 0750442099

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும், பரியோவான் கல்லூரிக்கும் (St. johns College) அண்மையில் 3 பரப்பும் 1½ குளி விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0774951662

## வீட்டு உதவியாளர் தேவை


கொழும்பில் வதியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியத் தம்பதியினர் தமது இரு சிறு பெண் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கும் வீட்டு வேலைகளில் தம்மோடு தங்கியிருந்து உதவி புரியவும் 20-50 வயதில் பெண்மணி ஒருவரை எதிர்பார்க்கின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொ.பே: 0773819855, 0773456779

# WANTED
## JOURNALIST

We are looking for an energetic journalist with good English knowledge. Should have the ability to meet non Tamil speaking dignitaries eminent personalities visiting Jaffna and write clean copies in Tamil.

Persons working in media with experience will be given preference. Salary could be negotiated depending on the ability and experience. Knowledge in Singhala will be an added qualification.



*Send your Bio - Data to:*

**Chief Editor,**
**New Uthayan Publications (Pvt.)Ltd.**
No.361, Kasthuriyar Road,
Jaffna.

## தவறிவிட்டது

அல்வாய் தெற்கு , அல்வாய் என்ற முகவரியைச் சேர்ந்த முருகேசு இராஜகோபால் என்பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் நெல்லியடி நகரில் தொலைந்து விட்டது. (503173050 V) கண்டெடுத்தவர்கள் பின்வரும்தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொள்ளவும்:

0777422604, 021 226 3970

*(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம் : 11.09.1952**

**மறைவு : 18.10.2010**

## சுப்பிரமணியம் சுகுமாரன் (சுகு)

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் முழுவடிவமாய் அரவணைப்பதில் சிகரமாய்
எங்கள் குடும்ப தலைவனாய் எல்லோருக்கும் இனியவனாய்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள்
எமைத்தவிக்க வைத்துவிட்டு நீங்கள்
இறைவனடி சேர்ந்தாலும் உம்மையென்றும் நாம் மறவோம்
அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

**உங்கள் பிரிவால் துயருறும்:** அம்மா, மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார் பெரியதாய், சிறியதாய், வனிதாக்கா, சித்தப்பா, மாமா, மாமி, மருமக்கள், பெறாமக்கள் மற்றும் உறவினர், நண்பர்கள்.

"சுகுண வாசம்" நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

# நெஞ்சகலா நினைவலைகள்

**செல்வன்**

*தோற்றம்: 14.10.1988*
*மறைவு: 05.11.2010*

## அருளீஸ்வரன் நர்சுதன்

*(ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக 3 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி - வர்த்தகப் பிரிவு மாணவன் A/L 2007)*

பழகிய நாள்கள்
நட்பில் நனைந்த நிமிடங்கள்
நினைவில் நின்று - எம்
நெஞ்சை கனமாக்குகிறதே
காகிதப்பூ மணப்பது இல்லை
கண்ணீர்ப்பூ சிரிப்பது இல்லை
நல்லமனம் மறப்பது இல்லை - அதுபோல்
உன்னையும் உனது அன்பையும்
மறவாத இதயம்
நாம் மற்றும் நமது நட்பு



**A/L 2007**
வர்த்தகப் பிரிவு மாணவர்கள்,
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னிக் கொள்ளைகளின் ஊற்றுக் கால் எங்கே?

பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது முதுமொழி. அது இப்போது, அடுத்தடுத்து வன்னிவாழ் மக்களுக்கே மிகப்பெரிய அளவில் பொருந்துவதாக உள்ளது.

போர் காரணமாகத் தமது சகல சம்பத்துக்களை மட்டுமன்றி, உறவுகளையும் இழந்து வாழ்க்கையின் ஓரத்துக்கே, விளிம்புக்கே வந்து உள்ளனர் அவர்கள். நாளாந்த வாழ்க்கைக்குரிய அடிப்படை வசதிகளைப் பெற முடியாத, தேட முடியாத நிலையில் அல்லாடும் அவர்களை வரட்சி, பெருமழை மற்றும் இயற்கை இயல்புகளும் ஒன்று மாறி மற்றதாகச் சோதித்து வருகின்றன. அவை குறித்து இப்பத்தியிலே பல தடவைகள் விஸ்தாரமாக வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளோம்.

அவற்றைவிடப் பெரும் பரிணாமத்தில் இப்போது கொடும் வடிவம் எடுத்துள்ளன கொலைகளும் கொள்ளைகளும். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தடுப்பாரின்றி, கேட்பார் இன்றி இவை மக்களை வதைத்து வருகின்றன.

கடும் மழை பெய்யும் இக்காலத்தில், வீடுகளுக்குள் கத்தி, வாள் போன்ற சிறு ஆயுதங்களுடன் நுழைந்து, முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அங்கிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும், அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வந்திருப்பதாகவும் தெரிவித்து, வீடுகளைச் சல்லடையிட்டுத் தேடி, அங்கிருந்து பணம், நகை மற்றும் பெறுமதிமிக்க பொருள்களைச் சூறையாடிச் செல்கிறார்கள், இதுவரை இனங்காணப் படாதவர்கள்.

ஓர் இடத்தில், வீட்டில் ஆரம்பிக்கப்படும் இந்தக் கொடும் சம்பவம், அந்தப் பகுதியில் உள்ள ஏனைய வீடுகளுக்கும் பகுதிகளுக்கும் அசுர வேகத்தில் பரவுகின்றன. இத்தகைய கொடும் செயலில் ஈடுபடுவோர் பல சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினரின் சீருடை போன்ற உடுப்புகளுடனும் செல்வதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவித்திருக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பின்தங்கிய பகுதிகளிலேயே கொள்ளைகள் பெரும் எண்ணிக்கையில் ஆரம்பத்தில், முதலில் நடைபெற்று வந்தன. இப்போது அவை நகரப்பகுதிகளுக்கும் பரவத் தொடங்கிவிட்டன. மழைகாலம் என்பதால் இரவுக் கொள்ளைகள் பல்கிப் பெருகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவற்றைத் தடுப்பதற்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக் கடமைப்பட்டுள்ள தரப்புகள் உரிய அளவில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று மக்கள் குறைப்படுகிறார்கள். வியர்வை சிந்தி, விவசாயத்தினால் கிடைத்த வருமானத்தில், சிறுகச் சிறுகச் சேகரித்த பணத்தில் தேடிக் கொண்டவையே, திருடர்கள் என்ற வேடத்தில் வருவோர் சுருட்டிச் செல்லும் நகைகள், மற்றும் பணம் என்பன. அந்தச் சிறு தேட்டங்கள் வெறும் பொன் நகைகள் மட்டுமன்று. கையில் பணம் இல்லாத வேளைகளில் விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான முதலாகவும் விளங்குவது உண்டு. வன்னியில் பலதரப்பட்ட கஷ்ட நிலைகளில் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு உதவு சக்தியாக விளங்குபவை நகைகளே. அந்தப்பெருநிலப்பரப்பில், நகைகள் பலவேளைகளில் கஷ்ட நிவாரணிகளாகவும் விளங்கும் ஒன்றாகும்.

வன்னியில் நடைபெறும் கொள்ளைகளைத் தனியே திருட்டுகள் வகையினதாகப் பார்க்க முடியாது. அப்பிரதேச மக்களின் தொழிலை இடித்து விழுத்தும் ஒரு வகையான சதி முயற்சியாகவும் நோக்குவது அவசியமும் தவிர்க்க முடியாததும் ஆகும். வன்னி மக்களுக்கு முழுக்க முழுக்க அவர்களது சீவனோபாயத்துக்கு, வருமானம் தருவதற்கு மூலமும் முதலுமாக விளங்குவது பயிர்ச்செய்கை. மிகக் குறிப்பாக பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்த கட்டம் இக்காலத்திலேயே நடைபெறும். அதற்குத் தேவையான பணம் போதாதிருக்கும்போது ஒவ்வொரு விவசாயக் குடும்பத்துக்கும் கைகொடுப்பது அந்த வீட்டாரின் நகைகளே. அவற்றைக் கொள்ளையிடுவது என்பது விவசாயிகளின் தொழிலை வேரோடு சாய்ப்பதற்கான வெளியே கண்ணுக்குப் புலப்படாத மறைமுகத் திட்டம் எனக் கருதலாம்.

வன்னியில் இந்தத் தருணம் பார்த்து நடத்தப்படுபவை, மக்களின் தொழிலின் அடித்தளத்தை அரித்தெடுக்கும், அறுத்தெறியும் உள்நோக்கம் கொண்டவை எனக் கருதுவதும் தப்பன்று. வன்னிக் கொள்ளைகளை சாதாரண, வேறு பிரதேசங்களில் நடைபெறும் வெறும் சூறையாடல் எனக் கொள்ளலாகாது.

இந்தக் கொள்ளைகள், வெளியில் தெரியாத சக்திகளால் திட்டமிட்ட முறையில் நடத்தப்படும் தொழில் பறிப்பும், வன்னியில் வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் என்பதால் அவர்கள் மீது வஞ்சம் தீர்க்கும், நன்கு திட்டமிடப்பட்ட சதி எனலாம்.

வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களில் பெரும்பாலானோர் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் வழங்கும் உதவிகளிலேயே தங்கி வாழ்கின்றன. எஞ்சிய மக்களே விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களின் தொழில் முயற்சியை இயற்கை தேய்த்து விடுவதற்கு முன்னர், செயற்கையாக, திட்டமிட்ட, தூண்டி விடப்பட்ட, வஞ்சம் தீர்க்கும் சதியாகவே வன்னிக் கொள்ளைகளை நோக்கவேண்டி உள்ளது.

அரசாங்கம் அவற்றைக் கட்டுப்படுத்த, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? இதுவரை அது குறித்து துளியளவேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை..... இனிமேலாவது..... நொய்ந்து நெடிந்து போன மக்களைத் தூக்கி நிறுத்தி அவர்களுக்கு உதவுவது அரசின் தட்டிக் கழிக்க முடியாத கடமை. அரசே, அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டாயா? - என்று அடுத்தடுத்து பலவிதங்களிலும் நொந்து போயுள்ள வன்னி மக்கள் சார்பில் கேட்கிறோம். மனித நேயத்தின் பேரிலாவது இது செவியில் விழுமா?

# பிரதேச எல்லைகளுக்குள் நடைபெறும் திட்டங்களுக்கு மாவட்ட அபிவிருத்திக் குழு அங்கீகாரம் தேவையற்றது

## உள்ளூராட்சி உறுப்பினர்களின் செயலமர்வில் சரவணபவன் எம்.பி



உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கான செயல் அமர்வின்போது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், மற்றும் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் உரையாற்றுகின்றனர். செயலமர்வில் கலந்து கொண்ட பிரமுகர்களும், பிரதேச சபைகளின் உறுப்பினர்களும் அமர்ந்திருக்கின்றனர். (த-2)

யாழ்ப்பாணம், நவ.6

பிரதேச எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரம் பெற வேண்டிய அவசியம் இல்லை. நீங்களே சுயமாக தீர்மானங்களை மேற்கொண்டு அபிவிருத்தி வேலைகளை செய்ய முடியும் என்றார் யாழ்மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நேற்றுமுன்தினம் யாழ்.சிந்தனைக் கூடம் மற்றும் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான இயக்கம் என்பன ஒன்றிணைந்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைத் தெளிவு படுத்தும் செயலமர்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தன.

யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலைய மண்டபத்தில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

பேராசிரியர் கலாநிதி சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் சிறப்புரையாற்றிய ஈ.சரவணபவன் எம்.பி மேலும் கூறியதாவது:-'

உள்ளூராட்சிச் சபைகள் அப்பிரதேச மக்களின் வரிப் பணத்தில் இயங்குகின்றன. அந்த மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான அபிவிருத்திப் பணிகளைச் சுயமாக செயற்படுத்தமுடியும். இதற்கு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரமோ அனுமதியோ பெறவேண்டிய அவசியம் இல்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகள் சுதந்திரமாக செயற்படமுடியும்.

இந்த விடயத்தில் உங்களுக்கு முட்டுக்கட்டைகள் ஏற்படின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனைகளைப் பெற்று செயற்படவேண்டும். நேற்றுமுன்தினம் நல்லூர் பிரதேச சபையினால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டம் நிராகரிக்கப்பட்டது ஒரு கசப்பான சம்பவம். இக் கூட்டத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை தாங்கியுள்ளார்.

மக்கள் சேவைக்காகத் தெரிவு செய்யப்பட்ட நீங்கள் ஒற்றுமையாக உங்களுடைய அதிகார எல்லைக்குள் சுயமாகச் செயற்படும் அதிகாரம் உண்டு.

உள்ளூராட்சிச் சபைகள் தமது பிரதேச அபிவிருத்திக்காக புலம் பெயர் உறவுகளிடமிருந்து உதவிகளைப் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. எனவே பிரதேச சபைகள் வெளிநாடுகளில் இன்று நேரடியாக உதவிகளைப் பெறுவது தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து ஆவன செய்யலாம் - என்றார். (த-02)

# சவால்களை சந்தர்ப்பமாகவும் பிரச்சினைகளை வாய்ப்பாகவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

## முன்னாள் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன்

யாழ்ப்பாணம், நவ.6

சவால்களைச் சந்தர்ப்பமாகவும், பிரச்சினைகளை வாய்ப்பாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார் முன்னாள் பிரதம செயலாளரும் வடக்குக் கிழக்கு மாகாண சபை மற்றும் வடமாகாண ஆளுநரின் முன்னாள் செயலாளருமான எஸ். ரங்கராஜன்.

அவர் தொடர்ந்து பேசும்போது, நாம் இப்பொழுது முப்பது வருடங்கள் பின் தள்ளப்பட்டுள்ளோம். எனவே முப்பது வருடங்களுக்கு முன், முப்பது வருடங்களுக்குப் பின் என பெரிய மாற்றங்களும் சூழல் மாற்றமும் ஏற்பட்டுள்ளன. அதற்கேற்ப எமது சிந்தனையிலும் மாற்றமும் வெளிப்படைத் தன்மையும் ஏற்படவேண்டும்.

உள்ளூராட்சிச் சபைகள் என்றில்லாமல் உள்ளூராட்சி அரசு என்பது தான் சரி. இது தான் சட்ட ரீதியான அமைப்பு.

மத்திய அரசைபோன்று உங்கள் பிரதேசத்தை ஆளும் அதிகாரம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தை மக்களே உங்களுக்கு வழங்கியுள்ளனர்.

எனவே மக்களின் அன்றாடத் தேவை, சமூக அபிவிருத்தி என்பன அடையாளம் காணப்பட்டு அவை நிறைவு செய்யப்பட வேண்டும். அதற்கான திட்டங்களை வழங்கவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும் கூடிய அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளான உங்களுக்குச் சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூர்ப் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திதொடர்பான திட்டங்களைத் தட்டிச் செயற்படும் தத்துவ அதிகாரமும் உள்ளூராட்சி சபைகளுக்கு உண்டு என்றும் குறிப்பிட்டார் எஸ். ரங்கராஜன். (த-2)

# புதிதாக ஆரம்பிக்கும் வைத்தியசாலைகளுக்கு தாதியர் சேவையை இடைநிறுத்த நேரலாம்

## ஐக்கிய தாதியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ.5

நாடு பூராகவுமுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யாவிடின், புதிதாக ஆரம்பிக்கும் வைத்தியசாலைகள் மற்றும் விஷேட பிரிவுகளுக்குத் தாதிகளின் சேவையை இடைநிறுத்த நேரலாம் என அரச சேவை ஐக்கிய தாதியர்கள் சங்கம் தெரிவிக்கிறது.

கடந்த வருடங்களில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து தாதிய உத்தியோகத்தர்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையில் அமர்த்தப் பட்டுள்ளனர். இதனால் அனைத்து வைத்தியசாலைகளிலும் தாதியர்கள் அதிக வேலைப்பளுவுக்குள்ளாகியுள்ளனர். சத்திர சிகிச்சைப் பிரிவுகளில், அவசர சிகிச்சைப் பிரிவுகளில் 12 தொடக்கம், 18 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது நாடு பூராகவும் 45 ஆயிரம் தாதியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 25 ஆயிரம் தாதியர்களே உள்ளனர். தவிர தற்போது பயிலும் தாதிய மாணவர்கள் 2014 ஆம் ஆண்டிலேயே சேவையில் இணைந்து கொள்வர். எனவே தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யத் தற்போது சேவையிலிருந்து ஒய்வு பெற்ற, ஆனால் சேவையாற்ற கூடிய தாதிய உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளலாம். தற் போது சேவையிலுள்ளவர்களின் சேவைக் காலத்தை 63 வயது வரை நீடிக்கலாம் என சங்கம் ஆலோசனை முன்வைத்துள்ளது. (த-4-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு,காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி கட்டப்பிராயில் வீட்டுடன் 5பரப்புக்காணி மற்றும் வெற்றுக்காணி 7 பரப்பும் விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு : 0725254201

## தச்சு வேலையாள்கள் தேவை

கொழும்பில் நிர்மாணிக்கப்படும் தொடர் மாடிக் கட்டடத்துக்கு அனுபவமுள்ள தச்சு வேலையாள்கள் தேவை. கதவுகள், பான்ட்றி கபேட் அனுபவம் (2-3 மாத வேலை) 23B, Wandervert Place, Dehiwela.
ஜெய்குமார் - 0777-417237

## Acme Homes



தமிழனுக்கு அழகு செந்தமிழ்., செந்தமிழுக்கு அழகு யாழ்.மண், யாழ். மண்ணுக்கு அழகு சேர்க்க
புதியதோர் "அழகு யாழின்"
உதயத்திற்காக
இப்பொழுது யாழில் "Acme Homes"

தென்னிலங்கையில் வீடு நிர்மாணத் துறையில் புதிய புரட்சி படைத்த "Acme Homes" புதிய Europe & Middle East Country House designs உடன் நவீன தொழில்நுட்பத்துடன் (Modern) வாஸ்து சாஸ்திரத்துடன் கட்டித்தர உத்தரவாதத்துடன் உங்கள் அருகில் "யாழினது அடுத்த கட்ட பரிமானத்துக்கு "Acme Homes"

- Homes & Building Construction
- Charted Architectural Drawing
- Arranging Bank loans
- Stage Payments

Jaffna Branch
Director: S.T.Subakaran
நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P:0779943113, 0723003000
Email: tkaran 023 @gmail.Com.

Colombo Branch
Director: Indika Muthunayaka
No.551/7/2 Kandy Road,
Ranmutugala, Kadawatha
T.P:0112969444
Email: acmehomes @ sltnet.lk
(Reg . No.WR 8949)

ACME (10083)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் பிரதான வீதியில் 10 Perch காணி உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
Rc...
தொடர்பு
0777 792558 / 077 8435975

## வாகனம் விற்பனைக்கு

yamaha FZR 250 RR, Jc - 6470 (CBE Model) 1998 Japan Racing Bike. Kokuvil, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0776511299, 0726111527

## சேவை

பணத்தினை கொடுத்து ஏமாறாதீர்கள் !
கவலை வேண்டாம் IELTS தேவையில்லை...!

UK Jan, Feb கான மாணவ அனுமதிகள் இப்போது பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளுக்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்வோம்.

- Student Visa
- Visit Visa
- Tourist Visa
- Business Visa
- Dependent Visa
- Settlement Visa
- Special for Refused Visas

ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம். அனுபவமுள்ள ஆலோசகர்கள், சட்டத்தரணிகளால் ஆலோசனைகள் வழங்கப்படும். மாணவர்கள் இயலுமானவரை பெற்றோர்களுடன் வாருங்கள்.

முற்றிலும் சேவை நோக்கமே...!

**Worldwide Educational Consultants**
# 527, Galle Road, Colombo - 06. Sri Lanka
Mobile : 0771 953 366 / 0778 526 178 Tel : 0112 361 951

## SRM University

Your future in reliable hands!

**Admissions!**
அனுமதிகள்!

Meet counsellors in Jaffna by appointment
முன்னேற்பாடு மூலம் யாழ்ப்பாணத்தில் ஆலோசகர்களை சந்திக்கவும்

Date : 7th & 8th, November 2011
Place: Thilko Hotel

Hotline
077 2885684

Do not miss this opportunity! வாய்ப்பை தவற விட வேண்டாம்

SRM Lanka (Pvt) Ltd.,
No:329, 1sr Floor, Galle Road, Colombo 05.
Tel : 011 2592323 Fax : 2592324
E-mail : info@srmlanka.com



## UK EDUCATION FAIR

Organized by LOHOS GROUP

[Universities participating in the UK fair]

| | |
|---|---|
| University of East London www.uel.ac.uk | University of Bedfordshire www.beds.ac.uk |
| Anglia Ruskin University www.anglia.ac.uk | University of West London www.uwl.ac.uk |
| Glyndwr University www.glyndwr.ac.uk | University of Wales, Newport www.newport.ac.uk |
| University of Worcester www.worc.ac.uk | |

SPOT ADMISSIONS FOR JANUARY AND SEPTEMBER 2012 INTAKES
POSTGRADUATE AND UNDERGRADUATE COURSES
MBA, Architecture, Civil, Electrical, Electronic Engineering, Computing, Bio Medical Sciences, Pharmacology, Nursing, Social Sciences, Business Management, Media, Art, Education , Research and PhD.
SCHOLARSHIPS AVAILABLE

DATE: Monday 21st November 2011
VENUE:GALLE FACE HOTEL - LOTUS "A" ROOM
TIME: 11.00AM TO 7.00PM

CONTACT : MR.LOHO - Lohos Group
Mobile:0777 917929 / Office 011-2577768
தமிழில் தொடர்புகளுக்கு : Dr.இந்திராணி - Tel: 0773498660
Email: lohosgroup@sltnet.lk Website: www.lohosgroup.com
Please visit the Fair with your original certificates and a set of photocopies
ENTRANCE FREE

## உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...



சர்வதேச அங்கீகாரம் பெற்ற
**Engineering** Qualifications

City & Guilds

- Civil Engineering
- Quantity Surveying
- Electrical & Electronics
- Motor Vehicle
- Mechanical

### City & Guilds Progression Path

- Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
- Professional Engineer (Equivalent to BEng-UK)
- Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
- NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
- A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
- O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

TVEC Reg. no.: P01/0414

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

அனுமதிகள் ஆரம்பம் !

### BENEFITS

- வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான தேவைப்படும் அதிகூடிய தகமையுள்ள சான்றிதழ்.
- ஆஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ளக் கூடிய விசேட தகமைகள்.
- விரைவாகவும், மிகக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யக் கூடிய சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்.
- உங்களுடைய பொறியியல் பட்டப்படிப்பை இலங்கை அல்லது இங்கிலாந்தில் பூர்த்தி செய்யக் கூடிய வாய்ப்பு.
- IIESL நிறுவனத்தின் அங்கத்துவத்தை பெறக்கூடிய வாய்ப்பு

0214 66 66 99
0771 06 73 94

SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

SIPL JOB NETWORK LEARNING PLUS WORK PLACE LEARNING SCOT

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் அனைத்து வீதிகளையும் புனரமைக்க 28,055 மில்லியன் ரூபா

## யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தகவல்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ். மாவட்டத்தின் முழுமையான வீதி வலையமைப்புக்களின் புனரமைப்புக்கு 28 ஆயிரத்து 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கேட்டபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வீதி அபிவிருத்தித் திட்ட வேலைகள் நீண்ட கால நோக்கில் இடம்பெற்று வருகின்றன. இதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் 27 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு 25 ஆயிரத்து 275 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு 22 வேலைத் திட்டங்களுக்கு ஆயிரத்து 575 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாநகர சபை வீதிகளின் புனரமைப்புக்காக 90 வேலைத் திட்டங்களுக்கு 67.68 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தினூடாக அதன் கீழுள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கு 381 வேலைத் திட்டங்களுக்கு ஆயிரத்து 136 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 520 வேலைத் திட்டங்களுக்கு 28 ஆயிரத்து 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் நீண்ட கால வேலைத் திட்டங்களும் உள்ளடங்குகின்றன.- என்றார். (த- 15)

# குடாநாட்டில் பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்ற மறுக்கும் வைத்தியர்கள்

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.குடாநாட்டில் பின்தங்கிய பகுதிகளில் வைத்தியர்கள் கடமையில் ஈடுபடப் பின்னடிப்பதாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மருதங்கேணி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெடுந்தீவு, புங்குடுதீவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் வைத்தியர்கள் சேவை செய்ய பின்னடிக்கின்றனர். இதனாலேயே சுகாதாரத் துறையில் வெற்றிடங்கள் ஏற்படுகின்றன.

கடந்த முறை 63 வைத்தியர்கள் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளவில்லை. அடுத்த முறை வருகின்ற 200 பேரையாவது இணைத்துக் கொள்ளச் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ம- 319)

# ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுவது போல் அதிபர், உப அதிபர்களுக்கு மாற்றம் தேவை

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.6

பாடசாலையில் 7 வருடம் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது போல் அதிபர்கள்,உப அதிபர்கள்,பதில் அதிபர்கள் ஆகியோருக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமாகாணத்தில் 5 வருடங்கள் சேவையாற்றிய பிரதேச செயலர்கள், வங்கி முகாமையாளர்கள்,தபால் அதிபர்கள் உள்ளிட்ட பல அரச அதிகாரிகளுக்கு வட மாகாணத்தில் இடம்பெற்ற யுத்த சூழ் நிலைகளிலும் இடமாற்றம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கல்வி சார்ந்த இடங்களில் மட்டும் இடமாற்றம் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாகக் கல்வி அதிகாரிகள் கவனம் அற்று இருப்பது வேதனைக்குரிய செயலாகும்.

இதனால் சில பாடசாலைகளில் அதிபர்கள்,உப அதிபர்கள், பதில் அதிபர்கள் 7 வருடங்கள் கடந்த நிலையிலும் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையிலேயே கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக சேவை வழங்கும் அதிபர்கள் , உப அதிபர்கள்,பிரதி அதிபர்கள் போன்றோருக்கு இடமாற்றம் வழங்கப்படாததால் ஊழல் மோசடிகள் போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு உள்வாங்கப்படுவதற்கு மூல காரணமாக அமைந்துள்ளது.

பாடசாலைகளில் இடம்பெறும் திறனற்ற நிர்வாக அமைப்பு, ஊழல் மோசடி என்பவற்றை முற்றாக ஒழிப்பதற்கு இடமாற்றங்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்எனவும்இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-313)

# செம்மணி நீரேரியில் மீன்பிடி



தற்போது பெய்து வரும் கடும் மழையை அடுத்து ஏ-9 வீதியின் செம்மணி நீரேரியில் பெருமளவு மீன்கள் சிறுவலை கொண்டு மீனவர்களால் பிடிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த நீரேரியில் தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழையால் நீர் நிறைந்துள்ளதையடுத்து அங்கு பரவலாகத் திரளி, முரல் உள்ளிட்ட சிறு மீன்கள் தென்படுகின்றன.

இதனையடுத்து வீச்சு வலை மூலம் பெருமளவு மீன்கள் மீனவர்களால் பிடிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை வாங்குவதற்காக தூர இடங்களில் இருந்து பலரும் மிக ஆர்வத்துடன் அந்தப் பகுதிக்கு வருகின்றனர்.

இந்த மீன்களைத் தென்பகுதியைச் சேர்ந்த பலரும் விரும்பி வாங்கிச் செல்வதாகவும் இதனால் இம் மீன்களை கூடுதல் விலைக்குத் தற்போது மீனவர்கள் விற்பதாகவும் பொது மகன் ஒருவர் தெரிவித்தார். (த- 288)

# திறந்தபல்கலையில் புதிய கற்கைநெறி

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் முகாமைத்துவப் பட்டக் கற்கை நெறிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜி.சி.ஈ.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்ற அனைவர்களதும் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் ஏதேனும் அடிப்படைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4 வருடங்களை உள்ளடக்கிய இந்த கற்கை நெறிக்கான அனைத்து வகுப்புகளும் யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறும் என்றும் இந்தக் நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை பிறவுண் வீதி, கொக்கு விலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பெற்றுக் கொள்ள லாம் என்றும் யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-323)

# மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில் வடமராட்சி கிழக்கில் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.6

கட்டைக்காடு - இயக்கச்சி வீதி, மணற்காடு - கட்டைக்காடு, மணற்காடு -பொற்பதி வீதி, மணற்காடு - தேவாலய வீதி என்பன மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியில் புனரமைக்கப்படவுள்ளது.

மருதங்கேணி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கே. என் . டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் மணற்காடு பாடசாலையில் காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்விலேயே அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சுகாதாரம், கடற்தொழில், பாதுகாப்பு, காணி, கூட்டுறவுத்துறை சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இதில் கலந்து கொண்ட பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதில் பருத்தித்துறை அழியவளைவீதி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து விடப்பட வேண்டும் என்றும் வெற்றிலைக்கேணி வடக்கு பகுதிகளில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் பொதுமக்கள் தங்கள் காணிகளை சென்று பார்க்க அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயத்தில் தான் கவனமெடுப்பதாகவும், இது தொடர்பாக ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்ட இராணுவ அதிகாரி உறுதியளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், ஈ.பி.டி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரீன், மருதங்கேணி பிரதேச செயலாளர் திருலிங்கநாதன் மற்றும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா, பருத்தித்துறைப்பிரதேச சபைத் தலைவர் கே.சஞ்சீவன் உட்பட அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ம-319)

# அச்சுவேலி - யாழ் மினி பஸ்களில் நிர்ணயமற்ற கட்டணங்கள் அறவீடு

யாழ்ப்பாணம்,நவ.6

அச்சுவேலி - யாழ்ப்பாணம் தனியார் மினிபஸ் கட்டணம் வரையறை இன்றி ஏகபோகமாக அறவிடப்படுவதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி - யாழ் மினிபஸ் சேவையில் கட்டண விகிதம் வரையறை செய்யப்படாமல் நடத்துநர்களின் விருப்பத்துக்கேற்ப அறவிடப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் இருந்து யாழ்.பஸ் நிலையம் நோக்கி பயணம் செய்பவர் களிடம் 50 ரூபாவும் அறவிடப்படுகின்றது. 40 ரூபாவில் இருந்து 50 ரூபா வரை நடத்துநர்களின் தனிப்பட்ட விருப்பத்துக்கு ஏற்ப கட்டணம் அறவிடப்படுகின்றது.

தனியார் மினி பஸ்களின் கட்டண விகிதம் எதுவும் பகிரங்கப்படுத்தப்பட்டுப் பஸ்களில் ஒட்டப்படவில்லை. பயணிகளுக்கும் பயணச்சீட்டும் வழங்கப்படுவதில்லை. கட்டண அறவீடு ஏற்றத்தாழ்வு பற்றிக் கேள்வி கேட்கும் பயணிகள் மீது நடத்துநர் அடிக்காத குறையாகப் பேசுவதோடு கேலி செய்யும் வகையில் நடந்து கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

எரிபொருள் விலை அதிகரிப்பைச் சாட்டாக வைத்து தான்தோன்றித் தனமாகக் கட்டண அறவீடு செய்வது தொடர்பாக பலர் முறைப்பாடு செய்த போதிலும் பயணிகளுக்குச் சாதகமான முறையில் ஏற்பாடுகள் எதுவும் செய்யப் படவில்லை எனப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அச்சுவேலி - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் இடையே மினிபஸ்களில் பயணச் சீட்டு வழங்கப்பட்டு வருவதாக அச்சுவேலி தனியார் சிற்றூர்தி சங்கத்தின் தலைவர் கோ.ரஞ்சன் தெரிவித்தார்.

தனியார் பஸ்களில் கட்டணம் சில சந்தர்ப்பங்களில் கூட வாகவும் குறைவாகவும் அறவிடப்படுவதாகத் கிடைத்த முறைப்பாடு தொடர்பாக அவரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அச்சுவேலி - யாழ்ப்பாணம் இடையே சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் வரை 36 ரூபா அறவிடப்பட வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

டீசல் விலை கூடியுள்ள போதிலும் இக் கட்டண விவரத்தில் எந்தவிதமான மாற்றமும் செய்யப் படவில்லை. அனைத்து மினி பஸ் நடத்துநர்களுக்கும் பயணச் சீட்டு புத்தகம் வழங்கப்பட்டுள்ளது.

நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்க மறுத்தல் அது தொடர்பாகப் பயணிகள் யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்திச் சங்கக் அலுவலகத்தில் முறையிடலாம்.

ஏற்கனவே அனைத்துப் பயணிகளுக்கும் பயணச்சீட்டு வழங்கப்பட வேண்டும் என அனைத்து சிற்றூர்திச் சங்க உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம் என்றார் அவர். (த-11-319)

உதயன்
06 நவம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

## தென்மராட்சிப் பிரதேச சிறுவர் தின நிகழ்வு

தென்மராட்சி, நவ. 6

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் சிறுவர் தினவிழா கடந்த வெள்ளிக்கிழமை செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி.சிவகரனும் கலந்துகொண்டனர். (ம-207)

## NOTICE



**THANGARASA RAJASRIKANTHAN**
**NIC No: 762381990V**
**CESSATION OF EMPLOYMENT: 31 MARCH 2011**

This is to inform the general public that Mr. Thangarasa Rajasrikanthan of 244/8, G S Road, Kumankulam, Vavuniya, has ceased to be an employee of the International Organization for Migration (IOM) with effect from 31 March, 2011.

Mr. Rajasrikanthan was employed by us in the capacity of Project Assistant (Kilinochchi/ Jaffna) from 02 March, 2010 to 31 March, 2011.

IOM shall not be responsible for any transactions, and/or any matters affected and/or entered upon by the above-mentioned person on behalf of the Organization from the date of cessation of employment.

**International Organization for Migration**
**24, Police Park Avenue,**
**Colombo 05**

## மரண அறிவித்தல்கள்

### மருதப்பு சிவசுப்பிரமணியம் (M.S.மணியம்)



புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட மருதப்பு சிவசுப்பிரமணியம் 03.11.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வசந்தராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மருதப்பு மற்றும்பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரைச்சாமி மற் றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மரு மகனும் சிவப்பிரியா (கனடா), சுதாகர் (கனடா), சந்திரதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரேமரூபன், சாதனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரணவன், நர்மதா, கல்கி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், குணபாலன், நித்தியகல்யாணி (பிரான்ஸ்), றஞ்சினி (ஜேர்மனி), காலஞ் சென்ற யமுனா, லலிதா (யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் ஹேமா, சிவகுமார் (ஜேர்மனி), குலேந்திரன், சற்குணராஜா ஆகியோரின் மைத்துனரும் ஜான்சிராணி (ஜேர் மனி), இந்திராணி (ஜேர்மனி), பாலகிருஸ்ணன் (ஜேர்மனி), ராதாகிருஸ்ணன், ஆனந்தகிருஸ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் குணபாலசிங்கம் (ஜேர்மனி), சிவநாதன் (ஜேர்மனி), ரஜனி (ஜேர்மனி), நிரோசினி (ஜேர்மனி) ஆகியோ ரின் சகலனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை அஞ் சலிக்காக வைக்கப்பட்டு நாளை (07.11.2011) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கல்கிசை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
16,1/1, முதலாம் சப்பல் லேன், வெள்ளவத்தை. **குடும்பத்தினர்.**

### துரையப்பா வரதராஜா



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா வரதராஜா 04.11.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அரியமணி தம்பதியரின் அன்பு மகனும் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் துஸ்யந்தனின் அன்புத் தந்தையும் தர்ஷனாவின் அன்பு மாமனும் டெவன், டறன் ஆகியோரின் அன்புப் பேரனும் மற்றும் ஞானரஞ்சிதம் (கனடா), காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் தியாகராஜா, அருந்தவராணி (தவம்), தவராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மகேந்திரா, Dr. இந்திராணி (UK), மகாராணி (கொழும்பு), தெய்வேந்திரா (கொழும்பு), ஞானேந்திரா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்து னருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இலங்கைத் திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (10113)
தகவல்:
மனைவி, மகன்.

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட முதற்தர (ஒருநாள், ஒருகிழமை, மூன்றுகிழமை ஒருமாதம்) ஊர்க் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை ரூபா 75/- இல் இருந்து தொடர்பு: 021 7200616

### மணமகள் தேவை

யாழ்.R.C.கௌரவமான குடும்பப் பெற்றோர் தற்போது கொழும்பில் வசிக்கும் சொந்தத் தொழில் புரியும் மகனுக்கு, கௌரவமான குடும்பத்தில் 36 வயதுக்குக் கீழ் மணமகள் தேடுகின்றனர். சீதனம் தடையில்லை.
தொடர்புகளுக்கு:- 0786169637 / 0728791991 (10084)

### வாடகைக்கு வீடு தேவை

அரச தொழில் புரியும் கௌரவமான 4 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்குச் சகல வசதிகளும் உள்ள வீடு ஒன்று யாழ்.மாநகரசபை எல்லைக்குள் உடனடியாக வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:- 0773295401,0776276590 (10073)

### அருள்முருகன் திருமண சேவை

உங்கள் பிள்ளைகளது தகுதிகள், பதவிகள், எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப Doctors, Engineers, Teachers, Lecturers, Accountants அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், வெளிநாடு மணமக்கள் தேவைக்குத் தொடர்பு: 0718475114, இல.03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், பலாலி வீதி, யாழ்ப்பாணம். (10088)

### ஸ்கூட்டர் விற்பனைக்கு

LML செலக்ற் II, JB xxxx தொடர் இலக்க நல்ல நிலையிலுள்ள ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773949671 (10044)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாய் ஆனைக்கோட்டை பிரதான வீதிக்கு அருகில் 2 பரப்புக் காணியில் நவீன வசதிகளுடன் கூடிய 2 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
(சூழாவடி முகாமுக்கு அருகில்).
தொடர்பு : நாயகபாலன் ஸ்ரோர்ஸ். மானிப்பாய். 0777475166. கொழும்பு : 0718569962

### காணிகள் விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் வன்னியசிங்கம் வீதி முடிவில் 6 பரப்பு தோட்டக் காணியும் இராஜ வீதியில் கிறசர் உள்ள இடம் கழிந்து வரும் இராமநாதன் கலட்டிக்குச் செல்லும் வீதியில் 10 பரப்புத் தோட்டக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0750468493 (10106)
தயவு செய்து மாலை 7 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.

### விற்பனைக்கு

56 அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் மேல் மாடி வீடு மற்றும் கச்சாய் வெளி பிள்ளையார் கோயில் அருகில் 6 ஏக்கர் தென்னங்காணி மற்றும் புலோப்பளை பிரதான வீதிக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
(10111) 0779592051

### மணமகன் தேவை

யாழ்.இந்து 1976 சுவாதி, உயரம் 5'5", பாவம் 44 ¾ லக்கினத்தில் செவ்வாய், 2 இல் ராகு Computer Programme படித்து கனடாவில் Regulatory Analysist ஆகவேலை செய்யும் PR மணமகளுக்கு Srilanka, UK, Canada போன்ற நாடுகளில் பட்டதாரி மணமகனைத் தேடுகின்றனர். PR இல்லாத பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். இம்மாத இறுதியில் வரவுள்ளார். இவருக்குக் கடனாவில் சொந்த வீடு உள்ளது.
சாயிநாதன் திருமணசேவை,
இல.27, பெர்னான்டோ றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
T.P: 011 2364146, Fax: 011 2363436.
Email : nathan_met@hotmail.com. (சி/5924)

### வேலையாள்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிறுக்கு கீழ்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிட வசதி மாதாந்தம் சம்பளம் இவை அனைத்தும் ஒரே கூரையின் கீழ்

1. றொட்டி போடுபவர்கள்
2. அரையல்காரர்
3. சமையல் வேலை
4. பில் கிளாக்
5. காசாளர்
6. சுத்திகரிப்பாளர்
7. பாதுகாப்பு ஊழியர்
8. சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்)

ஏனைய உதவி வேலைகளுக்கும்

தொடர்பு: 0777917753

### காணி விற்பனைக்கு

புத்தூர், நவக்கிரி இராசவீதியில் எல்லா ளன் வீதியில் இருந்து 200 யார் தூரத்தில் பத்துப்பரப்பு தோட்டம் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0773264571 (சி/5639)

### முதல்முறையாக வவுனியா நகரில் அறிவிப்பாளர் பயிற்சி...

ஊடகத்துறையில் பிரவேசிக்கக் காத்திருக்கும் நண்பர்களே!O/L உயர்தரம் படித்துவிட்டு வீட்டில் இருக்கும் மாணவர்களே! வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தொகுப்பாளராக தயாரிப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா?

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம் — ஆரம்பம்: 12.11.2011

* நிகழ்ச்சித் தொகுப்பு * நிகழ்ச்சி தயாரிப்பு வானொலி/தொலைக்காட்சி
* விளம்பரம் தயாரித்தல் * செய்தி வாசிப்பு * செய்தித் தொகுப்பு

போன்றவற்றில் மற்றும் தொலைக்காட்சியில் நன்கு தேர்ச்சி பெற்ற ஒலி ஒளிபரப்பாளர்களால் விரிவுரை நடத்தப்படுவதோடு ஒலிபரப்பு கருவிகள் மூலம் பயிற்சிகளும் வழங்கப்படும். பயிற்சி நெறியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். இருபாலாருக்குமான பாடநெறி. சனி மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்.
பதிவுகளுக்கு முந்துங்கள்

***Sun British Business Management College***
No.26, Appolo Hospital, Upstair Building,
Station Road, Vavuniya.T.P: 075-0445070, 077-0584658, 024 5672929

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் ***அருணாசலம் நடராஜா***



எமது பாடசாலை ஆசிரியர்
திரு.ந.சிறீதரன்
அவர்களின் அன்புத்தந்தை
அருணாசலம் நடராஜா
அவர்களின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 24.11.1937 விண்ணில் 06.10.2011

தொ.பே.இல.0770538938

அதிபர், ஆசிரியர்கள்,
கிளி/ பாரதி வித்தியாலயம்.

### கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி சுன்னாகம்
கிளையில் கடமைபுரியும்
செல்வி ரேகாவின்
பாசமிகு தந்தை
**நன்னித்தம்பி அரசரத்தினம்**
அவர்களின் மறைவையொட்டி
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் பிரிவால்
துயருறும் அனைவருடனும் சுன்னாகம் இலங்கை வங்கி சமூகமும் இணைந்து கொள்கிறது. அன்னாரது ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி, சுன்னாகம்.
முகாமையாளரும், பணியாளர்களும்.

### ஓராண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி லக்ஸ்மன்**
[லச்சா]
திதி:06.11.2011

மலர்வு
05★12★1984

உதிர்வு
16★11★2010

ஓடும் வருடம் ஒன்று ஆனதே - உம்மை
தேடிடும் கண்களில் சுண்டும் நீர்த்துளிகள்
வாடிய மனங்களில் அழியா உம் உருவம்
சுமக்கின்றோம் நாம் நீர் சுமந்த கனவுகளை
என்றும் மீளாத்துயருடன்


அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

44/9, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (10115)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் எந்த நாடும் எதிர்க்கவில்லை

## அடித்துக் கூறுகிறார் வெளியுறவு அமைச்சர்



பொது நலவாய நாடுகளின் தலை வர்கள் மகாநாடு 2013 ஆம் ஆண்டு இலங் கையில் நடை பெறுமானால் அதில் கலந்துகொள்ளப் போவதில்லை யென்று சில நாடுகள் தெரிவித்துள்ளன வல்லவா? இதுபற்றி வெளிநாட்ட மைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கேட்டபோது, இது முற்றிலும் மாறுபாடான ஒருவிட யம் பகிஷ்கரிப்பு என்பது ஒன்று, மாநாடு நடைபெறும் இடத்தை ஆட் சேபிப்பது என்பது வேறொன்று என்று கூறினார் அமைச்சர்

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை யொன்றுக்கு அவர் அளித்துள்ள நேர் காணலில் தெரிவித்துள்ளதாவது:

மகாநாடு நடைபெறும் இடத்தை கனடாவோ வேறு எந்த நாடுமோ ஆட்சேபிக்கவில்லை. உத்தியோகபூர்வ கூட்டத்தில் இலங்கையில் மாநாட்டை நடத்துவது என்பது மீளவும் உறுதி செய்யப்பட்டது.

நிகழ்சி நிரலின் இறுதி நடவடிக் கையாக ஆஸ்திரேலிய பிரதம மந்திரி ஜூலியா கில்லார்ட் இலங்கை ஜனாதிபதியை நிகழ்ச்சிகளை முடித்து வைக்கும் வகையில் அடுத்த மாநாட் டுக்கு உறுப்பினர்களை இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுக்கும்படி கேட் டுக்கொண்டார். எனவே கூட்டம் நடை பெறவிருக்கும் இடம் ஏகமனதாக ஏற் றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளி வாகின்றது.

கனேடிய பிரதமர் ஹார்ப்பர் இலங் கைக்கு வரமாட்டார் என்று சாதாரண மாகவே தெரிவித்தார். இலங்கையில் நடத்தப்படக் கூடாது என்றோ, கனடா பங்குபற்றாது அல்லது அதன் பிரதி நிதிகள் எவரும் கலந்துகொள்ளமாட் டார்கள் என்றோ அவர் தெரிவிக்க வில்லை. அவர் வரமாட்டார் என்றால் அது முழுமையும் அவரது சொந்த விட யம்.

பொதுநலவாயத் தலைவர்கள் மகா நாடானது இந்த நாட்டுக்கு கேள்விக்கு இடமில்லாத மாபெரும் வெற்றி என் பதை எவருமே மறுக்க முடியாது. முத லாவதாக எமக்கு எதிரான வழக்கு ஆகும். அதுவும் ஆரம்பிப்பதற்கு முன் னரே முறியடிக்கப்பட்டு விட்டது. தனிப் பட்ட ஒரு தரப்பினரால் முறைப் பாடு ஒன்று பதிவு செய்யப்பட் டிருந்தது.

அந்த நபர் புலி அனு தாபி என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டி ருந்தார்.

ஆஸ்திரேலிய அரசுக்கு நாங்கள் முறைபாடு செய்தோம். சட்ட மா அதி பருக்கும் பிரதமருக்கும் தெரிவித்தோம் இந்த வழக்கு முன்னெடுக்கப்பட முடி யாது என்று இருவரும் கூறிவிட்டார்கள் எனவே அது ஆரம்பிக்கு முன்னரே மரணமாகி விட் டது.

இரண்டாவதாக அடுத்த மாநாடு நடைபெறும் இடம்பற்றி எவருமே கேள்வி எழுப்பவில்லை. இது எமக்குக் கிடைத்த ஒரு ராஜதந்திர வெற்றியாகும். மூன்றாவதாக இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினையை நிகழ்ச்சி நிர லில் சேர்த்துவிட கனடா மேற்கொண்ட முயற்சி அதன் முளையிலேயே கிள்ளப் பட்டுவிட்டது.

நாங்கள் மாநாட்டுச் செயற்பாடுகள் அரசியலாக்கப் படலாகாது என்று ஆட் சேபித்தோம். அதன் பிறகு ஒன்றன் பின் ஒன்றாகப் பதி னைந்து நாடு களின் பிரதி நிதிகள் இதை ஆதாரித்து உரை நிகழ்த்தினார்கள்.



ஆஸ்திரேலியப் பிரதமர்

இது ஓர் உணர்ச்சி மயமான அனுபவமா கும்.

### பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்த கருத்து

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்வதேச புல னாய்வு எதையும் வற் புறுத்தவில்லை.

இலங்கை மீது புலன் விசா ரணை நடத் தப்படவேண்டும் என்றும் அதற்கு ஆதர வளிக்கும் படியும் சில மாதங்களுக்கு முன் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கோரிக்கை விடுத் திருந்தார்.

ஆனால் புலனாய்வு என்ற சொல்லை கமரோன் பயன்படுத்தவில்லை. சுதந் திரமான, நம்பகத்தன்மையுள்ள விசா ரணை நடத்தப்பட வேண்டும் என்றே அவர் கூறியிருந்தார்.

சர்வதேச புலன் விசாரணை என்பதை அவர் வேண்டுமென்றே பயன்படுத்த வில்லை.

நல்லிணக்க குழுவினால் நம்பக மான, சுதந்திரமான விசாரணைகள் நடை பெற்று வருகின்றன என்பதே இலங்கை யின் நிலைப் பாடாகும்.

'நல்லி ணக்கக் குழு வி அறிக்கை யானது போது மானதாக இருக்காது என்று எந்த நாடாவது கரு துமானால் அது தவ றாகும். அறிக்கை கிடைப்பதற்கு முன்பே அதனை நிராகரிக்க எவராலும் முடியாது. அறிக்கை பகிரங்கப்படுத்தப் பட்டதின் பின்னர் குறைபாடுகள் காணபடுமானால் குற்றச்சாட்டுகள் கூறப்படலாம் வர வேற்கப்படும். இந்த அறிக் கையை ஐ.நா. மனித உரிமை சபையில் மார்ச் மாதம் விவாதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கக் கனடா முயன்றது. அறிக்கை வெளிவராத நிலையில் நிகழ்ச்சி நிரலில் அதைச்சேர்க்க முடியாது என்று நாம் ஒரு நிலைப்பாட்டைத் தெரிவித் தோம்.

### கூட்டமைப்புடனான பேச்சுக்கள்

தமிழ் தேசியக் கூட் டமைப்பினர் அமெரிக்கா வில் நடத்திய பேச்சுக் கள் தொடர்பாக நாம் ஒன்றும் பீதியடைய வில்லை.

இந்த விடயங்கள் அர சும் இலங்கை மக்களும் சேர்ந்து தீர்க்க வேண்டி யவை. எனவே பீதிய டைய ஒன்றுமில்லை அவர்கள் வேறு நாடுகளுடன் பேச்சு



பிரிட்டன் பிரதமர்

ரம்யன்

நடத்துவதால் பயனில்லை. அவர்கள் பிரச்சினை களை மற்ற நாடுகளுடன் பேசுவதானது இந்த நாட்டில் பொது மக்கள் மத்தியில் கருத்துகள் இறுக்க மாவதற்கே உதவுவதாக அமையும்- என்று அமைச் சர் பீரிஸ் கூறியுள்ளார். ✱

# நட்பு

நட்பு என்பது மூன்று எழுத்து. அது அடைவது என்பது நம் தலை எழுத்து. நட்பு என்பது நம் எல்லோருக்கும் கிடைத்த ஒரு வரம் என்றுதான் சொல்லலாம். அழகைப் பார்த்துப் பழகும் ஒருவரிடம் நட்பை எதிர்பார்க்க முடியாது. ஆனால், நட்பை உயிராக நினைத்துப் பழகும் ஒருவரிடம் அழகா, அழகு இல்லையா என்பதை நாம் பார்க்கக் கூடாது. இப்படி உள்ள ஒருவரிடம் நம் உண்மையான நட்பை எதிர்பார்க்கலாம். ஒரு ரோஜா மரத்தில் ஏராளமான மலர்கள் மலர்ந்திருந்தன. அதில் ஒரு மலரைப் பறிக்கும்போது நமக்கும் அதனுடைய முட்கள் வலிக்கிறது. நாம் பறிக்கும் மலருக்கும் வலிக்கிறது.

ஏனைய மலர்களுக்கும், மரத் துக்கும் வலிக்கிறது. ஆனால் அது எமக்குத் தெரியாது. ஏன் என் றால் அந்த மலரைப் பறிக்கும்போது எங்களுக்கு ஒரு சந்தோஷம். அந்தச் சந்தோஷம் மற்றைய வலிகளைப் பார்க்காது, அதேபோல் தான் நட்பும். நம்கூட இருக்கும்போது நட்பை உணர்ந்து கொள்வ தில்லை. பிரியும்போது வலிக்கும் வலியும், நம் இதயம் துடிக்கும் துடிப்பும் சொல்லித் தெரியாது.

நம் நட்பு பிரியும்போது எமது உயிரே போனது [illegible] நட்பு என்னும் வார்த்தை சிலருக்கு புரிவது இல்லை. அதை மதிக்கவும் தெரியாது. நட்பு நம் எல்லோரிடமும் உயிரிலும் மேலானது. நாம் பெற்றோர்களிடமோ, சகோதரர்களிடமோ, சொந்தங்களிடமோ சொல்ல முடியாத சில விடயங்களை நம் நண்பர்களிடம் தான் சொல்லுவோம்.

எமக்குத் தெரியாதவர்களிடம் பழகும்போது, எங்களுக்கே தெரியாது. அவர்களை எங்களுக்குப் பிடித்துவிடும். நம்முடைய மனதிலும் அவர்களுக்கு ஓர் இடம் வரும். அது இன்பமாக இருந்தாலும் சரி துன்பமாக இருந்தாலும் சரி எங்களுக்கே தெரியாது. எங்கள் எல்லோரிடமும் நட்பு என்னும் புனிதமான உறவு மலர்கிறது. இப்படிப்பட்ட நட்பை சிலர் காதலாகவும் நினைக்கிறார்கள். நட்பை நட்பாகப் பாருங்கள். நட்பையும் காதலையும் ஒரு தராசில் வைத்துப் பார்க்காதீர்கள். நட்புக்கும் காதலுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கும்.

காதலர்களிடம் சொல்ல முடியாத விடயத்தைக்கூட நம் நண்பர்களிடம் தான் சொல்லுவோம். அது தான் நட்பு. நட்பை மதிக்கத் தெரியவில்லை என்றாலும் நட்பு என்னும் வார்த்தையைக் கொச்சைப்படுத்தாது இருக்க வேண்டும். 'கடவுளுக்கே கிடைக்காத உறவு எல்லோருக்கும் கிடைத்த உறவு அது தான் நட்பு.

வாழ்க்கையில் எதை இழந்தாலும் நட்பு என்னும் உறவை இழக்கக்கூடாது. நட்பை நட்பாக மதிக்க வேண்டும். நாம் எல்லோர் மனதிலும் நட்பு என்னும் புனிதமான உறவு மலர வேண்டும்.

ராஜி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆரிய்பு: பத்திரி பந்திக்கு அருகில்)
(C/56456)

## மொரட்டுவை பல்கலைக்கழகத்தின்

வெளிவாரியான தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*University Of Moratuwa - SriLanka*

யாழ். மண்ணில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் **ESOFT.** விண்ணப்பங்களை யாழ். **Esoft** ஊடாக மேற்கொள்ளலாம்.



### HNDIT - ATI

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா பூர்த்தி செய்த மாணவர்கள் பாட விலக்குகளுடன் குறைந்த காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்ப பட்டதாரி ஆவதற்கான வாய்ப்பு.

**முக்கிய திகதிகள்**

விண்ணப்ப இறுதி நாள் : 30-11-2011
பதிலுகளுக்கான இறுதி நாள் : 15-12-2011
தொடக்கம் : ஜனவரி 2012

**முக்கிய அம்சங்கள்**

- 2011 A/L பரீட்சை எழுதியவர்களும் விண்ணப்பிக்கலாம்
- பயிற்சி நெறிக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் எதுவும் இல்லை
- 6 செமஸ்டர்களைக் கொண்ட கல்விசார் பட்டம்

**Esoft Computer Studies**
17/1, Brown Road
Jaffna.
TP: 021-2224142 Hotline: 0773099308

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
புறொயிலர் சுத்தம் செய்தது 470/= மட்டுமே.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (10033)

## கட்டடம் விற்பனைக்கு

சாவகச்சேரி (நவீன சந்தைக்கு முன்பாக) வர்த்தக கட்டடத் தொகுதி 2 பரப்புடன் விற்பனைக்குண்டு. மற்றும் நுணாவில் மேற்கில் 2½ பரப்புக் காணி வீட்டுடன் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்பு: 0776934120
0213201176 (10031)

## கார் விற்பனைக்கு

Toyata Coralla - 141 வெள்ளை No (kk-4xxxx) Brand new 2008 Model (15000 km) விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0750980174 (9942)

## கட்டடம் விற்பனைக்குண்டு

ஆஸ்பத்திரி வீதியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக கட்டடம் ஒன்று விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779854886
0212221252 (சி/5612)

## மணப் பெண் அலங்காரப் பொருள்கள்

மணப் பெண் அலங்காரத்தை மேலும் மெருகூட்டக் கூடிய வகையில் தரமான பொக்கே, சடைநாகம் முதலிய பூவேலைகள், அழகு சாதனப் பொருள்கள் என்பன சுவிஸ், கனடா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பிரபலம் பெற்றவரால் தரமான முறையில் தயாரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777206829, 0112- 448743

## டெலிக்கா வான் விற்பனைக்கு

52-XXXX தொடரிலக்கம் உள்ள 2480 Kg ஏற்றக்கூடிய பஜரோ என்ஜின் பொருத்தப்பட்ட டெலிக்கா வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய
இல.0776156364

## சிங்கப்பூரில் தங்குமிட வசதி

சிங்கப்பூருக்குக் குடும்பமாக விடுமுறையைக் கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும்.
தொடர்புக்கு: 006597514941 லிங்கம்.
www.lingamwedding.com
(9856)

## முக்கிய அறிவித்தல்

எமது பயிற்சி நிலையத்தில் கணினிக் கல்வி மற்றும் ஆங்கிலக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் தங்களின் சான்றிதழ்களை இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்

சேவையை நோக்காகக் கொண்டு இயங்கும் எமது நிலையத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

முகாமையாளர்,
லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
கணினிப் பயிற்சி நிலையம்
தொ.பே:0214925334
27, குமாரசுவாமி வீதி,
கந்தர்மடம். (10034)

## Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்



| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | Rs.13000 |
| Colombo-Tiruchirapally-Colombo | Rs.14500 |
| Colombo-Doha | Rs.22000 |
| Colombo-London | Rs.42500 |
| Colombo-Toronto | Rs.81000 |
| Colombo-Singapore-Colombo | Rs.30500 |
| Colombo-Frankfurt | Rs.50000 |
| Colombo-Milan | Rs.38000 |
| Colombo-Rome | Rs.55500 |
| Colombo-Paris | Rs.50000 |
| Colombo-Zurich | Rs.40000 |

All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance.
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404, 0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm

DANISH REFUGEE COUNCIL

*DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, and emergency relief, assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna and Killinochchi and a liaison office in Colombo.*

## *Finance/Admin Assistant – Killinochchi*

The Finance/Admin Assistant will work as a member of the Killinochchi team under the supervision of the Head of Office. He/she will assist with the HoO in various accounting & administrative functions pertaining to running of sub office.

**The position is based in Killinochchi.**

### Qualifications

- IAB/AAT fully qualified or equivalent with 2-3 years experience in preparing cash books, handling petty cash, routine administrative functions such as leave records, office maintenance etc.,.
- Excellent knowledge of English and MS office.
- Previous NGO experience is a plus.
- Flexibility and enthusiasm.
- Experience in similar job will be an advantage.

### Applicants

- Interested candidates are invited to submit their application (cover letter and CV, along with two non-related referees) electronically to recruitment@drc-lk.org or via hardcopy to Danish Refugee Council, No. 77, 1st Cross Street, Vavuniya in Word or PDF format no later than November 13 2011 indicating your name and the title of the position in the subject line of the e-mail.
- Please note that DRC is not to be held responsible for late transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted.
- Successful applicants should be able to start work on short notice.
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, DRC also strongly encourages applications from women.
- Canvassing in any form will be a disqualification.

DANISH REFUGEE COUNCIL

*DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDPs) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, emergency response, protection, and capacity development; and operates within a strategy based on participation and partnership. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Killinochchi and Mannar and a liaison office in Colombo.*

## *Field Officer – Kilinochchi*

The Officer will work as a member of the Killinochchi Team under the lead ship of Head of Office/Program/Project Manager with a primary role in the assistance of IDPs and host communities, counseling, monitoring and the provision of referrals for individuals and communities

**The location of work will be determined (Killinochchi/Mullaitivu) at the time of the interview**

**Qualifications:**

- University degree in law, social sciences, social work or a related field. Extensive professional experience can be considered in lieu of a university degree.
- Experience in working with communities and individuals
- Knowledge of community mobilization and community development
- Training and facilitation skills
- Familiarity with the administrative structures of Sri Lanka, confidence and ability to liaise with government authorities, UN agencies, NGO's and communities.
- Experience working in the field of community development
- Knowledge of IDP context and that of vulnerable groups
- Excellent oral and written communication skills in English and local languages are essential requirement.
- Very good report writing skills in English.
- Creative problem solving abilities
- Computer skills in MS office.

**Applicants**

- Interested candidates are invited to submit their application (Cover letter and CV, along with two non-related referees) electronically to recruitment@drc-lk.org or via hardcopy to Danish Refugee Council, No 77,1st Cross Street, Vavuniya in word or PDF format no later than November 13, 2011 indicating your name and the title of the position in the subject line of the e-mil.
- Only short listed candidates will be contacted.
- The recruitment process will consist of written tests and interviews to be held in Killinochchi.
- As an equal opportunity employer DRC encourages the application of women and underrepresented communities for the position.
- Canvassing in any form will be a disqualification.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலை, முதிரை உட்பட மரங்கள் கோணாவில் பகுதியில் கடத்தல்

சண்டிலிப்பாய், நவ.6

நூறு வீட்டுத் திட்டத்துக்காகக் கோணாவில் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள காணியிலிருக்கும் பாலை, முதிரை போன்ற பெறுமதியான முதிர்ந்த மரங்களைச் சிலர் சட்டவிரோதமான முறையில் இரவு பகல் என்று பாராமல் வெட்டி வாகனத்தில் ஏற்றிச் செல்கின்றார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

அரசினது 10 லட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கோணாவில் பகுதியில் நூறு வீடுகள் அமைப்பதற்கு கிளிநொச்சி அரச அதிபரால் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குக் காணி வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளதால் அவர்களுக்குரிய வீடுகளை விரைவாக அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணிகள் விரைவாகத் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசம் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருப்பதால் அங்கிருக்கும் முதிர்ந்த பாலை, முதிரை போன்ற பெறுமதியான மரங்களைச் சிலர் இரவு பகலாக வெட்டி வாகனத்தில் ஏற்றிச் செல்கின்றனர். அரசுக்குச் சொந்தமான மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டி ஏற்றிச் செல்வது குறித்துக் கவலையடைந்துள்ள பொதுமக்கள், சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்குத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் 2 லட்சம் ரூபா கடனாகவும் ஒரு லட்சம் ரூபா மானியமாகவும் வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-115)

# துணுக்காய் ஆலங்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம்

துணுக்காய், நவ.6

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆலங்குளம் பகுதியில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைகளின் தொல்லைகளால் மக்கள் பயப் பீதியுடன் உள்ளனர்.

இந்தப் பகுதியில் இடைவிடாது கன மழை பெய்து வருகின்றது. இதனால் இரவு நேரத்தில் காட்டு யானைகள் ஆலங்குளத்திலுள்ள குடிமனைகளுக்குள் உட்புகுந்து வாழை, தென்னை, பலா எனப் பலபயன் தரு மரங்களை அழித்து வருகின்றன.

யானைகள் அண்மையில் கனமழை பெய்தபோது ஆலங்குளம் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த கோவிந்த பிள்ளை என்பவரின் வீட்டில் நடப்பட்டிருந்த வாழை மற்றும் பலா மரங்களைத்துவம்சம் செய்துள்ளன.

மேலும் ஏனைய வான் பயிர்களையும் அழித்து வருகின்றன. கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு அதே யிடத்தைச் சேர்ந்த விஜயராசா என்பவர் யானையால் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே பலியான சம்பவத்தால் மக்கள் பயப் பீதியுடன் காணப்படுகின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் மக்கள் முறையிடும் போது காட்டுத் தீயை ஏற்படுத்தி யானைகளைத் துரத்துமாறு அவர்கள் கூறுவதாக மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-415)

# ஓய்வுபெற்ற பின்னரும் தொடரும் அதிபரின் கல்விப் பணிகள்

முள்ளியவளை, நவ.6

முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள தாமோதரம்பிள்ளை என்பவர் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களைத் தமது சொந்தச் செலவில் வழங்கி வருகின்றார்.

குறிப்பாக புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு ஆங்கில - தமிழ் அகராதி, திருக்குறள் போன்ற பயனுள்ள புத்தகங்களை வழங்கி வருகின்றார்.

மேலும் பாடசாலை பாடசாலையாகச் சென்று புத்தகங்களை வழங்குவதுடன் மாணவர்களை உற்சாகப்படுத்தியும் வருகின்றார்.

தமது ஓய்வூதியத்தில் இருந்து இதற்கென ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை ஒதுக்கி வைக்கின்றார்.

இவர் இந்தச் சேவையைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்வதால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

தமது சேவைக்காலத்தில் அர்ப்பணிப்புடன் கல்விப் பணியாற்றிய இவர் ஓய்வு காலத்திலும் மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்துவதைப் பலரும் பாராட்டி வருகின்றனர். (க-433)

## மழையின் தாண்டவம்...



*வீதிக்கும் இந்தக்கதி: மன்னாரில் பெய்த கடும் மழை காரணமாக வீதியொன்று வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது.* (601)

# உதவி வழங்குவதில் குளறுபடி ஒட்டுசுட்டானில் அதிகாரி கவலை

முல்லைத்தீவு,நவ.6

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொண்டு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், வெளிநாடுகளிலிருந்து உதவி செய்வோர் என்பவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்வுகள் மற்றும் இவர்களால் நடத்தப்படுகின்ற கூட்டங்களுக்கு உதவி அரச அதிபர், கிராம சேவை அலுவலர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லையென அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவிகள் வரவேற்கப்படுகின்றன. ஆனால் அவை உரியவர்களைச் சென்றடைய வேண்டும். உண்மையில் பாதிக்கப்பட்டவர்களே உதவிகளைப் பெறவேண்டும். இதுவே இங்குள்ள மக்களின் விருப்பமாகும். (க-500)

# ஊரியானில் கசிப்பு உற்பத்தி; தடுத்து நிறுத்த எவருமில்லை

கிளிநொச்சி, நவ.6

கிளிநொச்சி, ஊரியான் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லையெனப் பல்வேறு தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரியான் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்படும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவை கடந்த இரண்டு ஆண்டுகளாக என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் இந்தப்பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபடும் குறிப்பிட்ட சில வீடுகளில் புதிய புதிய நபர்கள் வேறு இடங்களில் இருந்து வந்து தங்கிவிட்டுப் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு விட்டுத் தப்பிச் செல்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நால்வர் கொண்ட குழுவினர் கால்நடைகளைக் கடத்த முற்பட்டபோது அந்தப் பிரதேசவாசி ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் இருக்கும் குறிப்பிட்ட சில வீடுகளில் தொடர்ச்சியாகக் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதும் விற்பனை செய்யப்படுவதும் அந்தப் பகுதி பொது அமைப்புக்களுக்கும் கிராம அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும்.

ஆனால், எவரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில்லை. அத்துடன் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருபவர்களும் அந்த வீடுகளுக்குச் சென்று கசிப்பை வாங்கி வருகின்றனர். இதனால் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# பஸ்தரிப்பிடம் இல்லாமையால் மல்லாவியில் பயணிகள் பரிதவிப்பு

மல்லாவி, நவ.6

மல்லாவி நகரில் பஸ் தரிப்பிடமொன்று அமைக்கப் படாததால் பிரயாணிகள் பெரும் அவலங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

முன்னர் மல்லாவி நகரில் தற்காலிகமாக அமைக்கப் பட்டிருந்தபஸ்தரிப்பிடத்தைஇப்போது காணோம். ஆனால் பிரயாணிகள் இந்த இடத்தில் நின்றே தமது பயணங்களைத் தொடர்கின்றனர். யாழ்ப்பாணம், வவுனியா, நட்டாங்கண்டல் போன்ற இடங்களுக்குச் செல்வோர். இந்த இடத்தில் மணிக் கணக்கில் கால் கடுக்கக் காத்து நிற்கின்றனர். அத்துடன் வெயிலில் காய்ந் தும் மழையில் நனைந்தும் அல்லல்களுக்கு ஆளாகி வருகின்ற னர்.

மேலும் மக்கள் பலர் கூடும் இந்த இடத்தில் பிரயாணிகள் தமது சிறு இயற்கை உபாதைகளைக் கூடப் போக்குவதற்கு வசதி எதுவும் அமைத்து வழங் கப்படவில்லை. இதனால் பயணிகள் கடைகளுக்குப் பின்னாலுள்ள மறைவிடங்களையும் மர ஒதுக்குகளையும் நாடிச் செல் வதைக் காண முடிகின்றது. இதில் பெண்களின் நிலைதான் மிக வும் பரிதாபகரமான நிலையில் உள்ளது.

அத்துடன் இந்த இடம் தற்போது சுகாதாரச் சீர்கேடுகளால் நிறைந்து காணப்படுகின்றது. பருவ மழை ஆரம்பித்துள்ளதால் நிலைமை மிகவும் மோசமாக மாறியுள்ளது. உரிய தரப்பினர் இந்த விடயத் தில் கூடிய கவனமெடுத்து பொது மலசல கூடத்துடன் இணைந்த பஸ்தரிப்பிடமொன்றை மல்லாவி நகரில் அமைக்க வேண்டுமென்பதே இங்குள்ள அனைவரதும் வேண்டுகோளாகும். (க-425)

# முல்லைத்தீவு பனங்காமத்தில் முன்பள்ளி திறந்து வைப்பு

துணுக்காய், நவ.6

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பனங்காமம் கிராமத்தில் முன்பள்ளியொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன் இந்த முன்பள்ளியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வுக்குப் பனங்காமம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமை வகித்தார்.

அந்தப் பகுதிக்கான இராணுவத் தளபதி இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பனங்காமம் கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து இரு வருடங்கள் ஆகின்ற போதிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இங்கு வாழும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் சிறார்களின் ஆரம்பக் கல்விக்கென மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 9 லட்சத்து 38 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் இந்த முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 50 இற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். (க-415)

# வங்கிச் சேவை

முல்லைத்தீவு, நவ.6

ஒட்டுசுட்டானில் இயங்கி வரும் இலங்கை வங்கிக் கிளையின் சில செயற்பாடுகளில் குறைகள் உள்ளதால் வாடிக்கையாளர்கள் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வங்கி நேரத்துடனே மூடப்படுவதால் தூர இடங்களில் இருந்து வரும் வாடிக்கையாளர்கள் பண பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வங்கியை முழு நேரமும் திறந்து வைத்து மக்களுக்குச் சேவையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-எ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கந்தசாமி



யாழ்.வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரைகந்தசாமி கடந்த(03.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24,யாழ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(10110)

# 41 ஆம் நாள் நீங்காத நினைவலைகளுடன்...



## அமரர் துரைராஜா சுகுமாரன்

கிராமசேவையாளர் - குமரபுரம்
உதவி அரசாங்க அதிபர் பிரிவு - கண்டாவளை

திரும்பும் திசையெங்கும் புன்னகையால் கதை பேசியவனே!
காலம் முடியுமுன்பே காலனிடம் சென்றவனே!
மூன்று தசாப்தமாய் சேவைகள் பல புரிந்து
மக்களின் மனங்களை கவர்ந்த சுகுமாரனே!
இம்மண்ணின் மைந்தனாய், மாசற்ற கிராம சேவையாளனாய்
மகத்தான சேவைகள் பல செய்து - இன்று
விண்ணில் இறைவன் தாழ் வீற்றிருக்கும் - உன்
ஆத்ம சாந்திக்காய் நாம் வேண்டுகின்றோம் இறைவனை...

ஊழியர் நலன்புரி சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
கண்டாவளை.

உதவி அரச அதிபரும்,
உத்தியோகத்தர்களும்.

# காணி விற்பனை

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலின் வடக்குப் பக்கத்தில் 2 ஆவது காணியில் 3 அறைகளுடனும், 2 ஹோல்களுடனும், மேலும் வீட்டைப் பெரிதாக்கும் நோக்குடன் கூடிய 2 அறைகளும், ஒரு ஹோலும், 2 கழிவறைகள், குளியலறை, சமையலறை முதலிய வசதிகளுடன் நன்கு திருத் தியமைக்கப்பட்ட வீடும் 4 பரப்புக்காணியும் விற் பனைக் குண்டு.

தொடர்பு: 0772197194

## தவறிவிட்டது

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த A.R. நவாஸ் என்பவருடைய தேசிய அடை யாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன நுணாவில் சந்திக்கும் (190க்கும்) சாவகச்சேரிக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 0213201176 0776934120 (10037)

# தவறிவிட்டது

இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த இராசேந்திரன் ரவிசங்கர் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (863621623V) மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், வங்கி கடன் அட்டை என்பன தவறிவிட்டப்பட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்). தொடர்பு: 0770453511

# காணி விற்பனைக்கு

மீசாலை மாவடி பிள்ளையார் கோயிலுக்கு முன் பக்கத்தில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0772444165

(10070)

## மணல், சல்லி வழங்குநர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டடக் கட்டுமானப்பணி நிறுவனம் ஒன்றுக்குப் பின்வரும் நிரந்தர வழங்குநர்களை எதிர்பார்க்கின்றோம்.

மணல்
சல்லி (கருங்கல்) 3/4 ''
தொடர்பு கொள்ள: 021 222 4840

(சி/5827)

# பணியாள்கள் தேவை

கீழ்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

I. சிட்டை எழுதுநர்
II.சேல்ஸ்மன்

2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
இல.344, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 0777768835.

(10042)

# சாயிநாதன் திருமண சேவை

எங்களிடம் பலதரப்பட்ட ஜாதிகளின் ஜாதக குறிப்புகளும், அத்துடன் கனடா, லண்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மன், அரபு நாடுகளில் தொழில் புரிபவரின் ஜாதகங்களும் உள்நாட்டில் அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரிபவர்களின் ஜாதகக் குறிப்புக்கள் உண்டு. றோமன் கத்தோலிக்க குறிப்புகளும் அத்துடன் விவாகரத்தான ஆண், பெண் இருபாலாரினதும் குறிப்புக்களும் உண்டு. நீங்கள் எங்களுடன் நேரடியாகவும் Fax,E- mail, Letter மூலம் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: *சாயிநாதன் திருமணசேவை*
இல.27, பெர்ணான்டோ வீதி, வெள்ளவத்தை, கொழும்பு -6
T.P: 0112364146, Fax - 0112363436
E- mail - nathan _met @ hotmail. Com.

(சி/5925)

முதல் முறையாக யாழ்.மண்ணில் New Anu Beauty Clinic மாபெரும் வருட இறுதி ஒரு நாள் அழகுக் கலை பயிற்சி கருத்தரங்கு

## அறிமுகப் பயிற்சி கருத்தரங்கு

காலம்: 06.11.2011 9 a.m முதல்
இடம்: வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்

மணப்பெண் முகத்தில் முடிவளர்தல், முகப்பரு பரு அடையாளம் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்குமான ஆலோசனை அன்றைய தினம் வழங்கப்படவுள்ளளது. (முன்பதிவுகளை மேற்கொள்ளவும்)

### இறுதி பயிற்சி கருத்தரங்கு

காலம்: 13.11.2011 காலை 9 மணி முதல்
இடம்: வீரசிங்கம் மண்டபம்

ஆரம்ப வழுக்கை நீக்கல், Gold Facial தோலின் தன்மை அறிதல், Nail Art, முகப்பரு, பொடுகு, கண் கருவளைய சிகிச்சைகள் Galvanic, Ultrasonic Highfrequency தொழில்நுட்பங்கள் மற்றும் மணப் பெண்ணுக்குரிய ஒப்பனை (தமிழ் மொழி மூலமான பயிற்சிகள்)

அழகுக் கலை நிபுணர்
திருமதி அனுகுமரேசன்
Ad.Dip.in B.T.H.D Cosmetal Ogist India,
City & Gills (UK) Arts & Craffs (India)
Member Of S.L.A.H.A.B

ஆர்வமுள்ளவர்கள் முன்பதிவுகளுக்குத் தொடர்பு கொள்ளவும்
0772099546, 0777408443, 0115752618

(10076)

# அந்தியேட்டி அழைப்பு

ஜீவமுக்தி அடைந்த
## சிவபாக்கியம் அம்மையார்
(மலர் அம்மையார்) அவர்களின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை




நிகழும் கர ஆண்டு ஐப்பசித் திங்கள் 20 ஆம் நாள் இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அம்மையாரது கடவுள் சந்நிதி இல்லத்தில் பூசை, பஜனை,மகேஸ்வர பூசை என்பன நடைபெறும். இப்புனித நிகழ்வுகளில் கலந்து குருவருளைப் பெற்று . இன்புறுமாறு குரு கடாட்சத்துடன் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கடவுள் சந்நிதி,
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு

*கடவுள் சந்நிதியினர்*

# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



*அமரர்*
## சுப்பிரமணியம் பத்மநாதன்

கடந்த 11.10.2011 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (06.11.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹா மாரியம்மன் தேவஸ்தான மணிமண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலட்டி எச்சாட்டி
ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தான மணிமண்டபம்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(10037) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கலாபூஷணம் தவில்வித்துவான்

## அமரர் நடேசன் ஜெயராமன்

(இராமநாதன்)



ஆயிரம் உறவுகள் இருந்தாலும்அப்பா
என்றழைத்து மகிழ நீங்கள் இல்லை
நீங்கள் பூத்திருக்கும் எம் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள் என்றுமே...

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் பின் விளைவு பற்றி அர்ச்சுனன் அன்று சொன்னவை



■ மட்டுவில் நல்லதம்பி

இலக்கியக் காட்சி – 109

நாம் பலவிதமான குணப் பண்புகள் கொண்ட மாந்தர்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகம் அன்றும் இன்றும் உறவினர், நண்பர், பகைவர், நொதுமலர், பெரியோர் என்று எல்லா வகையான மனிதத்துடன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மனிதனுடைய செயற்பாடுகள், இராஜதம், சாத்வீகம், தாமதம் என்னும் மூன்று குண இயல்புகளால் மாற்றமடைகின்றன. சாத்வீக குணமுடையவன் எப்பொழுதும் தர்மசிந்தனையோடு நல்ல செயல்களில் ஈடுபடுவான். இராஜத குணமுடையவன் பேராசை உள்ளவனாய் இருப்பான். தாமத குணமுடையவன் முட்டாள்தனமாகச் செயற்படுவான்.

ஆக, உலக உறுப்பினர்கள் எல்லோரும் இந்த மூவகையான குணங்களில் ஏதாவது ஒரு குணத்தின் இயல்பைக் கொண்டிருப்பார்கள். இவர்கள், பெரியோர் சகவாசத்தால், கற்றல் கேட்டலால் மனந்திருந்தி, ஐம்புலன்களையும் நல்வழிப்படுத்தினால் ஆன்மீக வழியில் உயர்நிலை பெறலாம்.

இதற்குச் சிறந்த உதாரணமாக விளங்கும் இலக்கியம் மகாபாரதம் ஆகும்.

பாரதக் கதையில் வரும் மாந்தர்கள் பெரும்பாலும் உறவினர். இவர்களிடையே ஏற்பட்ட முக்கிய நிகழ்வு பாரதப் போர். இந்தப் போரில் முக்கியமானது ஸ்ரீ கிருஷ்ணபகவான் சாரத்தியம் செய்ய அர்ச்சுனன் செய்யும் போர். அந்தப் போர் தொடங்கு முன் பிறந்தது கீதை உபதேசம் (பகவத்கீதை).

பகவத்கீதையை அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் சொன்னாரேனும், அவனை முன்னிலைப்படுத்தி, உலகமாந்தர் அனைவருக்காகவுமே சொன்னார் என்பதே உண்மையானது. ஆயினும், கீதை வெளிப்பட வழி சமைத்துக் கொடுத்தவன் பார்த்தன் என்பதையும் மறக்கக் கூடாது.

இதனைப் பற்றியும், பின்னர் வரப்போகும் போரின் விளைவு பற்றியும் அர்ச்சுனன் வாயிலாகக் கேட்போம். அந்தக் காலத்தில், போர் செய்வதற்குப் போர்க்களம் ஒன்று இருக்கும். அங்கே யுத்ததர்மம் கடைப்பிடிக்கப்படும் என்பதால் அது புண்ணிய பூமியாகக் கருதப்படும். போர் பலநாள்கள் தொடர்ந்து இருக்குமாயின், இருபக்கப் போர் வீரர்களும் இரவில் தத்தம் பாசறை (இல்லம்)களில் தங்கியிருந்து அடுத்தநாள் போருக்கான ஆயர்த்தங்களில் ஈடுபடுவர்.

மகாபாரதப் போர் நடைபெற்றது குருச்சேத்திரம் என்ற போர்க்களத்தில் ஆகும். போர் நடைபெற்றது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த திருதராஷ்ட்டிரன் என்ற மன்னனது பிள்ளைகளான துரியோதனன் முதலானோருக்கும், பாண்டுவின் புத்திரர்களான தருமன் முதலியோருக்கும் இடையில் என்பது நமக்குத் தெரிந்த கதை.

திருதராஷ்ட்டிரன் பிறவிக்குருடன் என்பதால், போர் நிலைமை பற்றி அவனுக்கு சொல்லக் கூடியதாக, சஞ்சயன் என்ற அவனது காரிய தரிசிக்கு ஞானக்கண்ணை வழங்கியி ருந்தார் வியாசபகவான்.

போர்க்களத்தில் ஒரு பக்கத்தில் துரியோதனனும் அவனது தம்பிமாரான நூறுபேரும் அவர்களுடைய நண்பர்களான அரசர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய அரசாங்கத்தின் கீழ் இருப்பவர்களான பீஷ்மர், துரோணர், கர்ணன் முதலியோரும் சேர்ந்திருக்கிறார்கள். பாண்டுவின் மைந்தர் ஐவருடன் இவர்களுக்கு உதவியாக வேறு அரசர்களும் வந்து கூடியிருக்கிறார்கள். இரு பகுதியாருக்கும் பொதுவாக ஸ்ரீகிருஷ்ணர் தமது படைவீரர்களைத் துரியோதனன் பக்கத்துக்குக் கொடுக்கிறார்.தான் அர்ச்சுனனுக்குத் தேரோட்டும் சாரதியாகப் பாண்டவர் பக்கம் சேர்ந்து கொள்கிறார்.

இவ்வாறாக, போர்க்கள நிலைமைகளை அவதானித்த அர்ச்சுனன் தனது மனக்கருத்தை ஸ்ரீகிருஷ்ண பகவானுக்குக் கூறுகின்றான்.

''கண்ணா!, அங்கே எதிரிகளாக நம் முன்னே நிற்பவர்கள், உறவினர்களும் மதிப்புக்குரிய பெரியோர்களும் நமக்குப் போர்ப்பயிற்சி தந்த ஆசிரியர்களுமே யாவர். இவர்களோடு தானே நான் போர் புரிய வேண்டும். இவர்களையும் கொல்ல வேண்டும். பீஷ்மர், துரோணர்.. இவர்களைக் கண்டதுமே என் நெஞ்சு பதறுகின்றதே. இந்தமாதிரி நல்லவர்களும் போரில் அழிந்து போவதா? நல்லவர்களும் தீயவர்களும் சேர்ந்தது தானே உலகம்!

*''உண்டால் அம்ம இவ் வுலகம்*
*தனக் கென வாழாப் பிறர்குரியாளர்*
*உண்மை யானே''*

நல்லவர்கள் அழிந்து போனால் உலகம் எப்படி இயங்கும்? தீயவர்களை வைத்தா நாம் அரசாளப் போகிறோம். இந்தப் போரினால் நற்குலமும் அழியப் போகிறது. குலம் அழிவுற்றால் நித்தியமான குலதர்மமும் கெட்டுவிடும்! குலதர்மத்துக்கு அச்சாணியாக இருக்கும் பெரியோரை அழிப்பதா?

*உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்*
*பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து [குறள் 667]*

போருக்குப்பின் எஞ்சி இருப்பவர்கள் அதர்மங்களில் ஈடுபடுவார்கள். அவர்களைத் தட்டிக்கேட்க ஆளில்லாமற் போய்விடும்.

(20 ஆம் பக்கம் பார்க்க )

# சறுக்குக்கட்டை

சிறுகதை

அன்று மதனுக்கு மனம் அவ்வளவு நன்றாக இல்லை. பல இடங்களில் கேட்டும், அவனுக்கு தேவைப்பட்ட பணத்தைப் புரட்ட முடியாமல் போய்விட்டது. தனது மூத்த தமயனிடம் சென்று கேட்பது எனத் தீர்மானித்தான்.

அவனிடம் பணம் உள்ளது. தர மனமும் உள்ளது. ஆனாலும் அண்ணிக்காரி சம்மதிக்கமாட்டா.... அதனால் தமயனுக்கும் மன உளைச்சலாகிப் போய்விடும் என்பது ஒன்றும் அவன் அறியாததல்ல.

ஆனாலும் கொழும்பில் நடைபெறும் அந்தத் தேர்வுக்கு எப்படியும் போக வேண்டும் என்பதனால், தயங்கித் தயங்கித் தமயனிடம் சென்றான்.

எஸ். எல். ஏ. எஸ். பரீட்சை. அந்தப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் தான் அரசாங்க அதிபர்களாகவும் -ஜி ஏ- மந்திரிமாரின் செயலாளர்களாகவும் வருவதாக அவன் அறிந்ததும் அந்தப் பதவிகளில் அவனுக்கு ஒரு மோகம். அதற்குத் தேர்வு எழுத வேண்டும். பட்டதாரியாகி அவன் வெளியேறியது முதல் அது தான் அவனது இலட்சியம். பரீட்சைக்கும் வயதுக் கட்டுப்பாடு. இனி இப்போ நடந்தால் இனி எப்போ அது நடக்கும் என்ற ஏக்கம் வேறு.

அந்தத் தேர்வுக்கு விண்ணப்பித்த நாள் முதல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் இளம் பிஞ்சுகள் போல தன்னை வருத்திப் படித்துக் கொண்டிருந்தான்.

க.குணராசாவின் கிரகித்தல் புத்தகத்திலிருந்து அஸ்ரனின் உளச்சார்புப் புத்தகம் என ஒரு 50 வரையான புத்தகங்கள் வாங்கிக் குவித்திருந்தான்.

அவை அனைத்தையும் படித்துப் பரீட்சைக்கு முழுவீச்சில் தயாராக இருந்தான். எப்போ பரீட்சை நடைபெறும் எனக் காத்திருந்த வேளை...

நேற்று அனுமதி அட்டை வந்தது. அதுவும் தேர்வு கொழும்பில் மட்டும் வேறு பிற மாவட்டங்களில் நடைபெறாது என்ற போது, அவனுக்கு ஒருமாதிரியாகப் போய்விட்டது. இனி என்ன செய்வது யாரிடமாவது காசு மாறித் தயாராக வேண்டியதுதான் என்றளவில், இரண்டு மூன்று நாள்களாக ஒவ்வொரு இடமும் சென்று வந்தான்.

ஏமாற்றம் தான் எஞ்சியது.

கடைசியாகத் தமயனிடம் செல்வோமென, அங்கு சென்றும் கேட்டு வந்தான். அடுத்த நாள் பதில் சொல்வதாகக் கூறிய தமையன்..., அடுத்த நாள் கையை விரித்து விட்டார்.

இது யாரின் கைங்கரியம் என்பது அவன் அறியாததொன்றல்ல. மனம் அப்படியே குழம்பிப் போய்விட்டது. எங்காவது கோயில் பக்கம் போய் மன அமைதி தேடவேண்டும் போலிருந்தது. அப்பொழுதான் அல்வாய் அம்மன் கோயில் தேர் வெள்ளோட்டம் என்ற ' சிறப்பு மலர்' அவனது கண்ணிற்பட்டது.

காலையில் ஒன்றும் அவன் சாப்பிடவில்லை. சாப்பிடுகின்ற 'மூட்'டும் இல்லாதிருந்தது. தனது சயிக்கிளை எடுத்துக்கொண்டு மிதிக்கத் தொடங்கினான்.

கிறீச்... கிறீச் எனத் தனது இயலாத் தன்மையை அந்தப் பழங்கிடையனான சையிக்கிள் வெளிப்படுத்த... இல்லை நீ ஓடத்தான் வேண்டும் என்பதுபோல 'பெடலை' மிதித்தான். அங்கிருந்து 15 கிலோ மீற்றர் அல்வாய். பரவாயில்லை போய்த்தான் வருவோ மென மிதிக்கத் தொடங்கினான்.

தேர் வெள்ளோட்டத்துக்குத் தயாராக இருந்தது. அடுத்தநாள் தேர்த் திருவிழா. வெள்ளோட்டப் பரபரப்பில் தேர் நிறைவு வேலைகளில் இரத்தினம் அன்கோ ஈடுபட்டிருந்தது. வடம் பிடிக்க இளைஞர் கூட்டமும் திரண்டிருந்தது.

புதிய சறுக்குக் கட்டை ஒன்றை சீராக்கிக் கொண்டிருந்தார் ஒருவர்.

[illegible] தேர் இழுக்க [illegible] தாக்கும் படி கேட்டுக் கொண்டிருந்தார் இரத்தினம்.



அடிக்கடி வெளியே யாரோ ஒருவரின் வரவை எதிர் பார்த்து அவரது கண்கள் அலைந்து கொண்டிருந் தன. ஒரு வகையில் பதற்றமாகவும் இருந்தார்.

தேர் இழுப்பதற்கு நாம் இருக்கிறோம். பிறகென்ன

(20 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 06.11.2011 முதல் 12.11.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். மறதி, தண்டச் செலவு, தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். அவ சரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். தொழில் துறையில் மேன்மை காணலாம். உடல் ரீதியாக அடிக்கடி அசௌகர்யங்களுக்கு ஆள்படலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உறவுப் பெண்கள் வழியில் உதவி கிடைக்கும்.

### இடபம்

பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கூட்டுமுயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். பயணங்களில் ஏற்படும் தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். ஆழம் தெரியாமல் எந்த விடயத்திலும் காலை விடுவதைத் தவிர்க்க வேண்டும். முதலீடுகள் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். கணவன், மனைவி உறவில் சிறு பிணக்குகள் ஏற்படலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் தொல்லைகள் உண்டு. திட்ட மிட்டதை விட சில காரியங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம்.

### மிதுனம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். கடன் வசூலிப்பு முயற்சிகள் பலன் தரும். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்கு உதவி செய்யலாம். மனைவி வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். எதிர்பாராத செலவினங்களால் பண நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். சிலரிடம் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்படும் வாக்குவாதங்கள், கோபதாபங்களால் மன அமைதி பாதிக்கப்படலாம். கேளிக்கை கொண்டாட்டங்களால் கணிசமான பணம் கரையும். தேக ஆரோக்கிய விடயத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளை உண் டாக்கலாம். தேவையில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம்.

### கடகம்

சில விடயங்களை நினைத்து அதிக குழப்பங்களுக்கு ஆள்படலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. பிள்ளைகள் தொடர்பான வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். திடீர் பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். உடல் ஆரோக்கியத்திலும், பிள்ளைகள் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். எந்தக் காரியத்தையும் அவசரப்பட்டுச் செய்து விட்டு, பின்னர் மனவருத்தம் அடைவது, சண்டை, சச்சரவுகளால் மன அமைதி பாதிக்கப்படுவது போன்றவை நிகழும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். தாய் வழி உறவினர்களுடன் சிறு மனஸ்தாபம் உண்டாகலாம். வீண் பேச்சுக் களால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### சிங்கம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வருகையால், அவர்களின் தலையீட்டால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ எனப் பயம் கொள்ளலாம். எந்தவழியில் வருமானம் வந்தாலும், அதற்கென செலவுகள் காத்திருக்கும். கோபதாபங்கள், வாக்கு வாதங்களைத் தவிர்க்க எந்த விடயத்திலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. மதிப்பு, கௌரவம் மேம்படும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் ரீதியாகச் சிலர் வெளியூர் செல்லலாம். சகோதரர்களால் தொல்லைகளுக்கு ஆள்படலாம். அலைச்சல் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். இனிய அனுபவம் உண்டு.

### கன்னி

திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களிலும் வெற்றி பெறலாம். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். பெரிய மனிதர்கள் சந்திப்பு நிகழும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். நீண்டதூரப் பயணங்கள் செல்லலாம். சக ஊழியர் விடுமுறையால் வேலைப்பளு கூடும். எதுவும் உங்களின் மனம் போல நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். பெண்கள், சகோதரிகள், மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் வரலாம். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். பணிபுரிவோர் நிர்வாகத்தினர் மூலம் சில சலுகைகளைப் பெறலாம். மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு போன்றவற்றால் அவதிப்படலாம். பணவரவுகளைப் பெறலாம். கடன்கள் வசூலாகும்.

### துலாம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். கடன்மிகுதிகளைச் செலுத்துவீர்கள். சிலரிடம் வாயைக் கொடுத்து பிரச்சினையில் மாட்டிக் கொள்ளலாம். உருப்படியான சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவுகள், உதவிகள் கிடைக்கும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான வகையில் ஆதாயம், அனுகூலம் பெறலாம். புதியவர்களின் நட்பைப் பெறலாம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு.

### விருச்சிகம்

உங்களின் செல்வாக்கை, மதிப்பை அதிகரிக்கச் செய்யும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். பால்ய நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் ஓய்வெடுப்பீர்கள். சில காரியங்களைச் செய்வதன் மூலம் எதிர்பார்த்ததை விட கூடுதல் வருமானம் பெறலாம். புதிய வேலை முயற்சிகளில் வெற்றி கிட்டும். எதையும் ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்து மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம். கடும் வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். வேலைப்பளு கூடும். குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். திடீர்ப் பயணம் செல்லலாம்.

### தனுசு

சேமிப்பில் கை வைக்கும் வகையில் புதிய செலவு உருவாகலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். திட்டமிட்ட சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எதிர்பாராத சில நல்ல செய்திகளைக் கேட்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான வகையில் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. வெளியூர், வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்களுடன் பிரச்சினை வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். மனதில் இனம்புரியாத உற்சாகம் குடிகொள்ளும். ஓய்வின்றி பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம்.புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### மகரம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். குறைந்த செலவில் முடியும் என்று நினைத்த விடயங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். மருத்துவச் சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், மாற்று மதத்தினர் வழியில் சில நன்மைகள் அடையலாம். உத்தியோக ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். வேலைப்பளு கூடும். கடன் தொல்லை ஏற்படலாம். சிலருடன் கருத்து மோதல்கள், பொறாமை தொடர்பான பிரச்சினை ஏற்படலாம். காரியத்தடை நேரும். கடன்மிகுதிகளைச் செலுத்துவீர்கள். நண்பர்கள், மாமன், வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கடன்கள் வசூலாகும்.

### கும்பம்

மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். புதியவர்கள் சந்திப்பு நிகழும். மற்றவர்கள் மூலம் உங்களின் சில வேலைகளை முடிப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நடக்காமல் போவதால் குழப்பங்கள், தடை, தாமதங்கள், உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்காமல் அவதி போன்ற பிரச்சினைகள் தொடரும். எந்த விடயத்திலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்படாவிட்டால், மாட்டிக் கொண்டு முழிக்கலாம். உல்லாசமான செயற்பாடுகளால் சிக்கலாய் மாட்டிக் கொள்ளலாம். குறித்த காலத்தில் வேலைகளை முடிக்க முடியாமல் எதிர்பாராத குறுக்கீடுகளைச் சந்திக்கலாம். கவனங்கள் சிதறும். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். மனதில் இனம்புரியாத சந்தோஷம், உற்சாகம் குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம்.

### மீனம்

குடும்பத்தில் கலகலப்பு குடிகொள்ளும். எதிர்பாராத செலவுகளால் சிலரிடம் பணம் கடன் வாங்கலாம். உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். எதிர்பாராத பணவரவுளைப் பெறலாம். புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீண்ட நாள்களாக தள்ளிப் போன சில காரியங்கள் இனிதே நடக்கலாம். பணிபுரிவோர் தேவையற்ற பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். சகோதரர்கள், நண்பர்களுடன் மனஸ்தாபம் வரலாம். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப் போகலாம். அரசு காரியங்களில் அலைக் கழிப்புகள் நேரும். தந்தை வழியில் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். எந்த விடயத்திலும் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். குடும்பத்தினரின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். செலவு, அலைச்சல் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மொழிகள்



★ பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல. அது ஆன்மாவின் ஏக்கமாகும்.
★ காலமென்னும் ஆழ்கடலில் பயணம் செய்யும் நமக்கு கலங்கரை விளக்கமாகத் திகழ்பவை நல்ல புத்தகங்களே.
★ சந்தத்தை நம்பி கவிதை இருக்கலாம், தந்தத்தை நம்பி யானைஇருக்கலாம், சொந்தத்தை நம்ப நீ இருக்காதே,
★ தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று பொருளல்ல இன்னும் வெற்றி அடையவில்லை என்றுதான் பொருள்.
★ தனியாகப் போராடிக் கொண்டிருக்கும் மனிதனே உலகில் வலிமை மிக்கவன்.
★ உயர்வு தேடுபவனுக்கு உயர்வு வருவதில்லை, உயர்வுக்குத் தகுதியுடையவனுக்கே உயர்வு வருகிறது.





உலகிலேயே யாவற்றிலும் மிக அதிக விரைவுடன் பறக்க வல்ல பறவை வல்லூறு (Shaheen Falcon). உருவில் சற்று சிறிய ஒரு கழுகு இனம். வல்லூறு கழுகு இனத்தைச் சேர்ந்தது. ஆனால் கழுகை விட மிக விரைவாகப் பறக்கும் ஆற்றல் மிக்கது. உலகிலேயே மிக அதிக வேகத்தில் பறக்கும் பறவை இனம் இதுவாகும். காற்றின் ஏற்ற இறக்கங்கள் இந்த வல்லூறுக்கு மட்டும் தெரியுமாம். வல்லூறுவின் உடல் நீளத்தை விட அதன் இறக்கையின் நீளம் இருமடங்குகளாகும்.

## முட்டாளும் புத்திசாலியும்

*மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த மழையால் ஏரி நீர் குளிர்ச்சி அடைந்திருந்தது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்றுத் தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றுக்குள் குதித்தது. அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. நான் வெகுநாள்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி எனக் கூறிப் பொந்தில் வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்குக் கொடுத்தது.*

*இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்றத் தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை.*

*''இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு'' எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.*

*இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அவை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அந்தக் கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம், ''நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?'' எனக் கேட்டது.*

*''நான் ஏரியில் தங்கி இருந்தேன்'' என்றது ஏரித் தவளை.*

*''ஏரியா? அப்படியென்றால் என்ன?'' எனக் கேட்டது கிணற்றுத் தவளை.*

*''இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியன உள்ளன.'' என்றது ஏரித் தவளை.*

*''இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?'' என்று கேட்டது கிணற்றுத் தவளை. ''இந்தக் கிணற்றைவிட மிகப்பெரியது ஏரி'' என்றது ஏரித் தவளை.*

*கிணற்றுத் தவளை நம்பவில்லை. ''நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது'' என்றது.*

*ஏரித் தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், கிணற்றுத் தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்றத் தவளைகளும் நம்பவில்லை.*


*எல்லாத் தவளைகளும் ஏரித் தவளையைப் பார்த்து ''நீ பொய்யன், புரட்டன், உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து'' என்று கூறி ஏரித் தவளையைத் தாக்க முயன்றன.*

*அப்போது, கிணற்றிலிருந்து நீர் எடுக்க ஒரு பெண் வாளியை இறக்கிய போது, அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை, கிணற்றிலிருந்து மேலே வந்தது.*

*தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.*

*முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர் களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.*










ஜெ.பிரித்தா, தரம் - 5



சி.கஜேனி, தரம் - 7



கு.வேற்கரன், மாதுலை மழலைகள் கல்விப் பூங்கா



ம.ரதிசனி, தரம் - 9, யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

## ரோஜா செடி



ரோஜாச்செடியே! ரோஜாச் செடியே!
நீ என்ன பேசுகின்றாய்?
நீ நித்தம் பூத்தே
சுவாசத்தில் வாசம் வீசுகின்றாய்
இரவில் வந்தே பனியும்
உன்னை முத்திச் சென்றதுவோ?
அதிகாலைத் தென்றல் தினமும்
மெல்லத் தழுவிச் சென்றதுவோ?

மனதை மகிழ்விக்கும் நீயே
ஏன் முள்ளுடன் பிறந்தாய்?
மானம் காக்க முள் கொண்டு
உன்னைக் காத்தனையோ?
மென்மையின் இலக்கணம் உந்தன்
பூவிதழ்; நீ இதை அறிவாயோ?
பெண்மையின் மென்மை உந்தன்
இதழால் அறிவோம் தெரிவாயோ?

## விடை தெரியுமா? 132

### உங்களுக்கும் பரிசில்கள்

1. நோர்வே நாட்டின் தலைநகரம் எது?
2. அறிமுகம் என்பதன் ஆங்கிலப் பதம் என்ன?
3. உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது?
4. அன்னை தெரேசா பிறந்த நாடு எது?
5. உறங்கத் தெரியாத மிருகம் எது?

### விடைகள் 130

1. யாழ்.நூல்
2. வைனீஸ் விக்ரோறியா
3. ஜே.எஃப். ஆப்லட்
4. எத்திக்கான்
5. எறும்பு, கறையான்

### வெற்றி பெற்றோர் விவரம்

★ பஞ்சலிங்கம் யாழினி, தரம் 8 கே, யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி.
★ அசோக்குமார் தயாசாகரி, தரம்- 8, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ ந.சுபாஜினி, யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
★ சத்தியதாசன் ஐஸ்வர்யா, தரம் 8 கே, யா/ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி.
★ பேபாகராசா சிவரஞ்சினி, யா/ மட்டுவில் கமலாசனி கனிஷ்ட மகா வித்தி.
★ ந.யசோதா, தரம்- 10 ஏ, யா/ அத்தியார் இந்துக் கல்லூரி.
★ ந.பவிதா, தரம்- 12 ஏ, யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 05.11.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் [illegible] வழங்கப்படும்.

## அயல் நாட்டுப் பழமொழிகள்

1. கழுதையோடு நட்பு வைத்துக் கொண்டால் உதைகளை எதிர்பார்க்க வேண்டியதுதான்
(இந்தியா)
2. நரி உபதேசம் செய்யத் தொடங்கினால் உன் கோழிகளைக் கவனி
(அல்போனியா)
3. நாய்களின் பிரார்த்தனையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் வானம் எலும்பு மழை பொழியும்
(துருக்கி)
4. நீர் அமைதியாக இருப்பதால் முதலைகள் இல்லையென்று நினைத்து விடாதே!
(மலேசியா)
5. சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பியழைக்க முடியாது
(பிரிட்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சும் செயலும்



யுத்தம் முடிந்து
இரண்டு வருடம் கடந்தும்- தமிழர்
சித்தம் மகிழும்
சிறந்த தீர்வைக் காணவில்லை!


நித்தம் நித்தம் பேச்சுவார்த்தை
சத்தம் மட்டும், கேட்பதற்கு
குறைச்சலே இல்லை!

வித்தை காட்டும் பேச்சுக்கள்
சித்து விளையாட்டைப்போல்
மொச்சை அறுவதும்
கொச்சைப்படுவதும்
இன்று நேற்றல்ல
என்றுமே இடம்பெற்றுவரும்
ஏமாற்று முயற்சிகள்!

தமிழர் பிரச்சினைக்காக
தகுந்த தீர்வைக்காண
எத்தனை தடவை
இங்கு பேசப்பட்டது?
எல்லாம் பூஜ்ஜியமே!

சேனையூர் அ. அச்சுதன்.





## புரிதலற்ற வாழ்க்குள்...

சந்தேகத் தீயின்
சகல பரிணாமங்களையும்
மனித மனதில்
கருப்பெற வைத்துப் போகும்
நெருப்பு நொடிகளில்
சந்தர்ப்ப சூழ்நிலை
நிரபராதிகளையும்
குற்றவாளிகளாக்கும் கொடுமை...
காத்திருப்புக்களும்
கனதியான உறவுப் பிணைப்புக்களும்
நெருக்கமாகிப் போன பின்பும்
புரிதலற்ற வதந்திகளின்
புளகாங்கிதத்தில்
எல்லாமும் மறக்கப்பட்டு
வீணான குரோதங்கள்
விருட்சமாக்கப்படுகின்றன...
அன்புகொண்டு
அரவணைத்து மகிழ
ஆசை கொள்ளும் பிள்ளை மனதை
பிய்த்தெறிந்து போடக்
கங்கணம் கட்டுகிறது சூழல்...
ஏமாற்றச் சிதை வளர்த்து
எரித்துச் சாம்பலாக்கப் பிரயப்படும்
பொல்லாத சந்தேகம்
உண்டாக்கப் போவதென்னவோ
உயிரான உறவுகளுக்குள்ளும்
விரோதமென்ற புறக்கணிப்பையே...
இது புரியாது
வாழ்ந்து கொண்டேயிருக்கிறோம்
வால் முளைத்த
சந்தேகப் பேயை வரவழைத்தபடி...

பா. பொன்நிலவன், மீசாலை.

## காதல் கற்கள்

நீ
எச்சில் துளிகளால்
துப்பிய போதும்
கவலைப்பட்டது என்
மேனிமட்டுமல்ல
மனசும்தான்

எதிரியென்று
நினைத்து கோபக் கற்களை
அள்ளி வீசினாய்
அதில் காயப்படாமல்
நனைந்தது என் காதல்

உனக்கு
என்னுயிரில் இடம் இருக்கும் போது
இடப்பெயர்வு போல்
ஏன் நிராகரித்துச் செல்கிறாய்

கனவுகளுக்கு நீ
முற்றுப்புள்ளி வைத்துவிட்டாய்
இருந்தும்
அகதி அந்தஸ்து கிடைப்பதாய்
உன்
மன அந்தஸ்தில்
வாழ ஆசைப்படுகின்றேன்

ஜே.எஸ்.ராஜ்,
யாழ். பல்கலைக்கழகம்.



## எது காதல்?

கனவெல்லாம்
நினைவெல்லாம்
காலமெல்லாம்
நீயே என்றாய்
சொர்க்கம் என்றாய்
சொந்தம் என்றாய்
உயிரென்றாய்
உலகென்றாய்

ஒரு நாள் உனைக்
காணாத போது
உறக்கமில்லை என்றாய்
ஒருநாள் நீ பேசாத போது
இதயம் துடிக்கவில்லையென்றாய்

இப்போது மட்டும்
எப்படி முடிந்தது
வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு
நிச்சயம் முடித்த பின்
நிச்சயமாக உன்னை - நான்
நினைக்கவே இல்லையென்றாய்
இதுதான்
நீ சொன்ன
தெய்வீகக் காதலா?

சா. ஜிந்துஜா,
கோண்டாவில்.



## இன்றைய கோலம்

புவியின் கணவன் சூரியன்
புவியின் நிரந்தரக் குழந்தை சந்திரிகை
தற்காலிகக் குழந்தைகள் நாம்
சூரிய உழைப்பு
சூடும் வெளிச்சமும்
புவியை பசுமையாக்குகின்றன
உயிர்க் கோளமாக்குகிறது
சந்திரிகை சில நாள்கள்
மஞ்சள் பூசுவதும்
சில நாள்கள் மறைந்தும்
நிற்பதும்
நாமும் நிறைந்தும்
மறைந்தும் விடுகின்றோம்
புவிக்குக் காய்ச்சல்
வரும்போது
அனல் காற்று வீசுகிறது
சளிசுரம் பிடிக்கும் போது
எரிமலை கக்குகிறது
கோபம் வரும் போது
சூறாவளி ஆகிறது
மழை வரும் போது ஆனந்தமாக
சிலவேளை துயரமாக
மற்றும் படி மெதுவாக
பூமி மெதுவாக
சூரியன் மெதுவாக
சந்திரிகை மெதுவாக
நாமும் மெதுவாக
எமது கடமைகளை
செய்து....

ஆ. புஸ்பலதீஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகவாத இடதுசாரிகளின் புலம்பல்கள்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

புத்தகங்களில் காணப்படும் மேன்மையான தத்துவங்களை யதார்த்த நிலைமைகளுக்கேற்ற வகையில் அவற்றில் ஏற்படும் அடிப்படைக்கு ஊறுவிளைவிக்காத வகையில் ஏற்படும் வளர்ச்சிகளைக் கணக்கில் எடுக்காமல் அவற்றைத் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டு இருப்பதை மாமேதை லெனின் புத்தக வழிபாடு எனவும் அப்படிச் செய்பவர்களை வெறும் புத்தகவாதிகள் எனவும் கண்டனம் செய்திருக்கிறார்.

முதலாளித்துவம் தோற்றம் பெற்று எழுச்சியடைந்து வலிமையாக விளங்கிய காலத்தில் அதன் தோற்றம், வளர்ச்சி என்பனவற்றை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து, சமூக வளர்ச்சியின் அடுத்த கட்டம் தொடர்பாகக் கணக்கிட்டு உழைக்கும் மக்களின் விடுதலை தொடர்பாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோர் முன்வைத்த அரிய தத்துவம் தான் மார்க்ஸ்ஸிசம். முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாகி போர்களாலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் உலகம் முழுவதும் பரவிய நேரத்தில் மாமேதை லெனின் அவர்கள் மாக்ஸியத் தத்துவத்தை இன்னொரு கட்டத்துக்கு வளர்த்து எடுத்து அதை மாக்ஸிசம்- லெனினிசம் என்ற கட்டத்திற்கு வளர்த்தெடுத்தார். அதன் அடிப்படையில் சோவியத் புரட்சியைத் தலைமையேற்று நடத்தி உலகின் முதல் உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரம் கொண்ட சோவியத் யூனியனை நிறுவினார். அவர் மாக்ஸிச தத்துவத்தை வளர்ச்சிக்கு உட்படாத வேதங்களாகக் கருதியவர்களுக்கு எதிராகவும், திரிபுபடுத்தியவர்களுக்கு எதிராகவும் அதிதீவிர ஒரு முனைப்போக்கு கொண்டவர்களுக்கும் எதிராக நடத்திய தத்துவார்த்தப் போராட்டங்களே மாக்ஸிசம்- லெனினிசம் என்ற ஒப்பற்ற உழைக்கும் மக்களின் தத்துவங்களாக வளர்ந்தன.

அதேபோன்று கைத்தொழில் வளர்ச்சி பெறாத ஓர் அரைக்குடியேற்ற, அரை நிலப்பிரபுத்துவ நாட்டில் உழைக்கும் மக்களின் தலைமையிலான ஒரு விவசாயப் புரட்சி மூலம் விடுதலையை எட்டுவது தொடர்பாக மாஓசேதுங் அவர்கள் மாக்ஸிசம்,லெனினிசம் என்ற தத்துவத்தை மாஓசேதுங் சிந்தனை என்ற கட்டத்துக்கு வளர்த்தெடுத்தார். அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட புரட்சியே மாபெரும் சீன தேசத்தை விடுதலை செய்து உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை உருவாக்கியது.

அதாவது சமூக மாற்றங்களுக்கு அமைய உழைக்கும் மக்களின் விடுதலைக்கான தத்துவமாகிய மாக்ஸிசமும், லெனினிசமும், மாஓசேதுங் சிந்தனை என வளர்ச்சி பெற்று வந்துள்ளன. முதலாளித்துவம் தனக்குள்ளேயே கொண்டிருக்கும் முரண்பாடுகள் காரணமாக ஏற்படும் நெருக்கடிகளால் ஏகாதிபத்தியம், நவீன உலகமயமாக்கல் என வெவ்வேறு வடிவங்களை எடுக்கிறது. எனவேதான் உழைக்கும் மக்களின் தத்துவங்களும் காலத்துக்கேற்ப வளர்ச்சியடைகின்றன.

ஆனால் புத்தகவாதிகளோ ஏதோ ஒரு கால கட்டத்தின் தத்துவங்களை இறுகப்பற்றிக்கொண்டு நியாயபூர்வமான போராட்டங்களைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் பலவீனப்படுத்தும் வகையிலும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

இலங்கையின் இடதுசாரிகளின் ஒரு பகுதியினர் தேசியவாதிகளுடன் இணைந்து அவர்களுக்குள் கரைந்து போய்விட இன்னும் ஒரு பகுதியினர் ஒதுங்கியிருந்து மாக்ஸியக் கோட்பாடுகளின் பெயரால் நியாயமான போராட்டங்களைக் கீழ்மைப்படுத்தும் வகையிலும், இடையூறு செய்யும் வகையிலும் விமர்சனங்களை மேற்கொண்டு வருகின்றனர். வெறும் புத்தகவாதிகளாக விளங்கும் இவர்களால் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த மட்டுமே முடிகிறது. இவர்கள் தாங்களே சரியான திசைமார்க் கத்தைச் சுட்டிக்காட்டுபவர்களாகவும், ஏனையோர் பிற்போக்குத்தனமான சிந்தனைப் போக்குகளை கொண்டவர்களாகவும் சில தேசிய ஊடகங்களைப் பயன்படுத்தி தம்மைச் சித்திரித்து வருகின்றனர்.

1953 ஆம் ஆண்டு இடதுசாரிகளின் தலைமையில் இடம்பெற்ற 'ஹர்த்தால்' போராட்டம் ஐக்கிய தேசியக் கட்சி அரசையே ஈடாட வைத்தது. அமைச்சரவைக் கூட்டத்தையே துறைமுகத்தில் நின்ற பிரிட்டிஷ் கப்பலில் நடத்துமளவுக்கும், டட்லி சேனநாயக்கா

> இலங்கை அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் வெளியே சென்றுவிடாமல் இருக்க மேற்குலகம் போர்க் குற்ற விசாரணை. மனித உரிமை மீறல் போன்ற விடயங்களைக் காட்டி இலங்கையை மிரட்டி வருகின்றது. ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் இந்த நிலைமையை பாவித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில ராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்.

பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்யுமளவுக்கும் அப்போராட்டம் வலிமை பெற்றிருந்தது. ஆனால் அது பின்பு கொடிய இராணுவ நடவடிக்கைகள் மூலம் முறியடிக்கப்பட்டது.

ஆனால் அப்படியான ஒரு நிலைமை ஏற்படுமளவுக்கு இந்நாட்டில் அன்று இடதுசாரிகள் பலம் பெற்றிருந்தனர் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அதேவேளையில் இன்று இடதுசாரிகளைத் தேடிக்கண்டு பிடிக்க வேண்டிய அளவுக்கு அவர்கள் அரசியல் அரங்கில் பலவீனப்பட்டு விட்டனர் என்பதும் உண்மையிலும் உண்மை.

1944 ஆம் ஆண்டிலேயே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையில் இரு இனங்களுக்குமிடையே தொடர்ந்து ஐக்கியம் நிலவ வேண்டுமெனில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயாட்சிக்கு தமிழ் மக்கள் உரியவர்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனப் பிரகடனம் செய்தது. 1952 இல் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வாக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சி என்ற கொள்கை முன்வைக்கப்பட்டது.

ஆனால் தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்துப் போராடியபோது அதனுடன் இடது சாரிகள் ஐக்கியத்தைக் கட்டியெழுப்பத் தவறியது மட்டுமின்றி அதற்கான ஆதரவுச் சூழ்நிலையை தென்னிலங்கை திரட்டவும் தவறினர். இதன் விளைவு மெல்ல மெல்ல இடதுசாரிகள் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஒதுக்கப்படவும், தென்னிலங்கை தேசிய சக்திகளுக்குள் கரைந்து போகவும் வேண்டிய நிலை ஏற்பட்டது. அது மட்டுமன்றி இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளிலும் தேசிய சக்திகளுக்குத் துணைபோகும் நிலையும் தோன்றியது.

தமிழரசுக்கட்சியின் போராட்டங்கள் குறுந்தேசியவாதம் என இடது சாரிகளால் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் பெருந்தேசியவாதம் இன அடிப்படையிலான ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடும்போது குறுந்தேசிய வாதம் என்பது தவிர்க்க முடியாததும், இனத்தின் பாதுகாப்புக்கு அவசியமானதும் என்பதையும் இடதுசாரிகள் உணரத்தவறிவிட்டனர். ஆனால் தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாக தென்னிலங்கையின் உழைக்கும் மக்களை இடதுசாரிகள் அணிதிரட் டியிருந்தால், குறுந்தேசிய வாதம் உருவாவதைத் தடுத்திருக்கலாம் என்பது மட்டுமன்றித் தமிழரசுக் கட்சியின் மேற்குலக சார்பையும் பலவீனப்படுத்தியிருக்கலாம்.

அதுமட்டுமன்றி பண்டா- செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் நாடு பரந்த போராட்டங்கள் நடத்தப்பட்ட போது ஆதரவாக இடதுசாரிகள் போராட்டங்களை நடத்தி எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவுக்கு துணைநின்றிருந்தால் சில சமயம் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதைத் தவிர்த்திருக்கலாம்.

இப்படியாக இலங்கையின் வரலாற்றில் இடது சாரிகள் இனப்பிரச்சினை தொடர்பாகச் சரியான கொள்கைகளைப் பிரகடனம் செய்தபோதும் நடைமுறையில் நேரெதிராகவே செயற்பட்டு வந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற வேளையிலும் இவர்கள் அதற்கு எதிராக வசைபாடவும், கொச்சைப்படுத்தவும் தயங்கவில்லை.

இன்றைய உலகமயமாக்கல் சந்தைப் பொருளாதாரத்தின் பிரதான இலக்கு உலக மக்கள் அனைவரையுமே பல்தேசிய நிறுவனங்களின் நுகர்வோராகவும், அவர்களுக்கு மனித உழைப்பை விற்பவர்களாகவும் ஆக்குவதே. எனவே தேசிய இனங்களின் உணவு, உடை,பாரம்பரிய பழக்க வழக்கங்கள், கலைகலாசாரம், விளையாட்டு, சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரம் ஆகிய தனித்துவங்களைச் சிதைப்பதேயாகும். அந்த வகையில் இடம்பெறும் போர்கள் முதற்கொண்டு ஒப்பந்தங்கள், உதவிகள் என அனைத்து அம்சங்களும் தேசங்களினதும், தேசிய இனங்களினதும் தனித்துவங்களைச் சிதைக்கும் வகையிலேயே வகுக்கப்படுகின்றன. இவை காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப வெவ்வேறு வடிவங்களில் அமையும்.

அந்த வகையில் இலங்கையில் ஏற்கனவே நிலவி வந்த இனமுரண்பாடுகளைக் கையாண்டு தமிழினத்தின் தேசிய தனித்துவத்தை அழிக்கப் பேரினவாத சக்திகள் முன்னிறுத்தப்பட்டன. அதன் பின்னணியில் மேற்கு நாடுகள் நேரடியதாவும் மறைமுகமாகவும் துணை நின்றதை நாமறிவோம்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் தமிழ் மக்களின் தேசிய தனித்துவத்துக்கும், சுதந்திரத் தன்மைக்குமான போராட்டமாக விளங்கியது. எனவே முற்போக்கானதும், தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகவும், உலக வல்லாதிக்கத்துக்கு எதிரானதுமாக அமைந்தது. இன்னும் சொல்லப் போனால் மாக்ஸிய அடிப்படையில் இது ஒரு விஞ்ஞான பூர்வமான நகர்வு.

இந்த முற்போக்கான அம்சத்தை புத்தகவாத இடதுசாரிகள் பிடிவாதமாகக் கண்டு கொள்ள மறுத்தனர். விடுதலைப்புலிகளின் தவறுகளை விமர்சனம் செய்வதிலும், அவர்களைப் பயங்கர வாதிகளாகக் காட்டுவதிலுமே கூடுதல் அக்கறை செலுத்தினர். அத்தனைக்கும் விடுதலைப் புலிகள் தவறே செய்யவில்லை என நாம் சத்தியம் செய்ய வரவில்லை. ஆனால் எந்த ஓர் அமைப்புக்குள்ளும் தவறுக்கும், சரிக்குமிடையேயான போராட்டம் தவிர்க்க முடியாதது.

அப்படியான நிலையில் சரிகளில் தங்கி நின்று தவறுகளைக் களைந்து முன்செல்வதே விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையாகும். ஆனால் இந்தப் புத்தகவாத இடதுசாரிகளோ தவறுகளையே தூக்கிப் பிடித்து விடுதலைப் புலிகள் கொஞ்சம்கூட நல்ல அம்சம் இல்லாத பிற்போக்குச் சக்திகள் எனக் கணக்கிட்டனர்.

இன்று உலகபிற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்று திரண்டு விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துவிட்டனர். அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளத்தவறியமையும், எதிரியின் பலத்தையும் தமது பலத்தையும் சரியாகக் கணக்கிடாமையும் எதிரிகளுக்கிடையேயுள்ள முரண்பாடுகளைச் சரியாகக் கையாளாமையும் இலங்கை ஆட்சிப் பீடத்தினருக்கு இந்த வாய்ப்பை வழங்கியது என்பதையும் மறந்துவிட முடியாது. இந்த அம்சங்களை விமர்சித்திருந்தால் அது பயனுள்ள வகையில் அமைந்திருக்கும். அதை அவர்கள் செய்யவில்லை என்பது நான் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போது இந்தப் புத்தகவாதிகள் தங்கள் கறைகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்மீது வீசத்தொடங்கி விட்டனர். அவர்கள் மேற்குலக விசுவாசிகள் என விமர்சிக்கவும் ஆரம்பித்துவிட்டனர்.

இன்று இலங்கை அரசு தனது கட்டுப்பாட்டுக்கு வெளியே சென்றுவிடாமல் இருக்க மேற்குலகம் போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் போன்ற விடயங்களைக் காட்டி இலங்கையை மிரட்டி வருகிறது. ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் இந்நிலைமையை பாவித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு சில ராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளுவதில் என்ன தவறு இருக்க முடியும்.

அப்படியானால் தமிழினம் தமது உரிமையைப் பெற எதுதான் வழி? அவர்கள் லண்டனிலும் கொழும்பிலும் இருந்து கொண்டு வெகுஜன எழுச்சிகளை உருவாக்க வேண்டுமென ஆலோசனை சொல் கின்றனர். ஆயுதப் போராட்டத் தையே விமர்சித்தவர்கள் வெகுஜனப் போராட்டங்கள் பற்றி வழிகாட்டுகிறார்கள்! வியப்புத்தான்!

இத்தகைய புத்தகவாதிகள் வெள்ளையாடை கசங்காமல் தொலைதூரங்களில் நின்று விமர்சிப்பதை விட மக்கள் நீரைப் போன்றவர்கள், கம்யூனிஸ்டுகள் மீனைப் போன்றவர்கள் என மாஓசேதுங் அவர்கள் கூறியதை எற்றுக் கொண்டு ஏதாவது பயனுள்ள காரியங்களில் ஈடுபடுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலாயுதம்




விமர்சனம்

தங்! தங்கையே உலகம் என்று எண்ணிப் படு அப்பாவியாக வாழும் ஒரு கிராமத்தவன் நகரத்துக்கு வரும் வேளையில் தற்செயலாகப் பத்திரிகையாளர் ஒருவரால் படைக்கப்பட்ட ஒரு கற்பனையான சாகசவீரன் பாத்திரமாக மாறிவிட அடுத்து இடம் பெறும் மோதல்கள் அந்த அப்பாவி சாகச மனிதன் சந்திக்கும் சவால்கள் என்று நீளும் ஒரு விறுவிறுப்பான காட்சிகள் அமைந்த படம்தான் வேலாயுதம். விஜய், ஜெனிலியா, ஹன்ஸிகா, மோத்வானி மற்றும் பலர் நடித்துக் கடந்த தீபாவளிக்கு வெளிவந்த படம்தான் வேலாயுதம். சென்னை நகரத்துக்கு குண்டு வைக்கத் திட்டம் தீட்டுவது போல் வேலாயுதம் படத்தின் கதை தொடங்குகிறது. அவர்களின் திட்டம் நிறைவேற ஒரு தமிழ்நாடு அமைச்சரையும் கடத்துகிறார்கள். அவரும் தீவிரவாதிகளின் துணையாக செயற்படுகிறார்கள். இந்த விஷமிகளுடன் சேர்ந்த தமது ஆள்களின் துணையுடன் பல இடங்களில் குண்டு வைக்கிறார். அந்த அமைச்சர் இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தையும் அமைச்சரின் அடி ஆள்களின் செயற்பாடுகளையும் பத்திரிகையாளரான ஜெனிலியாவும் அவரின் சில நண்பர்களும் படம் பிடிக்க முயல்கின்றனர். இதனைக் கண்ட அமைச்சர் மற்றும் அவரது அடி ஆள்கள் ஜெனிலியாவின் நண்பர்களை எரித்துக் கொன்று விடுகின்றனர். ஜெனிலியாவைத் தாக்கிவிட்டு மீண்டும் குண்டு வைப்போம் என்று சொல்லிவிட்டு வாகனத்தில் ஏறும்போது சிகரெட்டைப் பற்ற வைக்கின்றனர். அந்த நெருப்பு தவறி வாகனத்தில இருந்த பெற்றோல் மீது விழ வாகனம் தீப்பற்றி எரிந்து அந்த அடி ஆள்கள் இறந்து விடுகின்றனர். ஜெனிலியாவும் குறும்புத் தனமாக ஒரு பேப்பரில் இவர்களை நான்தான் கொன்றேன் சக ஆள்களையும் அழிப்பேன் என்று எழுதி அதில் வேலாயுதம் என்று எழுதிவிட்டு போகின்றார். 'வேலாயுதம்' என்ற கதாபாத்திரத்தில் வரும் விஜய் கிராமத்தில் பாசக்கார அண்ணனாக தங்கையுடன் நிம்மதியாக வாழ்ந்து வருகிறார். தங்கையின் திருமணத்துக்காகத் தான் சீட்டுக் கம்பனியில் சேமித்து வைத்த பணத்தை எடுக்க சென்னைக்கு வருகின்றார். சென்னைக்கு வந்த இடத்தில் விஜய் செய்யும் சில செயற்பாடுகள் தீவிரவாதிகளுக்கு எதிராக மாறிவிடுகிறது. அதேபோல் தற்செயலாக ஓர் இடத்தில் அவர்களிடமிருந்து ஜெனிலியாவைக் காப்பாற்றுகிறார் விஜய். அப்போது விஜயிடம் நீதான் மக்களைக் காக்கும் வேலாயுதம் என்கிறார் ஜெனிலியா. விஜய் இதை ஏற்க மறுக்கின்றார். விஜய் செய்த செயல்கள் ஏதேச்சையாகத் தீவிரவாதிகளுக்கு எதிராக அமைந்ததைப் பற்றி விளக்கிக் கூறுகிறார். இதையெல்லாம் ஜெனிலியா கூறி விஜயை வேலாயுதமாக மாறி தீவிரவாதிகளை அழிக்க வேண்டும் என்கிறார்.

ஆனால் அதை மறுத்துவிடுகிறார் விஜய். விஜயுடன் சீட்டுக் கம்பனியில் பணம் சேமித்து வைத்தவர்களில் ஒருவராக விடுகிறார் இளவரசு. ஆனால் அந்தச் சீட்டுக் கம்பனி பலரை ஏமாற்றி விடுகிறது. அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத இளவரசு, தற்கொலை செய்து கொள்கிறார். அவரது மரணத்துக்குப் பிறகு விஜயின் மனம் மாறுகிறது. அதன்பின் விஜய் வேலாயுதமாக மாறுகிறார். இதற்கிடையில் ஜெனிலியாவுக்கு விஜய் மீது காதல் வருகிறது. ஆனால் விஜய் தனது முறைப் பெண்ணான ஹன்சிகா மோத்வானியை காதலிப்பதாகச் சொல்ல அவர்களுக்காகத் தனது ஒரு தலைக் காதலை விட்டுக் கொடுக்கிறார் ஜெனிலியா .கிராம வாசியாக ஒரு பால்காரராக வரும் விஜய் வேலாயுதமாக மாறி வில்லனையும் அவரது ஆள்களையும் ஒழித்துக் கட்டுகின்றார்.

ஜெனிலியா ஹிந்தியிலும் தமிழிலும் பெயர் பெற்ற பெண். ஏன் தமிழில் மட்டும் பிரபல்யம் அடையத் தெரியவில்லை. இந்தப் படத்திலும் தியாகி ரோல்தான். கூடவே நடிக்க முயற்சிக்கும் காட்சிகளில் முகபாவம் வேறு லூசுப் பெண் மாதிரி இருக்கிறது. விஜயுடன் பாடல்களில் தூள் கிளப்புகிறார். சந்தானம் நகைச்சுவைக் காட்சிகளில் பட்டையைக் கிளப்புகிறார். விஜயின் தங்கையாக வரும் சரணியா, ஹன்சிகாவின் அப்பாவாக வரும் எம்.எஸ்.பாஸ்கர், பொலிஸ் அதிகாரியாக வரும் ஷயாஜி ஷிண்டே அனைவரும் அவரவர் பணிகளை நன்றாகச் செய்துள்ளனர். இளவரசு, பாண்டியராஜன், ராகவ், சிங்கமுத்து, வையா புரி, சூரி ப்ளைக் பாண்டி ஆகியோர் சிறிய நேரத்துக்கே தலையைக் காட்டினாலும் அவரவர் பணி சிறப்பாக உள்ளது. விஜய் ஆண்டனியின் இசை இந்தப் படத்துக்கு மெருகு ஊட்டுகிறது. ப்ரியன் ஒளிப்பதிவு பின்னியெடுக்கிறது.

வி.ரி.விஜயனின் எடிட்டிங் இந்தப் படத்துக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது. அனைத்தையும் தாண்டி இந்தப் படத்தின் வசனங்கள் மிகுந்த பாராட்டுக்களைக் குவித்து வருகிறது. இந்தப் படத்தின் கதை 'ஆசாத்' என்ற தெலுங்குப் படத்தின் ரீமேக் என்று கருதப்படுகிறது. ரீமேக்காக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு ஏற்றவாறு பல மாற்றங்களைச் செய்து படம் வெளிவந்திருக்கிறது. விஜய்க்கு பழக்கப்பட்ட காட்சிகள். ஆனாலும் ஏதோவொரு மாற்றம் கொடுக்க முயற்சி செய்திருக்கிறார். பாடல் காட்சிகளில் விஜய் தூள் கிளப்பி இருக்கிறார். ரத்தத்தின் ரத்தமே பாடல் விஜய் ரசிகர்களுக்கென்றே உருவாக்கப்பட்டதாக இருந்தாலும் உறுத்தாமல் கதையோடு நகர்கிறது. வழக்கம் போல் விஜய் தனது காமெடி, நடணம், செண்டிமெண்ட் என அனைத்து அம்சங்களிலும் அசத்தி இருக்கிறார். உங்க நாட்டில இருக்கிற முஸ்லிம்களை விட எங்கட நாட்டில் இருக்கின் முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று சொல்லுகின்ற விஜயின் வசனம் பட்டையைக் கிளப்புகின்றது.

கில்லிமாதிரி ஒரு படம் வராதா என எதிர்பாரத்த மக்களுக்கு வேலாயுதம் படம் ஈடு செய்திருக்கிறது எனலாம். வேலாயுதம் படம் பார்க்கின்ற போது பிரபாகரன் வேலுப் பிள்ளையின் பிள்ளை, முருகன் வேலுக்குப் பிள்ளை என்று கவிஞர் அறிவுமதி எழுதிய கவிதை ஞாபகத்துக்கு வருகிறது.

- குமார்.

# இதயத்தை லயிக்க வைத்த கொக்குவில் இந்துவின் முத்தமிழ்ப் பெருவிழா

பாடசாலைகள் வெறுமனே பாடத்திட்டத்தை மட்டும் பூரணப்படுத்தி, பரீட்சைப் பெறுபேறுகளோடு இயந்திரத் தன்மையான மனிதர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகாது, அவற்றை உயிர்ப்போடு வைத்திருக்க உதவுவன இணைப்பாட விதான செயற்பாடுகளாகும்.

மனிதனின் ஆன்மாவை லயப்படுத்தி, அமைதிப்படுத்தி, இதயத்தில் ஈரம் கொள்ளச் செய்வதில் அழகியல் கலைகள் பிரதான இடத்தை வகிக்கின்றன. பாரம்பரியங்கள், கலை, கலாசாரங்கள், பண்பாட்டு விழுமியங்கள், தலைமுறைகளின் பெருமைகள் என்பவற்றை அடுத்து வரப் போகும் சந்ததிகளுக்குக் கையளிக்கின்ற மாபெரும் கடப்பாட்டை அழகியல் கலைகள் தன்னகத்தே கொண்டுள்ளன.



தொலைக்காட்சியின் முன்னே தன்னைத் தொலைத்து, மலினமான தென் னிந்திய தயாரிப்புக்களில் மூழ்கிப் போயிருக்கும் எமது சமுதாயத்தை, குறிப்பாக இளைய சமுதாயத்தை சரியான பாதையில் திருப்ப வேண்டிய காலத்தின் தேவை, கடப்பாடு யாவருக்கும் உண்டு என்பதில் அடுத்த கருத்துக்கு இடமில்லை.

அந்த வகையில் உதயனில் வெளியான 'தேவை ஒரு தமிழ்ச்சங்கம்' என்ற பத்தி எழுத்துக்கு விடையாக கொக்குவில் இந்துவின் 'முத்தமிழ்ப் பெருவிழா' முகிழ்த்தது மிகப் பொருத்தமாயிருந்தது. மாணவரின் ஆளுமை விருத்தியையும் காலத்தின் தேவையையும் எமது பண்பாடுகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய கடமையையும் கருத்தில் கொண்டு இந்த விழாவை ஒழுங்கமைத்த கல்லூரி அதிபர் அ.அகிலதாசும் முத்தமிழ் மன்றத்தினரும் உண்மையிலேயே பாராட்டுக்குரியவர்கள். ஐப்பசி முப்பத்தோராம் திகதி, திங்கள் இளங்காலை, கருமுகில்கள் சூழ்ந்த பொழுது எப்போது மண் தொடலாம் என்ற தவிப்புடனிருந்த மழை, தமிழுக்குத் தலைசாய்த்தன. தமிழ்ப் பாரம்பரியப்படி உடை அணிந்த மாணவர்களும், ஆசிரியர்களும் பண்பாட்டை நயக்க வைத்தனர்.

மங்கல இசையை நிறைக்க வைத்தன. நாதஸ்வரமும், தவிலும் பூரண கும்ப மரியாதைகளோடு விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். ஐம்பெருங் காப்பியங்கள் அணிகலன்களாய் அழகு சேர்க்க கரும்புகள் சூழ நிமிர்வோடு அமர்ந்திருந்தாள் தமிழ் அன்னை. தமிழே இனிமை; கரும்பும் சேர்ந்தால்...?

சூழ்நிலைக்கு ரம்மியமானதாக அமைந்தது வரவேற்பு நடனம். விருந்தினர்களைக் குறிப்பிட்டு பாமாலையாய் அமைந்த வரவேற்பு நடனம் உண்மையில் அவர்களுக்கான பூமாலைகளே.''பாரதியார் பார்வையில் பெண்'' என்ற தலைப்பில் செல்வி.ஜஸ்மிலாவின் பேச்சு கனதியானதுதான்.

அடுத்து மதூவினின் தனி இசை, என். மதிரூபனின் மிருதங்கம், செல்வி காயத்ரி பத்மநாதனின் வயலின் அணி சேர்க்க இனிமையான தமிழ்ப் பாடல்களைப் பாடினர்.

அடுத்ததாகச் செல்வி ரஜிதா சின்னத்துரையின் தயாரிப்பில் திருமதி உதயநிதி கனகராஜாவின் இசையில் கஜேந்தினி பரமேஸ்வரனின் தனி நடனம், அடுத்து அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற செல்வி சுபானுஜா ஜெகதீஸ்வரனின் நடனம் . தலைவராக அரங்கை அலங்கரித்தவர் செல்வன் சித்தார்த். சித்தார்த்தின் கருத்தாழம் மிக்க பேச்சும் தொனியும் பாராட்டுக்குரியவை. சொற்கள் உச்சரித்த விதமும் அமரிக்கையும் இந்த வயதில் அதிசயம்தான்.

எம் மண்ணிலிருந்து கரைந்து கொண்டிருக்கும் எத்தனையோ உயர்ந்த விடயங்களில் பாரம்பரிய கலைகளும் ஒன்று. தென்மோடி, வடமோடி, நாட்டுக் கூத்து, குதிரையாட்டம்.. இவற்றைப் பார்க்கவோ பேசவோ யாருக்கு நேரமிருக்கிறது ? ஆனாலும் அவற்றுக்கான புத்துயிர்ப்பு ஊட்டும் முகமாக குதிரையாட்டம் அமைந்திருந்தது பாராட்டுக்குரியது. ரஜீவனின் தயாரிப்பில் உருவான குதிரையாட்டம், பாடசாலை விழா ஒன்றில் அரங்கேற்றப்படுவது புதிதுதான். தமிழ்த் தாய்க்கு நிச்சயம் தொண்டாற்றுவோம் என்ற அதிபரின் உணர்வு பூர்வமான பேச்சில் தெரிந்த உண்மை, மரபுக் கலைகள் மறைவதுபற்றிய கவலை என்பன குதிரையாட்டத்துக்குக் களமமைத்தது வரவேற்கப்பட வேண்டிய வாழ்த்தப்பட வேண்டிய விடயம்.

அடுத்து பார்ப்போரை வசீகரித்த நிகழ்வு 'உய்தனன் உலகம் உய்ய' என்னும் நாட்டிய நாடகம். திருமதி கந்தவேளின் எழுத்தாக்கத்தை, நடைமுறை வாழ்வோடொட்டி கந்தசஷ்டி விரத காலத்தில் ஒரு சூரன்போரை மேடையில் அரங்கேற்றிய தைரியத்துக்கு செல்வி. ரஜிதா சின்னத்துரைக்கு சபாஷ். தேவ, அசுர கணங்களுக் கிடையேயான போரும், சூர சம்ஹாரமும் இதைவிடத் தத்ரூபமாய் காட்ட இனி முடியாது என்று சொல்லுமளவு மிகச் சிறப்பான நடன அளிக்கை.

மாணவிகளால் இசைக்கப்பட்ட குழு இசையில் தொனித்த ஒத்திசைவு நிறைவை அளித்தது. பாடப் பாடத்தான் ராகம்- முதுமொழி சொல்கிறது. செல்வி சாமந்தியின் பேச்சைத் தொடர்ந்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நிகழ்ந்தது.

இறுதியாக சந்திரசேகரத்தின் நெறியாள்கையில் உருவான 'கனவு மெய்ப்பட வேண்டும்' நாடகம் காப்பியப் பெண்மையையும் நவீன பெண்மையையும் ஒட்டியும் வெட்டியும் நகர்கிறது கதை. பாத்திரங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பொருத்தப்பாடு மெச்சுதற்குரியது. பாத்தி ரங்கள் பேசும் நீண்ட வசனங்களைக் குறைத்தி ருந்தால் ஒலி, ஒளி அமைப்புக்கள் சீராயிருந்திருந்தால் இன்றும் விறு விறுப்பாகக் கனவு மெய்ப்பட்டிருக்கும். பாத்திரங்கள் பேசுவது கேட்காதிருப்பது பார்ப்போருக்கும், நாடகத்துக்குமான இடைவெளியை அதிகரிப்பது தவிர்க்கப்பட வேண்டும். 2012 ஆம் ஆண்டுக்கான முத்தமிழ்ப் பெருவிழா இவற்றை எல்லாம் நிவர்த்தி செய்த பெருவிழாவாக, 'தேமதுரம்' இதழ் வெளி யீட்டுடன் நிகழும் என்ற எதிர்பார்ப்பு உறுதி பெறுகிறது.

பிரதம விருந்தினராக அரங்கை அலங்கரித்தவர் பேராசிரியர் சிவலிங்கராஜா. இளம் பருவத்திலேயே சொற்பிழை, எழுத்துப் பிழை தவிர்த்து சரியாக எழுத வைக்கும் பணியைச் செவ்வனே செய்ய ஆசிரியர்களை வேண்டினார். அத்துடன் கல்லாரசனையுள்ள சந்ததிகளை உருவாக்க வேண்டும் என்பதை விழாவின் செய்தியாகத் தெரிவித்தார். சிறப்பு விருந்தினரான தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருணேசன் தமது உரையில் தரமான நிகழ்ச்சிகளை வழங்குவதில் கொக்குவில் இந்துவுக்கு எப்போதும் முதலிடம் எனத் தெரிவித்தது சாலப் பொருத்தமானது.

- பிருத்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் தமிழிசை ஒலிக்கச் செய்தவர்

# சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம்

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 17

தென்னகச் செவ்விசை அரங்குகளில் தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளே தொடக்க காலத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. தமிழ் மொழியானது இசைக் கச்சேரிகளில் புறக்கணிக்கப் பட்டு வந்த காலத்தில் இம்மொழியின் தனித்துவத்தை யும் புனிதத்தையும் பெருமையையும் பல தமிழ் அறி ஞர்களும் ஆர்வலர்களும் இசையறிவுடன் தமிழறிவு கொண்ட பாடகர்களும் ஒன்றிணைந்து உலகிற்கு எடுத்தியம்பினர்.

ஏராளமான தமிழிசைப் புலவர்கள் தமிழ் நாட்டில் இவ்விசையின் வளர்ச்சியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டு வெற்றியடைந்ததன் ஊடாகத் தமிழிசையானது பெரும் வளர்ச்சி கண்டது.

அந்த வகையில் தலைசிறந்த பாடகராகவும் ஒப்பற்ற இசை ஆசிரியராகவும் தூய மனம் கொண்ட நல்மனிதராகவும் விளங்குவதுடன் ஈழத்தின் தமிழிசை வளர்ச்சியில் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளிற்கும் மேலாக முழுமூச்சுடன் பணியாற்றி வருபவர் தமிழுணர்வாளர் சங்கீத பூஷணம் ச.பாலசிங்கம்.

மறைந்த சபாபதிப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகனாக 15.09.1929இல் அரியாலையில் இவர் பிறந்தார். இவரது தந்தையார் இசை நாடகத் துறையில் நடிகராகவும் ஹார்மோனியக் கலைஞராக வும் எழுத்தாளராகவும் அக்காலத்தில் புகழ் பெற்றவர். தனது தந்தையிடம் குரலிசையையும் ஹார்மோனியத் தையும் கற்றுக் கொண்டதுடன் நாடக நுட்பங்களையும் சிறுவயதிலேயே தெரிந்து கொண்டார். கொழும்புத் துறை இந்து மகாவித்தியாலம், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, கோப்பாய் சாதனா பாடசாலை, கனகரட்ணம் மகா வித்தியாலம், பரமேஸ்வராக் கல்லூரி போன்ற இடங்களில் கல்வி கற்ற இவர் பாடகராகவும் கருவியாளராகவும் சிறு வயதிலேயே உயர்வு கண்டார்.

1955இல் தமிழ் நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று நான்கு ஆண்டுகள் இசை கற்று சங்கீதபூஷணம் என்னும் பட்டத்தைப் பெற்றுக்கொண் டார். இக்காலத்தில் இசை மேதைகளான எம்.எம். தண்டபாணிதேசிகர், ரி.கே.ரங்காச்சாரியார், ரி.என். சிவசுப்பிரமணியம், மயிலம் வஜ்ரவேல் முதலியார், எஸ்.பார்த்தசாரதி போன்ற பலரிடம் கற்றுத் தன்னை வளப்படுத்திக் கொண்டார். வரன் முறை தவறாத இசைக் கல்வியை இங்கே பெற்றுக்கொண்ட இவர் 1958இல் தலைசிறந்த ஆற்றுகையாளனாகவும் ஆசிரி யராகவும் தாயகத்தில் காலடி பதித்தார்.

02.05.1959இல் யாழ்ப்பாண நகர சபை மண்ட பத்தில் இவரது குரலிசை அரங்கேற்றமானது எண் ணற்ற இசையாளர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள் முன்னிலையில் சிறப்புற நடைபெற்றது. சுருதி, லயம் பிசகாமல், பாடலின் பொருளை உணர்ந்து பக்தியுட னும் பாவத்துடனும் இசைக் கச்சேரியின் நெறிமுறை கள் வழுவாமலும் ஆற்றுப்படுத்தப்பட்ட இவரது அன்றைய இசை அரங்கானது மண்டபத்தை நிறைத்து நின்ற சுவைஞர்கள் அனைவரையும் கொள்ளை கொண் டது. இதன் பின் ஈழத்தில் இவரது உன்னதமான இசைப் பணியானது செவ்வனே தொடங்கியது.

1959இல் இசை ஆசிரிய நியமனம் பெற்று கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை, மகேஸ்வரி வித்தியாசாலை, நல்லூர் ஸ்தான தமிழ் கலவன் பாட சாலை போன்ற பள்ளிகளில் முப்பது ஆண்டுகளாக இசை ஆசிரியராகப் பணியாற்றி 1989இல் ஓய்வு பெற்றவர். மாணவர்களை அன்புடனும் மதிப்புடனும் அணுகும் இயல்புடைய இவரிடம் இசைகற்று உயர்ந்தோர் வரிசையில் பலரைக் குறிப்பி டலாம். எஸ்.நாகராசா, குணபூஷணம் நாகராசா, மாணிக்கம் யோகராசா, யோ. யாதவன் போன்ற சிறந்த குரலிசை ஆற்றுகையாளர் களை உருவாக்கிய இவரே ஈழத்தின் இசை வரலாற்றில் சாதனைகள் பல படைத்த அமரர் சங்கீத பூஷணம் எல்.திலகநாய கம் போலின் தொடக்க காலக் குருவுமாவார்.

ஏராளமான இசை மன்றங்கள் அக்காலத் தில் இசைக் கலையை வளர்த்து வந்த போதும் அவை தமிழிசையில் நாட்டம் குறைந்த னவாகவே இருந்து வந்தன. இக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக தோற்றுவிக்கப்பட்ட அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் இசையாசிரியராகப் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த இவர் அம்மன் றத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஏற்றுப் பல ஆண்டுகளாகத் தமிழிசை வளர்ச்சியில் அரும்பாடு பட்டு வந்தார்.

இம் மன்றமானது மாதாந்த இசை விழாக்களையும் வருடாந்த இசை விழாக்களையும் சிறப்புற நடத்தி ஏராளமான இளம் கலைஞர்களை உருவாக்கியதுடன் நல்லதோர் இசைப் பண்பாட்டையும் வளர்த்தெடுத்தது.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறையில் ஆறு ஆண்டுகளிற்கும் மேலாக வருகை விரிவுரையாள ராகவும் பரீட்சகராகவும் கடமையாற்றிய இவர் வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சகராகவும் இசைப் பணியாற்றி வந்துள்ளார். இவ்வாறு சிறந்த இசை ஆசிரி யராகவும் ஆற்றுகையாளராகவும் திகழும் இவர் ஹார்மோனியத்தில் தனியிசைக் கச்சேரிகளை வழங்கிய புரட்சியாளர் என்பதுடன் இசை நாடகம் முதலான அனைத்து நிகழ்வுகளிலும் இக்கருவியைத் திறம்பட இசைத்த கலைஞராகவும் தமிழிசைப் பாடல் கள் பலவற்றைப் புதிதாக இயற்றிய பாவலராகவும் காணப்படுகிறார். வானொலி, தொலைக் காட்சி போன்ற ஊடகங்களில் அதி உச்சதரப் பாடகராக உயர்வு கண்ட இவர் மிருதங்க, நடன அரங்கேற்றங்களிலும் தனது தனித்துவமான இசைத்திறனை வெளிப்படுத் தியவர் என்பதும் இவரது பிள்ளைகள் அனைவரும் இசை, நடனத் துறைகளில் வல்லவர்களாக உருவாக் கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

சுருதி ஞானத்தை வளர்த்துக் கொண்டால் ஸ்வர ஞானம் தானாக வந்து விடும். ஸ்வர ஞானத்தை மேம்படுத்திக் கொண்டால் நெருடலான சங்கதிகள், சிக்கலான ஸ்வரப் பயன்பாடுகள், நுட்பமான ஸ்வரப் பின்னல்கள் போன்ற அனைத்தும் துல்லியமாக மனதில் வெளிப்படும். இவை அனைத்தும் கைவரப் பெற்றால் இராக ஞானம் வளம் பெறும். எனவே சுருதி ஞானத்தையும் ஸ்வர ஞானத்தையும் ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டுமாயின் ஏதாவது இசைக் கருவியைக் கற்றுக் கொள்ளுதல் அவசியமானதாகும். அதிலும் ஹார்மோனியம் என்னும் இசைக் கருவியானது ஸ்வரஸ்தானங்களையும் சுருதி பற்றிய விளக்கங்களையும் ஐயம் திரிபுறத் தெளிவுபடுத்தக் கூடிய சிறந்ததோர் கருவியாகும்.



ஆனால் சில இசையாளர்கள் இக் கருவியை மொட்டை வாத்தியம் என்று கூறிப் புறந்தள்ளி வருகின் றமை வேதனைக்குரியதாகும். அவர்கள் இக்கருவியை அவமதிப்பதனூடாக சுருதி ஞானத்தையும் ஸ்வர ஞான்த்தையும் கிரகபேத அறிவையும் இலகுவாத் தெரிந்து கொள்ளும் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விடுகின்றனர் என்றே கூறுலாம். எதிர் காலத்திலாவது இசையாசிரியர்கள் அனைவரும் இக் கருவியைக் கற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✱

**சொலிவான் தவமைந்தன்**

# உடல் சூடு தணிவடைய பம்பந்தரா இலைப் பொடி

**பம்பந்தரா**

வேறு பெயர் தரா, துரா, மதுகம்
தாவரவியற் பெயர்- Fumaria Parviflora
(ஃபியுமேரியா பார்விஃப்ளோரா)
குடும்பம் Fumariaceae (ஃபியுமரிபேசிபே)
ஆங்கிலப் பெயர்-Common Fumitory

இது பூண்டு. நிலத்தையண்டியப் படர்ந்து காணப்படும். இதில் சாதாரண தரா, செந்தரா என்ற பேதங்களுண்டு.

இதன் இலையை பொடித்து சிறிதளவு மிளகுதூள் கலந்து தேனுடன் காலை, மாலை சாப்பிட்டுவர சுரம், உட்சூடு தணிவடையும்.



இலையுடன் சிறிது மஞ்சள் சேர்த்தரைத்துக் கட்டு, பிளவைக்குப் பூசிவர அவை பழுத்து உடையும்.

இலையை உலர்த்திக் குடிநீர் செய்து காலை, மாலை பருகிவர மலர்ச்சிக்கல், மூலநோய், நாச்சுவையின்னை என்பன நீங்கும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**வாதமடக்கி**

வேறு பெயர் தழுதாழை, தக்காரி
தாவரவியற் பெயர்-Clerodendron Phlomides
(கிளிரோடென்ட்ரோன் பிலோமிட்ஸ்)
குடும்பம்: Verbenaceae (வேபினேசிபே)
சிங்களப் பெயர் : காஸ் பின்ன
சமஸ்கிருதப் பெயர்: வடக்ரி
ஆங்கிலப் பெயர் -Wind Killer

சிறுமர வகுப்புக்குரியது. தனிஇலைகள், சிறியவை, வேர்களிலிருந்து உறிஞ்சிகள் தோன்றும்.

பெயருக்கேற்ப இது வாதநோய்களைக் கட்டுப்படுத்துவதில் பெரிதும் உதவுகிறது. இதன் இலையைத் தனித்தாவது கருநொச்சியிலை, இலுப்பையிலை, பருத்தியிலை என்பவற்றுடன் சேர்த்தாவது குருணலாக அரிந்து துணியில் பொட் டலமாகக் கட்டி ஆமணக்கெண்ணையில் தோய்த்து இடியப்பத் தட்டில் வைத்துச் சூடாக்கி வாதவீக்கம், வாதப்பிடிப்பு, முடக்குவலி முதலியவற்றுக்கு ஒத்தடம் கொடுத்துவர மாறும்.



இலையை உலர்த்துப் பொடித்து காலை, மாலை பனங்கட்டி சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் வாதநோய்கள் மாறும்.

இலையை நீர்விட்டவித்து அந்த நீரால் வலியுள்ள இடங்களைக் கழுவிவர வலி, வேதனை நீங்கும்.

வாதவீக்கங்களுக்கு இலையில் ஆமணக் கெண்ணை தடவி, வெதுப்பி, வைத்துக் கட்ட வீக்கம் வற்றும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 187

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | 10 | | | 11 | |
| | | 12 | | | 13 | | |
| | 14 | | | | | | |
| 15 | | | | | 16 | 17 | |
| 18 | | | | 19 | | | 20 |
| 21 | | | 22 | | | 23 | |

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. அருச்சுனன் மகன்
5. கூட்டுதல் குறியீடு
7. மாறுபாடு
8. கீறுதல்
9. உடல் இயக்கத்துக்கு உதவும் உடற்பகுதி
10. வேகம்
11. குரங்கு
12. இசைப்பாட்டு
13. அன்னை
14. கண்டித்து வெளியிடும் கூற்று
15. படிப்பது இதற்கு
16. நீர்த் தன்மையான இடத்தில் படர்வது
18. சுவடு
19. நகை
21. உற்பத்தி
22. ஒரு தோற் கருவி
23. பின்னடிப்பு

### மேலிருந்து கீழ்

1. உயிர் காக்கும் மருந்து
2. குடிமகன்
3. நிலம்
4. இளம்பெண்
5. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்
6. புத்திஜீவி
10. தத்து
12. பொருள்
13. யானையின் மேல் ஆள்கள் அமரும் இடம்
14. உத்தரவு
15. இந்தக் கதிரைக்குத்தான் போட்டி
17. முத்து விளைவது இதற்குள்
19. தடுத்து வைக்கும் இடம்
20. உள் செல்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம்போட்டி - 187**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 16.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.187 இற்கான விடைகள் 20-11-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

### பாராட்டுப் பெறுவோர்

**கு.மேகலா,**
பாசாலை வீதி, துனவி.

**செல்வி ச.ஜமுனா,**
ஞான பகாங், உரும்பிராய்.

**க.தில்லையம்பலம்,**
கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 185 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) சாசுவதம் (6) குண்டம் (7) தந்தி (9) படு (10) பதவிதுற (12) கூட்டல் (13) கட்டம் (14) கொய் (15) ஆருடம் (16) தழுவு (17) குடம் (18) நேரம் (19) தின் (20) கரும்பு.

### மேலிருந்து கீழ்

(1) சாகுபடி (2) சுண்டு (3) வட (4) தம்பட்டம். (5) பந்து (7) தவில் (8) திறனாய்வு (11) தடம் (12) கூட்டம் (13) கருடன் (14) கொழும்பு (15) ஆகுதி (16) தரம் (18) நேரு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 185 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **ஆ.கணேசராம்,** இல.75, தம்பசெட்டி வீதி, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு** — **இ.தனுஷன்,** இணுவில் வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

**3 ஆம் பரிசு** — **ம.சௌந்தரேஸ்வரி,** 114, யாழ். வீதி, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு** — **வா.தேனுஜா,** மு/ மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம்.

**5 ஆம் பரிசு** — **அ.க.விதுஷாளினி,** யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# போரின்.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதர்மம் தலையெடுத்தால், குடும்பப் பெண்கள் தாம் அதிகம் களங்கப்படுவார்கள். பெண்மையின் சீரழிவால் தேவையற்ற சந்ததி உருவாகும். தேவை யற்ற சனப்பெருக்கம் குடும்பத்தை நாசமாக்கும். குடும்பப் பண்பாடு அழிந்து நிச்சயமாக நரக வாழ்க்கை வந்து சேர்ந்துவிடும்.

சீரற்ற குலத்திலே முன்னேற்றம் இல்லாது ஒழியும். பிதிரர் தெய்வம் விருந்து ஒக்கல் தான்- இவர்களைப் பற்றிய விழுமியங்கள் பூண்டோடு அழியும்.

*''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு*
*ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.''*
*[தென்புலத்தார்-பிதிரர்]*

குலப்பண்பாட்டை அழித்து, தேவையற்ற குழந்தைகளைத் தோற்றுவிக்கும் தீயவர்களின் செய்கைகளால் அனைத்து விதமான சாதிதர்மங்களும் குலதர்மங்களும் அழிவுறும். குல ஒழுக்கங்கள் கடைப்பிடிக்கப்படாவிட்டால், அந்த வாழ்க்கை நரக வாழ்க்கையே.

ஐயகோ, மாபெரும் பாவத்தைச் செய்யவல்லவா நாம் துணிந்து போர்க்களம் வந்து விட்டோம். இராச்சிய சுகத்தை அனுபவிக்கும் ஆசையால் உந்தப்பட்டுச் சொந்த உறவினர்களையே கொல்ல முனைந்து விட்டோமே.

சூதாட்டத்துக்கோ போருக்கோ அறைகூவல் விடப் பட்டால், சத்திரியன் மறுக்கக் கூடாது; சூதாடினோம். பின்னர் துரியோதனன் போர் தான் முடிவு என்றான்.

அதனால் போரையும் மறுக்க முடியவில்லை. ஆயினும், இதனால் வரப்போகும் விளைவுகள் பற்றி அவர்கள் சிந்திக்காமல் இருக்கி றார்கள். பின் விளைவுகள் நன்மையாக இருந்தால் போர் செய்யும் கடமையை நான் யோசிக்கலாம். அவ்வாறு இல்லாத போது போர் செய்யும் எண்ணம் எனக்கில்லை''.

இவ்வாறாகத் தனது கருத்தைக் கூறிய அர்ச்சுனன் கையிலிருந்த வில்லையும் அம்புகளையும் ஒருபுறம் போட்டுவிட்டு, தேரில் அமர்ந்து கொள்கிறான். அவனது மனம் துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறது.

அர்ச்சுனன் போருக்குப் பயப்படும் சத்திரியன் அல்லன்; அதேநேரம் அவன் போரினால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றிக் கூறியவைகளும் மிகை யானவை அல்ல.

தர்மயுத்தம் நடைபெற்ற அந்தக் காலத்திலேயே, அர்ச்சுனன் போரின் பின்விளைவுகள் பற்றி இவ்வளவு தூரம் வருந்துகிறான் என்றால் அநாகரிகமான முறையில், விஞ்ஞானத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி யுத்தஞ் செய்யும் இந்தக் காலத்தில் போரின் பின் விளைவுகள் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

அண்மையில் நடைபெற்ற போர்க் காலத்திலும் அதன் பின்னரும் நம் தமிழ் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் துயரச் சம்பவங்கள் நமது குலதர்மங்களை, குடும்பப் பண்பாடுகளை, மாதர் சமூகத்தை எவ்வளவு தூரம் இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறது என்பதை அகில உலகமும் அறியும் அன்றோ?

எனவே, மகாபாரதக் காவியம் நமக்குப் பலவிதமான பட்டறிவை வழங்கி நிற்கும் இலக்கியமாகவும், பகவத்கீதை என்னும் ஆன்மீக உபதேசத்தைத் தரும் பக்திச் சிந்தனை நூலாகவும் திகழ்கின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்வோமாக.

அர்ச்சுனனைப் பயன்படுத்தி ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூபாரந் தீர்க்க எண்ணுகிறார். போரின் கொடு மையைப் பற்றியோ பகவத்கீதை உபதேசம் பற்றியோ போர்க்களத்தில் யாரும் எதிர்பார்க்கவில்லை.

மாயக்கண்ணனின் லீலைகளில் இதுவும் ஒன்றா யிருக்கலாம்! உலக விவகாரம் பற்றி நண்பனாக அர்ச்சு னன் கூறும்படி செய்து பக்தித் தொண்டனாக அவனை மாற்றிப் போர்புரியச் செய்து தனது காரியத்தை முடித்திருக்கிறார் என்று சொல்லலாம்.

இவ்வாறு பார்த்தனுக்கும் பார்த்த சாரதிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் மூலம் நமக்குக் கிடைத்த பகவத்கீதையானது, உலக வாழ்வுக்கும் ஆன்மீக வாழ்வுக்கும் வழிகாட்டும் சிறந்த இலக்கியமாக விளங்குகிறது நாம் செய்த நல்வினைப் பயனேயாகும். ★

# சறுக்கு.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாமதம் என்பது போல இளைஞர் கூட்டம் முணு முணுத்துக் கொண்டிருந்தது.

இரத்தினம், ராசனைக் கூப்பிட்டு ' உவன் கந்தசாமிக்கு ஒரு ''கோல்'' எடு' என்றார்.

ராசன் ''கோல்'' எடுத்துவிட்டு 'கந்தசாமி ''அண்ணை... உங்க வாசலடிக்கு வந்திட்டாராம்...' என்ற தகவலை வழங்கினான்.

'சரி றெடி பண்ணுங்கோ'' என்று தேரில் ஏறினார் இரத்தினம்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த மதன் ''யார் இந்தக் கந்தசாமி'' என்று வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பரீட்சை, கொழும்பு, காசு, சைக்கிளில் உழக்கிய களைப்பு இவையெல்லாம் நீங்கி- இவ்வளவு சனமும் ஆவலோடு தேரின் வெள்ளோட்டத்தைப் பார்த்திருக்க பிரதான சிற்பி, 'கந்தசாமி'யைக் காணாது அங்கலாய்த்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''கந்தசாமி அண்ணை வந்திட்டார்'' என்று ராசன் உரக்கக் கூவியபடி சறுக்குக் கட்டையைக் கொண்டு சென்று அவரிடம் கொடுத்தார்.

அப்பொழுது தான் மதன் பார்த்தான் - கந்தசாமி அவனுடன் படித்த அவனொத்த வயதுடைய ஒரு இளைஞன். இந்தத் தேர் உருவாக்கத்தில் அவரின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது.

நல்ல பட்டுவேட்டி உடுத்து விரலில் மோதிரமும், மொத்தச் சங்கிலியும் போட்டவாறு மிக மிடுக்காகக் காட்சியளித்தான்.

'அரோகரா' 'இழுங்கோ' என்று கந்தசாமி கட்டளை இட, மிக ஆரோக்ஷமாக இளைஞர் அணி திரண்டு வடம் பிடித்தனர்.

உருண்ட தேர், கந்தசாமி சறுக்குக் கட்டை போட, 'பொத்' என்று நின்றது சறுக்குக் கட்டையை எடுத்துவிட்டு, கையைக் காட்டவே, இளைஞர் கூட்டம் தமது பலத்தைக் காட்டியது. மீண்டும் சறுக்குக் கட்டை கந்தசாமிதான் போட்டார்.

இந்த முறை 'பொத்' தென்று தேர் நில்லாது 'கிறுக்' என்ற சத்தத்துடன் குலுங்கி ஒரு திருப்பம் திரும்பி, சரியான பாதைக்கு வந்தது. மீண்டும் தேர் இழுப்பு சறுக்குக் கட்டை தேர் சரியான பாதையில்...

அண்ணி ஏன் தான் என் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளா என்று குமுறி... மனம் நொந்து போயிருந்த அவனுக்கு கந்தசாமியின் சறுக்குக் கட்டை ஒரு செய்தியைச் சொல்லி நின்றது. மீண்டும் கொழும்பு, பரீட்சை, பிரயாணம் புறப்பட வேண்டும், என்ற அவன் எஸ்.எல்.ஏ.எஸ். கனவுடன் கடன் பெறக் கந்தசாமியின் உதவியை நாடினான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி...

உதயன் வைத்தியமலர் 43

## முட்டுக்காய்த் தேங்காய்களை நோயாளர்கள் பயன்படுத்தலாமா?

**முற்றிய தேங்காய்களிலும் பார்க்க முட்டுக்காய்த் தேங்காய்கள் பாவனைக்கு பலவழிகளிலும் சிறந்தது என இந்தப்பகுதியில் பிரசுரமாகி இருந்ததைப் படித்தேன். முட்டுக்காய்த் தேங்காய்களில் கொலஸ்ரோல் இல்லையா? இதனை நோயாளர்களும் பயன்படுத்தலாமா? இதிலிருந்து கிடைக்கும் இளநீர் குடிப்பதற்குப் பாதுகாப்பானதா?**

இ.இராசதுரை,
சுன்னாகம்.

பலவிதமான ஊட்டச்சத்துக்களையும், புரதத்தையும், கனியுப்புக்களையும் கொண்டிருக்கும் முட்டுக்காய்த் தேங்காய்களில் முற்றிய தேங்காய்களிலும் பார்க்கக் கொழுப்பின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இவை இலகுவில் சமிபாடடையக் கூடியதாக இருக்கிறது. இதனால் இதனை நோயாளர்களும் பயன்படுத்தலாம்.

முட்டுக்காய்த் தேங்காய்களில் கொலஸ்ரோல் இல்லை. தாவர உணவுகளில் பொதுவாக கொலஸ்ரோல் காணப்படுவதில்லை. ஆனால் சில வகையான தாவர உணவுகள் உடலினுள் சென்று உடலின் கொலஸ்ரோல் தொகுப்பு வீதத்தைக் கூட்டவல்லன. எனவே கொழுப்பு அதிகமுள்ள தாவர உணவு வகையைக் குறைத்துக் கொள்வது நல்லது.

முட்டுக்காய்த் தேங்காய்களில் இருந்து கிடைக்கும் இளநீர் குடிப்பதற்கு ஒரு பாதுகாப்பான பானமாகும். இது இயற்கையான ஊட்டச்சத்துள்ள, இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படாத ஒரு நல்ல பானமாகும். இதனைப் பலர் பாவிக்காமல் வெளியே ஊற்றிவிடுகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும். பல்வேறுபட்ட விளம்பரங்களுடன், விற்பனையாகும் சோடாவகைகளுடன் ஒப்பிடும் பொழுது இளநீரை அருமருந்து என்று கூடச் சொல்லலாம்.

**சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## போலிக்கமிலம் (Folic Acid)

- நீரில் கரையக் கூடிய $B_9$ வகைக்குரிய விற்றமின் ஆகும்.
- சராசரி நாளாந்தத் தேவை.
  சிறுவர்கள்- 150- 200 Mg
  13 வயதுக்கு மேற்பட்டோர்- 400 Mg
- எமது உடலில் 4 மாதத்துக்குத் தேவையான அளவு போலிக்கமிலம் சேமிக்கப்பட்டுள்ளது.
- பயன்பாடுகள்:-
  - இதன் முக்கிய பயன்பாடு கலப்பிரிவுக்கும் கலவளர்ச்சிக்கும் உதவுதல் ஆகும்.
  - கர்ப்பவதிகள் அவசியமாக போலிக்கமிலத்தை உள்ளெடுத்தல் வேண்டும். ஏனெனில் சிசுவில் ஏற்படக் கூடிய அசாதாரணமான நரம்புமண்டல குறைவளர்சியைத் தடுப்பதற்காகும்.
  - மாரடைப்பு நோய்க்கான வாய்ப்பைக் குறைக்கும் மருந்தாகவும், சலரோகம் வகை -2 இக்குரிய மருந்தாகவும் பயன்படுகிறது.
  - இது கொழுப்புக் கலங்களில் கொழுப்பைக் கரைக்க உதவுவதால் உடற்பருமனானவர்களுக்கு உடற்பருமனைக் கட்டுப்படுத்த உதவுகிறது.
  - பாரிசவாதம் ஏற்படும் வாய்ப்பைக் குறைக்க உதவுகிறது.
  - இது ஆண்களின் விந்தாக்கத்துக்கும், பெண்களின் முட்டையின் விருத்திக்கும் உதவுவதால் கருக்கட்டலில் முக்கிய பங்கை வகிக்கிறது.
  - சிறுவர்களில் சிறுநீரக நோய்களை குறைக்க உதவுகின்றது.
  - ஞாபகசக்தியை அதிகரிக்கவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவுகிறது.
  - ஒவ்வாமை நோய்களிலிருந்து பாதுகாக்கவும் உதவுகின்றது.
  - ஆரோக்கியமாகத் தோலைப் பேணுவதற்கு உதவுகின்றது.
  - புற்று நோய் ஏற்படும் சந்தர்ப்பத்தை குறைக்க உதவுகின்றது.
- போலிக்கமிலத்துக்கான உணவுகள்:-
  - பிரதானமாக பச்சைக் காய்கறிகள்
  - முட்டையின் மஞ்சள் கரு
  - பயிற்றங்காய்
  - சூரியகாந்தி விதை
  - வாழைப் பழம்
  - அன்னாசிப்பழம்
  - பருப்பு, பயறு, உழுந்து
  - பெரிய வெங்காயம்

## குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் வலிப்புகள்

காய்ச்சல் ஏற்படும்போது சில குழந்தைகளுக்கு வலிப்பு ஏற்படலாம். இந்த வலிப்புகளால் பெற்றோர்கள் திகிலடைந்து போனாலும் கூட இவை பொதுவாகப் பிள்ளைகளுக்குத் தீங்கிழைக்காது. உங்கள் பிள்ளைகளுக்குக் காய்ச்சல் வலிப்பு வந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்தத் தகவல் விளக்குகின்றது.

**காய்ச்சல் வலிப்புகள் (ஃபெப்ரைல் சீஷர்ஸ்) என்பது என்ன?**

தசைகளில் திடீரென ஏற்படும் கட்டுப்படுத்தப்பட முடியாத குறுகிய துடிப்பு வலிப்புகளாகும். இந்த வலிப்புகள் காய்ச்சலால் ஏற்படுத்தப்படும் போது அவை காய்ச்சல் வலிப்புகள் எனப்படுகின்றன. இந்த வலிப்பு 06 மாதம் தொடக்கம் 05 வயது வரையான குழந்தைகளுக்கு ஏற்படலாம்.

**உங்கள் பிள்ளைகளுக்கு காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்**

உங்கள் பிள்ளைகளுக்கு காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டால், அமைதியாக இருந்து பின்வருவனவற்றைச் செய்யுங்கள்.

1. ஆபத்தான இடங்களிலிருந்து பிள்ளையைத் தூரவிலக்கி வையுங்கள். அருகிலிருக்கும் கூர்மையான அல்லது கடினமான பொருள்களை அகற்றுங்கள்.

2. உங்கள் பிள்ளையைப் பிடித்து வைக்க அல்லது அசைவுகளை நிறுத்த முயற்சிசெய்ய வேண்டாம். வாயிலிருந்து நீர்வடியக் கூடியதாக, பிள்ளையை மெதுவாக ஒரு பக்கமாகத் திருப்புங்கள் அல்லது தலையை ஒரு பக்கமாகத் திருப்புங்கள்.

3. உங்கள் பிள்ளையை சௌகரியமாக வைத்திருங்கள். இறுக்கமான உடையைக் குறிப்பாக கழுத்தைச் சுற்றியிருப்பவற்றைக் கழட்டி விடுங்கள். கண்ணாடி உடைந்து விடாமலிருக்க அதையும் கழட்டுங்கள்.

4. உங்கள் பிள்ளையின் வாயில் எதையும் போட முயற்சிக்க வேண்டாம். இது மூச்சடைப்பை ஏற்படுத்தும் அல்லது பற்களை உடைத்து விடும்.

5. வலிப்பு எவ்வளவு நேரம் நீடித்தது என் பதை உங்கள் மருத்துவர் அறிய விரும்புவார். முடிந்தால், வலிப்பு எப்போது ஆரம் பித்தது, எப்போது முடிந்தது என்பதை ஒரு சுவர் மணிக்கூட்டில் அல்லது ஒரு கைக்கடிகாரத்தில் பார்த்து வையுங்கள்.

6. வலிப்பு 5 நிமிடங்களை விடக் குறைவாக இருந்தால் பிள்ளையை மருத்துவரிடம் அல்லது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுங்கள். பிள்ளைக்குக் கடுமையான சுகவீனம் ஏதும் இல்லை என்பதை மருத்துவர் உறுதி செய்ய வேண்டும்.

7. வலிப்பு 5 நிமிடங்களுக்கு மேல் நீடித்தால், குழந்தையை ஒரு பக்கமாக சரித்துப் படுக்கவைத்த வண்ணம் மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு செல்லுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு வலிப்பைக் கட்டுப்படுத்த உடனடி சிகிச்சையும் அதிக பராமரிப்பும் தேவைப்படலாம்.

**வலிப்புக்குப் பின் எதை எதிர்பார்க்கலாம்**

சில சமயங்களில் வலிப்பு வந்ததன் பின்பு பிள்ளைகள் குழப்ப மடைந்தவர்களாயும் தூக்க மயக்கம் உள்ளவர்களாயும் இருப்பார்கள் என்பதால் அவர்கள் சிறிதுநேரம் நித்திரை கொள்ள வேண்டும். மருத்துவ பராமரிப்பை நாடுவதற்கு, பிள்ளை இயல்பான நிலைக்குத் திரும்பும்வரை காத்திருக்க வேண்டாம். வலிப்பு முடியும் வரையும் அவர்கள் முழுமையாகத் தெளிவடையும் வரையும் உங்கள் பிள்ளைக்குத் தண்ணீர், உணவு அல்லது மருந்து எதையும் கொடுக்க வேண்டாம்.

**மருத்துவரின் கிளினிக் அல்லது மருத்துவமனையில் எதை எதிர்பார்க்கலாம்**

வலிப்பு எவ்வளவு நேரம் நீடித்தது மற்றும் உங்கள் பிள்ளையின் தோற்றம், அசைவுகள் எப்படியிருந்தன போன்றவை உட்பட, வலிப்பைக் கவனமாக விவரிக்குமாறு மருத்துவர் கேட்பார். மென்மையாகப் பிடிப்பதன் மூலம் அல்லது துடிக்கும் உடல் உறுப்பின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் துடிப்பு நிறுத்தப்படக் கூடுமா? அல்லது துடிப்புத் தொடர்ந்து நீடித்ததா? என்பதைத் தெரிந்து கொள்வது மருத்துவருக்கு உதவக்கூடும்.

பிள்ளையை மருத்துவர் பரிசோதனை செய்து காய்ச்சலுக்கான காரணம் தெரிந்தால் மற்றும் உங்கள் பிள்ளை குழப்பமடைந்தோ அல்லது மயங்கிய நிலையிலோ இல்லாவிட்டால், ஆய்வு கூட சோதனைகள் எதையும் செய்யுமாறு மருத்துவர் கேட்கமாட்டார். ஆனால் வேறு ஏதோ பிரச்சினை இருப்பதாக அவர் சந்தேகப்பட்டால் சில பரிசோதனைகளைச் செய்யுமாறு அவர் ஆணையிடக் கூடும். இவற்றின் மூலம் வலிக்கு வேறு காரணங்கள் இல்லை என்பது உறுதி செய்யப்படும்.

உங்கள் பிள்ளைக்குச் சாதரணமான காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டிருந்தால் குழந்தையை அநேகமாக மருத்துவமனையில் நீண்ட நாள்கள் நிறுத்தப்படவேண்டிய தேவை இருக்காது.

**உங்கள் பிள்ளையின் காய்ச்சலுக்குச் சிகிச்சையளித்தல்**

பிள்ளைப்பருவத்தினரில் ஏற்படும் ஏறக்குறைய எல்லா விதமான சுகவீனங்கள் மற்றும் தொற்று நோய்கள் காரணமாகவும் காய்ச்சல் தோன்றக் கூடும். பொதுவாக உங்கள் பிள்ளையின் உடல் வெப்பநிலை உயர ஆரம்பிக்கும் போது காய்ச்சல் வலிப்பு ஏற்படுகின்றது. இந்த வேளையில் உங்கள் பிள்ளைக்குக் காய்ச்சல் இருப்பது உங்களுக்குத் தெரிந்து கூட இருக்காது. பிள்ளையின் காய்ச்சலை மருந்துகள் மூலம் சமாளிக்க முயல்வது வலிப்பைத் தவிர்க்கவோ அல்லது அதன் கால அளவைக் குறைக் கவோ மாட்டாது. ஆனால் இது பிள்ளை சௌகரியமாக இருக்க உதவலாம்.

பிள்ளை வலிப்பு வந்து துடிக்கும் போது காய்ச்சல் மருந்தைக் கொடுக்க முயற்சிக்க வேண்டாம். .வலிப்பு முடியும்வரை காத்திருங்கள். பிள்ளையைக் குளியல் தொட்டியில் போட வேண்டாம். அதேபோல் ஈரத்துணி யால் துடைக்கவும் கூடாது. (தொடரும்...)

**ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
**குழந்தை வைத்திய நிபுணர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கர் விற்பனை நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

கிளிநொச்சி,நவ.6

சிங்கர் நிறுவனத்தின் 160 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிங்கர் விற்பனை நிலையம் கிளிநொச்சி நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி முற் பகல் 10.45 மணிக்கு வாடிக் கையாளர்களின் நன்மைகருதி சிங்கர் நிறுவனம் தனது 160 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுத் தனது கிளை யினை கிளிநொச்சியில் திறந்து வைத்துள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தி னர்கள் மங்கள வாத்திய இசை யணி வகுப்புடன் அழைத்து வரப்பட்டதையடுத்து விற் பனை நிலையத்தினை சிங்கர் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் நாடா வினை வெட்டித் திறந்து வைத் துள்ளார்.

நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளி நொச்சி மாவட்ட பொலிஸ்மா அதிபர் என்.டி.நீல் தளுவத்த, 57 ஆவது படைப்பிரிவின் கட் டளை அதிகாரி கே.ஆர்.சி றொபல், 571ஆவது படையணி யின் கட்டளை அதிகாரி நந்தன அத்துருசிங்க மற்றும் சிங்கர் நிறுவனத்தினர் வாடிக்கையா ளர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (த-6)

# இலங்கை வங்கியின் அச்சுவேலி கிளை தரமுயர்த்தப்பட்டது

அச்சுவேலி, நவ.6

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை இலங்கை வங்கியின் "பி" தரக் கிளையாக இந்த மாதத் தில் இருந்து தரம் உயர்த்தப் பட்டுள்ளது என இலங்கை வங் கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி.சும ணசிறி அறிவித்துள்ளார்.

சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையின் வாடிக்கையாளர் நிலை யமாக 2002 ஆம் ஆண்டில் இருந்து 2008 வரை செயற்பட்டு வந்தது. 2008.10.31 இல் இருந்து அச்சுவேலி இலங்கை வங்கி கிளை யாக இலங்கை வங்கியின் சீ தர நிலையில் செயற்படத் தொடங் கிய மூன்றுவருட காலத்தில் இலங்கை வங்கியின் "பி" தர கிளையாக தரம் உயர்த்தப்பட் டுள்ளது. வங்கியின் மாதாந்த நிதிக் கையாளுகை, வாடிக்கை யாளர் தொகை மற்றும் முகாமைத் துவ நிலைஎன்பவற்றைஅடிப்படை யாகக் கொண்ட மதிப்பீடு களின் அடிப்படையில் 'பி' தரக் கிளையாக உயர்த்தப்பட்டுள் ளது. வங்கியின் முகாமையா ராக தடிவனேந்திரன் கடமையாற்றி வருகின்றார்.

நாடளாவிய ரீதியில் சகல வங்கிகளையும் உள்ளடக்கி மத்திய வங்கி நடத்திய மதிப்பீட்டில் கடன் வழங்கல்கடன்அளவீடுஎன்பவற் றில் அச்சுவேலி இலங்கை வங்கி முதலாம் இடத்தை 2009 ஆம் ஆண்டில் இருந்து பெற்று வருகின் றது. இந்த வகையில் வங்கியின் செயற்பாடுகளைப் பாராட்டி இலங்கை மத்திய வங்கியின் ஆளு நர் விருதைத் தொடர்ந்து பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக் கது.

(த-11)

# அச்சுவேலியில் வாகனச் சந்தை

அச்சுவேலி, நவ.6

இலங்கை வங்கியின் வாகன குத்தகைச் சந்தை நவம்பர் மாதம் அச்சுவேலி யில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தின் சகல இலங்கை வங்கி கிளைக ளின் வாடிக்கையாளர்களும் வாகனக் குத்தகை சந்தை யில் லீசிங் அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்யலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

குறுகிய கால அவகாசத் தில் அச்சுவேலி இலங்கை வங்கி கிளை "பி" தரக் கிளை யாக தரம் உயர்வு பெற்றமைக்கு வங்கியின் வாடிக்கையாளர் கள் வழங்கிய ஒத்துழைப்பை கௌரவிக்கும் வகையில் இலங்கை வங்கி நிர்வாகம் அச் சுவேலியில் வாகன குத்தகை சந்தையைநவம்பர் மாதம் நடத் துவதற்கு ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றது.

நிகழ்வில் பிரதம விருந் தினராக இலங்கை வங்கி யின் பொது முகாமையாளர் கலாநிதி காமி விக்கிரசிங்கா கலந்துகொள்கின்றார். மேல திக பொதுமுகாமையாளர் சாம் சமரசிங்க, பிராந்திய முகாமை யாளர் எஸ். முதியான்சே ஆகியோர் சிறப்பு விருந்தி னர் களாக கலந்து கொள் கின்றனர். (த-11)

# மீசாலையில் பழமுதிர்ச்சோலை

## விற்பனை நிலையம்

வரணி,நவ.6

மீசாலை பிரதேசத்தில் அமைந் துள்ள பழமுதிர்ச்சோலை பழங்கள் சேகரிக்கும் மற்றும் பழ ரசம் விற்பனை நிலையத்தின் 2ஆம் கட்டமாக கட்டட வேலைகள் அண்மையில் தொடங்கப் பட்டுள்ளன.

தற்சமயம் இங்கு பழரச பானங் கள் விற்பனை இடம்பெற்று வரு கின்றதுடன் இங்கு அதன் பொருட்டு பெண் ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இக் கட்டடத்தின் முதலாவது கட்டடம் கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்தி ரசிறியினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மீசாலை உப அஞ்சலகம், மீசாலை சிறப்பு கூட்டுறவு நகர் மற்றும் மீசாலை நூல் நிலைய சுற்றாடலில் பழமுதிர்ச்சோலை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-122)

# மானிப்பாய் இலங்கை வங்கியின் புதிய கடன் திட்டங்கள் அறிமுகம்

## குறைந்த வட்டியுடன் பெறலாம்

நவாலி, நவ.6

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் விவ சாயிகளின் நன்மை கருதி விவசாயக் கடன் பன்னீரா யிரம் ரூபா 8 வீத வட்டியுடன் வழங்கப்படுகின்றது. இக் கடனைப் பெற விரும்புவர் கள் உடனடியாக வங்கி முகா மையாளர் க.இலட்சுமணசர் மாவுடன் தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன் அடுத்த வரு டம் 2012 ஆண்டு முதல் வெங்காயச் செய்கைக்கான கடனையும் மிகவும் குறைந்த வட்டியில் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

தற்போது இந்த வங்கி சுயதொழில் கடன், கடற் தொழில் கடன் குத்தகைக் கடன், திட்டத்தின் கீழ் கார், உழவு இயந்திரம், மினிபஸ், பொருள்களை ஏற்றி இறக் கும் சிறிய டிப்பர் வாகனம் என்பவற்றையம் வழங்கி வரு கின்றது.

மேலும் இக் கடன்களைப் பெறுவதற்கு விண்ணப்பி பவர்களுக்கு ஒரு மாத காலப் பகுதிக்குள் அதற்கான பணத் தொகை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(த-100)

# பூநகரியில் இலங்கை வங்கிக் கிளை

பூநகரி வாடியடிப் பகுதியில் இலங்கை வங்கி தனது கிளை ஒன்றை திறந்து வைத்துள்ளது. இதனால் பூநகரி வாழ்.மக் கள் தமது கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக மேற்கொள் வதற்கு ஏதுவாகி உள்ளது. பூநகரி மக்களின் மிக நீண்ட கால கனவு ஒன்று இம்மாத நடுப் பகுதியில் நிறைவேறியுள்ளது. இவ்வளவு காலமும் பூநகரி வாழ்.மக்கள் வங்கிச் சேவையை பெறுவதற்கு கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களுக் குச் சென்று பணவிரையத்தையும் கால விரை யத்தையும் எதிர்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-406)

# விவசாயிகளை அரசராக்கும் டீமோ உபகரணப்பிரிவு

வரையறுக்கப்பட்ட டீசல் மற் றும் மோட்டார் என்ஜினியரிங் பகிரங்க கம்பனி என்றழைக் கப்படும் டீமோ (DIMO) என்ற பெயரை இலங்கையர்களாகிய நாம் அனைவரும் அறிவோம். 71 வருடங்களாக நம் நாட்டின் பிரதான பொறியியல் நிறுவன மாக தனது வாடிக்கையாளர்க ளுக்கான சேவையை வழங்கிவரும் டீமோ நிறுவனம், CFL மின்குமிழ் தொடக்கம் அதி நவீன சொகுசு வாகனங்கள் வரையிலான தமது வாடிக்கையாளர்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்திசெய்து வரும் நிறுவனமாகும். நம் நாட்டு விவசாயத் துறைக்கு புதிய பாதையை வகுத்த மஹிந்ரா ட்ரக்டர் மற்றும் டீமோ நிறுவனம் இறக்குமதி செய்து விநியோகிக்கும் ஏனைய உழவு உபகரணங்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்வ தற்காக நாம் அந்நிறுவனத்தின் உழவு உபகரணப்பிரிவின் விற் பனை முகாமையாளரான திரு. ரசிக்க ஏபாசிங்க அவர்களுடன் ஆலோசித்தோம்.

டீமோ நிறுவனம் விஷேடமாக ட்ரக்டர் மற்றும் ஹாவஸ்டர் இயந் திரங்கள் இறக்குமதி செய்து விநியோகிக்கின்றனர். டீமோ நிறுவனம் இறக்குமதி செய்து விநியோகிக்கும் இந்திய தயாரிப் பான மஹிந்ரா ட்ரக்டர் 27 வரு டங்களாக இந்தியாவில் முதல் தர ட்ரக்டராக திகழ்கின்றது. அதே போல் மஹிந்ரா ட்ரக்டர் உலகம் முழுவதும் ஒரு மில்லியனுக் கும் அதிகமான வாடிக் கையா ளர் வலையமைப்பைக் கொண் டுள்ளது. உலகளாவிய நம்பிக் கையை வென்றுள்ள மஹிந்ரா ட்ரக்டர் இலங்கையில் அதிக எரிபொருள் சிக்கனமுடைய ஒரே யொரு ட்ரக்டர் ஆகும். 45 குதிரை வலுவைக் கொண்ட ட்ரக்ட ரான இது 4 சிலிண்டர் களுடன் அளவற்ற பலத்தையும் கொண் டுள்ளது. அத்துடன் இந்த ட்ரக் டர்களாவன மஹிந்ரா 575 DI NST மற்றும் மஹிந்ரா 575 DI BP என்ற இரண்டு வகைகளைக் கொண்டது. குறைந்த பராமரிப் பைக் கொண்டுள்ள மஹிந்ரா ட்ரக்டர்கள் HY- TEC Hydrau Lic தடத்தினால் ஆனது. இது தூக்கும் வலிமை அதிகமாக கொண் டுள்ளதால் பாரமான உப கர ணங்களுக்கு மிகவும் பொருந் தும். தானியங்கியாக கலப்பை யைத் தூக்குவதனால் இலகு வாக வயலை உழமுடியும். குறைந்த பராமரிப்பைக் கொண்ட டிஸ்க் தடுப்புக்கருவி இருப்பதனால் வயலை உழும் போது தடுப்புக் கருவியை அகற்ற தேவை யில்லை. மஹிந்ரா ட்ரக் டரின் அதிக பலம் கொண்ட PTO இயக்கியானது சுனாமி மற்றும் றொட்டவேட்டர் போன்ற உபகர ணங்களுக்கு மிகவும் பொருந் தும். மஹிந்ரா ட்ரக் டரின் இவ்வாறான சிறப்பம் சங் களுடன் டீமோவின் 2 வருட் உத்தரவாதமும் கிடைக்கும். முதல் 3 சேவைகள் (Service) இலவசம் அத்துடன் முதல் 6 சேவைகளுக்கு தேவையான சகல உதிரிப்பாகங்களும் இலவசமாக வழங்கப்படுவதனால், நீங்கள் முதலீடு செய்யும் பணத்திற்கு மேல திகமான அநூகூலங் களும் உங் களுக்கு கிடைக்கின்றது என் பதை குறிப்பிட வேண்டும்.




முற்காலத்தில் அறுவடை செய் தல், உழுதல், கருதுகள் வேறுப டுத்துதல் போன்ற காரியங்க ளுக்காக நம் விவசாயிகளுக்கு அதிக காலங்களும் அதிகமான மனித உழைப்பும் தேவைப்பட் டது. இது போன்ற பிரச்சி னைகளுக்கு சரியான தீர்வை பெற் றுக்கொடுக்க அறுவடை செய் யும் இயந்திரங்களை அறிமுகம் செய்வதற்கு டீமோ நிறுவனத் திற்கு முடியுமானதானது. உயர் தரமான ஜெர்மன் தொழில்நுட் பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இவ் அறுவடை செய்யும் இயந்திர மானது ஒரே மூச்சில் ஒரு பரப்பை அறுவடை செய்யக்கூடிய வகை யில் அமைக்கப்பட்டுள்ள தன் நோக்கமானது. விவசாயிகளின் நேரத்தைச் சேமிப்பதற்காகவும் சிரமத்தைக் குறைப்பதற்காக வுமே ஆகும். இவ் அறுவடை செய்யும் இயந்திரம் TAF தொழில்நுட்பத்தை உபயோ கித்து தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஈரமான வயலிலும் கூட உழும் ஆற்றல் இதன் விசேட அம்சமா கும். இந்த இயந்திரங்கள் 2 வகைப் படும், முதலாவது கிளாஸ் குறொப் டைகர் ஹாவஸ்டர் ஆகும். இது ட்ரக்கின் மேல் பயணம் செய் யும் தன்னியக்க அறுவடை இயந் திரம் ஆகும். 4 சிலிண்டர்களும் 60 குதிரை வலுவையும் கொண்ட அதி சக்திவாய்ந்த டீசல் இன்ஜி னைக் கொண்டுள்ள இவ்வறு வடை இயந்திரமானது எரிபொருள் செலவை குறைப்பதோடு இதன் நிர்வகிப்பு மிக இலகுவானது. தேவைக் கேற்ப சரி செய்யக் கூடிய வடிகட்டிச் சல்லடை மற்றும் இரண்டு விசிறிகளின் வரும் காற் றினால் அறுவடையை 100 சுத்தம் செய்து கொள்ளலாம்.

கிறாஸ் அறுவடை செய்யும் இயந்திரங்களில் மற்றைய இயந் திரமானது கிறாஸ் குறொப் டைகர் ஹாவஸ்டர் ஆகும். இது இலங்கையில் உபயோகிக்கப் படும் ஒரேயொரு பல்சேவை அறுவ டைச் செய்யக்கூடிய கம் பையின் ஹாவஸ்டர் ஆகும். சிப் சன் 5433, 4 ஸ்ரோக் மற்றும் 4 சிலிண்டர்கள் கொண்ட 60 குதி ரைவலுவைக் கொண்ட என்ஜி னைக் கொண்ட இந்த இயந் திரத் தின் கதிர் அடித்தல் மற்றும் வேறு படுத்துதல்கள் ரோட்டரியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்தால் விவாகத்தை வீணாக்கலாமா?



வந்தனா,
கரவெட்டி

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்கள். சொர்க்கத்திலேயே முடிவாகி ஆயுள்வரைக்கும் கூடவே வரும் திருமண பந்தத்தை இடையில் முடித்துக் கொள்வதற்காக இன்று பல தம்பதிகள் குடும்ப நல நீதிமன்றத்தை நாடி நிற்கின்றனர்.

இதில் அதிகமாகப் படித்துப் பட்டம் பெற்று கௌரவமான பதவியில் இருப்பவர்களும் அடங்குகின்றனர். அதற்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்தால் சில காரணங்களைத் தவிர பெரும்பாலும் சிறு சிறு பிரச்சனைகளே விவாகரத்துவரை அவர்களைக் கொண்டுவந்துள்ளன.

பெண்களில் பலர் கணவன் என்னதான் நல்லவனாக இருந்தாலும் அவனை சந்தேகக் கண் கொண்டு தான் பார்ப்பார்கள். மனைவி இவ்வாறு நடந்துகொண்டால் கணவன் எவ்வாறு பார்த்தும் பார்க்காததும்போல் வாழமுடியும். வாழ்க்கையே நரகமாகிவிடும். இப்படிப்பட்ட மனைவி அமைந்த ஆண்களில் சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இன்னும் பலர் வேறு பெண்ணுடன் வாழ முற்படுகின்றனர். சிலர் விவாகரத்துப் பெற்றுவிடுகின்றனர். அதன்பின் மனைவியின் நிலை என்ன? விதவை என்ற பெயருடனும் வாழாவெட்டி என்ற பெயருடனும் வாழ்கின்றனர்.

தன் பிறந்த வீட்டை நேசிக்கத் தெரிந்த பெண்களால் ஏன் புகுந்த வீட்டு உறவுகளை நேசிக்க முடியாமல் போய்விடுகின்றது. தன் பிறந்த வீட்டு உறவுகள் வீட்டுக்கு வரும்போது அமோகமாக வரவேற்பார்கள். அதேவேளை கணவனது உறவுகள் வரும்போது வேண்டாவெறுப்பாக வரவேற்பார்கள். மாமியாரை விரோதிபோல் பார்ப்பார்கள். கணவனை நேசிக்கத் தெரிந்த பெண்களால் புகுந்த வீட்டு உறவுகளையும் நேசிக்கும் மனம் இருந்தால் குடும்பங்களில் கணவன்-மனைவிக்கு இடையில் விரிசல்கள் ஏற்படாது. குடும்பங்களில் ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

பெண் என்றால் பொறுமை வேண்டும். கணவன் மீது பிழைகள் இருக்கலாம். அதனைத் திருத்துவதற்கு முயல வேண்டும் . அதனைவிட்டு பிரிந்துவாழ முற்படக்கூடாது.

விவாகரத்து வாங்குவது என்பது இலகுவாக இருக்கும். ஆனால் அதன்பின் நிலைமை என்ன? தனித்து வாழ்வது என்பது பெண்களுக்கு கஷ்டமான விடயம். அதற்குத் தைரியம் அதிகம் வேண்டும். அது எல்லாப் பெண்களுக்கும் இருக்கும் என்று கூறமுடியாது.

திருமணமான ஒரு பெண் கணவனுடன் வாழ்வதுதான் அவளுக்கு மற்றவரிடையே மதிப்பையும், மரியாதையையும் மட்டுமன்றிப் பாதுகாப்பையும் ஏற்படுத்தும்.

விவாகரத்துக்கள் என்பது கணவன்-மனைவி இருவரைமட்டும் பிரிக்கவில்லை; அவர்களைச் சார்ந்த உறவுகளையும் பிரித்து விடுகின்றது. தீர்க்க முடியாத பிரச்சினைகள் என்று இல்லை. பெண்கள் பொறுமையுடனும் அக்கறையுடனும் செயற்பட்டால் வாழ்வில் வெற்றி அவர்களுக்கே.

# சாதனைப் பெண்ணே



பெண்ணே...!
சோதனைகள் பல வந்தாலும்
அதையும் தாண்டி
சாதனைகள் பல-நீ
புரிய வேண்டும்
ஏனெனில்....!
சோதனைகள் இல்லா
சாதனை சாத்தியமில்லை
சமூகம் உன்னை
விலங்கிட்ட கைதியாய்
பூட்டி வைத்துள்ளது
அதை உடைத்தெறி
உன் சாதனை
எட்டுத் திக்கும் பரவட்டும்
பெண்ணே- இனி
சாதனை என்றால்
அகராதியில்
நீயாகவே
இருக்க வேண்டும்...

ரீ.அகிலா,
கஸ்தூரியார் வீதி.

# நம்பிக்கைத் துரோகம் கொடூரமானது



திருமதி றாபி விமலதாஸ்,
நவாலி.

வாழ்க்கை என்ற அச்சாணி சுழன்று கொண்டிருப்பது நம்பிக்கையில்தான். அந்த வாழ்க்கையில் நம்பிக்கைக்குத் துரோகம் இழைப்பது கொலை செய்வதிலும் கொடூரமானது என்பதனை என்றுமே எல்லோரும் மனதில் கொண்டிருந்தால் நன்மை தரும். வாழ்க்கை என்னும் பூந்தோட்டத்தை அழகுற அமைக்கும் ஆணும் பெண்ணும் வாழ் வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத் தடுமாறும்போது ஆண் என்பவன் தனது குடும்பச் சுமையை எளிதாக்க எண்ணித் தனது குடும்பத்தை, சுற்றுச்சூழலை, நண்பர்களை இழந்து தன்னந்தனியே வெளிநாடு சென்று குடும்பத்துக்காக உழைக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறான். அவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்து குடும்பத்தைக் காப்பாற்ற எண்ணும் ஆணின் பொறுப்பை உணர்ந்த பெண், வீட்டுக் கடமைகளை யும் குழந்தைகளையும் இனிதே கொண்டு நடத்த வேண்டிய பொறுப்புணர்ச்சி பெற்றவளாகக் காணப்படவேண்டும்.

திருமணம் என்ற பந்தத்தினுள் நுழைந்த ஒரு பெண் ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழும் இயல்புக்குத் தன்னை ஒருமுகப்படுத்தி வாழ்க்கையை நடத்தவேண்டும். இவ்வாறான பெண்கள் எப்போதும் தன் கடமையை மறந்து துரோகம் செய்யமாட்டார்கள். ஆனால் சில பெண்கள் இதற்கு விதிவிலக்காவது வேதனைக்குரிய ஒன்று. தன்னை நம்பி கடல் கடந்த தூரம் சென்று உழைத்து கணவன் அனுப்பும் பணத்தில் வாழ்ந்துகொண்டு வேறொருவருடன் உறவு வைத்துக்கொள்ள எண்ணும் பெண் மடமைத்தனம் உடையவள். தான் வழிதவறிப் போவதனால் அது எத்தனை பேருடைய வாழ்க்கையை சீரழிக்கும் என்பதை உணராதவளாக; தான் ஆசையுடன் பெற்றெடுத்த மழலைகளை அது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை அவள் சிந்திக்காதவளாக நடப்பது மிகவும் வேதனை தரக்கூடிய ஒன்று.

எந்தச் சூழ்நிலையிலும் ஆணும் சரி பெண்ணும் சரி தங்களை நம்பி நடப்பவர்களை ஏமாற்ற நினைப்பது முட்டாள் தனமாகும். ஒருவருக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டு எந்நாளும் நிம்மதியாக எவராலுமே வாழ முடியாது. நம்பிக்கைத் துரோகம் கொலையிலும் கொடூரமானது. அது ஒருநாளும் உங்களை நிம்மதி [illegible] நம்பிக்கையுடைய [illegible] இருங்கள். உங்கள் வாழ்க்கை எந்தத் துன்பத்திலும் மகிழ்ச்சியுடையதாக இருக்கும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# கங்காவின் கடிதங்கள்



**அன்பின் கண்மணி!**

கணவனை இழந்து விதவையான உன்னைத் திருமணம் செய்ய உன்கூட வேலைசெய்யும் ஒருவர் விரும்புவதாகவும் ஆனால் அவருக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருப்பதாகவும் குறிப்பிட்டு இருந்தாய். நீ மறுமணம் செய்து கொள்வதை நான் தவறு என்று கூறவில்லை. ஆனால் அதற்கான தெரிவு சரியானதாக அமைய வேண்டும். தனக்கு ஒரு குடும்பம் இருக்கும்போது அதனைச் சீர்குலைத்துத் தன் மனைவியை வேதனைப்படுத்தி இன்னொரு பெண்ணை சந்தோஷப்படுத்த நினைப்பது, அந்த நபரின் சுயநலத்தைத்தான் காட்டுகின்றது. அதை நீ புரிந்துகொள். மறுமணம் செய்யும் முன் அந்த ஆண் யார்? எப்படிப்பட்டவர்? எந்தச் சூழ்நிலையில் இருக்கின்றார் என்பதனை யோசி. சமுதாயத்தில் நீ தனியாக வாழ்வதற்கு நிறையவே தன் நம்பிக்கையும் தைரியமும் வேண்டும். அது சாதாரண விடயமில்லைதான். உன் சூழ்நிலையைப் புரிந்த உன் வாழ்க்கைக்கு ஒத்துவரக்கூடிய ஓர் ஆணைத் தேர்ந்தெடு.

அன்புடன்....
கங்கா.

# பெண்களுக்கு...



★ ஆண் வாழ்வுக்குப் பெறுமதி மிக்க வளம் பெண்கள்.

★ உடலாலும் உள்ளத்தாலும் கலந்து வாழும் போதுதான் பெண்களுக்கு இல்லறம் சிறக்கும்.

★ சமைக்கும் உணவிலேயே உறவுகளைக் காண்பவள் பெண்.

★ பெண்ணுக்குத் தண்டனை வழங்குவதில் முதலிடம் வகிப்பது சமுதாயம்.

★ பெண் கல்வியைப் பெற்றுக்கொண்டால் அவள் சந்ததி கல்வியில் திளைக்கும்.

ரவீந்திரகலா,
லக்லேன், உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாவகச்சேரி நகர சபையின் வாசிப்பு மாத இறுதி நிகழ்வு

தென்மராட்சி,நவ.6

சாவகச்சேரி நகர சபையின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சிக் கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

நகரசபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் உதவிச் செயலாள ரும் மாகாண சமூக சேவைகள் திணைக் களப் பணிப்பாளரும் சாவகச்சேரி இந் துக் கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி நளாயினி இன்பராஜ் கலந்து கொண்டார்.

விழாவில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர், சாவ கச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திரு மதி. சி. சிவநாதன், இந்துக் கல்லூரி அதி பர் அ.கயிலாயபிள்ளை உட்பட பலர் உரையாற்றினர்.

நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் வாசகர்கள் ஆகியோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(த-207)









# படங்கள் தரும் பதிவுகள்...



யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு மீன்பிடி உபகரணங்களை வணிகர் கழகத்தின் பிரதிநிதி வழங்குகிறார். (ம)



பூநகரி நல்லூர் மகாவித்தியாலய நவராத்திரி விழாவில் பாடசாலை அதிபர் பி.திருக்கேதீஸ்வரன் சிறுமி ஒருவருக்கு ஏடு தொடக்குகிறார். (ம)








சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 135 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றன. இதில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமை உரையாற்றுகிறார். மேடையில் வர்த்தகர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பீரதி ஜீவேஸ்வரா ஆகியோர் மேடையில் உள்ளனர். நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரும் காணப்படுகின்றனர். (ம-29)



செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனுக்கு யாழ். பல்கலைக்கழகம் வழங்கிக் கௌரவித்த "கலாநிதி" பட்டத்துக்காக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்லூரிச் சமூகத்தால் கௌரவிப்பு விழா நடத்தப்பட்டது. இதன்போது விழா நாயகன் அழைத்து வரப்படுகின்றார். (ம)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 5 வருட சேவையை நிறைவு செய்ததைப் பாராட்டி தேசிய கல்வியியற் கல்லூரி கணித மன்றத்தால் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். (ம-319)



பண்டத்தரிப்புச் சூரியன் கல்வி நிறுவனம் கல்விப் புலத்துக்குப் பிரத்தியேகமான சேவையை வழங்கி வருகின்றது. இந்த நிறுவனம் ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு விசேட பரீட்சைகளை நடத்தியிருந்தது. இதன் பயனாக 13 மாணவர்கள் 151 புள்ளிகளைப் பெற்றனர். இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. (ம-302)



சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுதுமலை வடக்கு ஜே / 129 கிராம சேவையாளராக தற்போது பணியாற்றிவரும் இராசையா லோகநாதனின் சேவையைக் கௌரவித்து அப்பகுதி மக்கள் பாராட்டினர். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## புண்ணியமூர்த்தி சேதுப்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி சேதுப்பிள்ளை 04.11.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பு.சண்முகதாசன் (விரிவுரையாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி)
பு.தேவகரன் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிரதேச சபை, நெடுந்தீவு

19/1, சாஸ்திரியார் வீதி,
அரியாலை.

(சி/5641)

## திருமதி துரைசிங்கம் செல்வநாயகி



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர் வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் செல்வநாயகி 02.11.2011 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும் அரியகுட்டி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமளும் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் மனைவியும் பிரதீபா, காலஞ்சென்ற தயாபரன் மற்றும் ரமேஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் அசோகமலரின் (கனடா) மாமியும், சுவர்மன், வர்கிவி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
து.பிரதீபா (மகள்)

## திருமதி நடராசா நாகம்மா

கச்சாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டு, தற்போது கண்டி வீதி, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த நடராசா நாகம்மா நேற்று (05.11.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நவரட்ணராஜா (ஓய்வுபெற்ற அதிபர், யா/ வரணி ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மல்லிகாதேவி, சறோஜினி (ஆசிரியை, யா/ கொடிகாமம் அ.த.க.பா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிரிதரன், டிலானி, அஜிதரன், நிதாதரன், நளாயினி, நவாஞ் சன் (ஆசிரியர், கிளி/ பளை மத்திய கல்லூரி ) ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் மிதுஷிகனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.நவரட்ணராஜா
(ஓய்வுபெற்ற அதிபர்)

கண்டி வீதி,
கொடிகாமம்.

## செல்லையா முத்துக்குமாரசாமி

(முன்னாள் இளைப்பாறிய மேலதிக காணிப்பதிவாளர், காணிப்பதிவகம், யாழ்ப்பாணம்)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா முத்துக்குமாரசாமி நேற்று (05.11.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் முத்துப்பிள்ளை, மனோன்மணி, சிவக்கொழுந்து, திருநாவுக்கரசு, நவசிவாயம் ஆகியோரின் சகோதரனும் செல்வரத்தினம் (பெத்தா) வின் அன்புக் கணவரும், கமலேஸ்வரன் (சங்கத்தானை), சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), சிவனேஸ்வரன் (சுவிஸ்), தனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் தேஜா, பாஸ்கரனின் மாமனும் சிவகரனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தவபதி இல்லம்', அச்செழு,
நீர்வேலி.

தகவல்:
திருமதி செ.முத்துக்குமாரசாமி,
குடும்பத்தினர்.

# 10 மாத காலத்துள் 7 கோடி ரூபாவை பெற்றது நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு,நவ.6

இந்த ஆண்டின் கடந்த பத்து மாத காலத்துக்குள் நுகர்வோர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றிவளைப்புக்கள் மூலம் ஏழு கோடி ரூபாவுக்கு மேல் அபராதத் தொகை மூலம் வருமானம் கிடைத்துள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்திலிருந்து ஒக்ரோபர் மாதம் வரையான காலகட்டத்தில் 27 ஆயிரம் 123 திடீர் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் , நுகர்வோர் அதிகார சபையின் வரலாற்றில் இது ஒரு சாதனை எனவும் அபராதத் தொகை என்ற வகையில் இதுவரை நுகர்வோர் அதிகார சபையினால் வசூலிக்கப்பட்ட ஆகக் கூடிய தொகை இரண்டு கோடி 80 லட்சம் ரூபா எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது. அபராதத் தொகை நூற்றுக்கு 248 வீதத்தாலும் சுற்றி வளைப்புக்கள் நூற்றுக்கு 249 வீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பொறுப்புக் கூறும் அத்தாட்சிகளை வெளிப்படுத்தாமை, பத்திரிகையில் விளம்பரங்களை வெளியிடும் போது வினாக்களைக் குறிப்பிடாமை, தொடர்பாக இந்த மாதத்தில் அதிகரித்த கவனம் செலுத்தப்பட்டதாகவும் , பொருள்களைப் பதுக்கி வைப்பது கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலையில் விற்பனை செய்வது, காலாவதியான பொருள்களை விற்பது, விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமல் இருந்தமை போன்ற குற்றங்கள் தொடர்பாகச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (த-22)

# பொலிஸ் ஆணைக்குழு செயற்படாத போதும் மாதாந்த வாடகையாக 2 கோடி ரூபா

கொழும்பு ,நவ.6

தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்துள்ள போதிலும் அக்கால கட்டத்தில் அதற்குரிய கட்டடங்களுக்கான மாதாந்த வாடகையாக 2 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தேசியபொலிஸ் ஆணைக்குழு கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகச் செயலிழந்துள்ளது. ஆனாலும் அதன் அலுவலகம் கொள்ளுப்பிட்டி , றொட்ருண்டா கார்டனில் உள்ள கட்டடமொன்றில் இயங்கிவருகின்றது.

தற்போது அந்தக் கட்டடத்துக்கான மாதாந்த வாடகை 8 லட்சம் ரூபா வரை அதிகரிந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு செயலிழந்து போயுள்ள காலப்பகுதிக்குள் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பளங்களுக்காக ஒம்கோடிக்கணக்கான ரூபா செயலிழக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிய வருகிறது.

இதனிடையே பொலிஸ் துறைக்கு எதிராக கிடைக்கப் பெற்றுள்ள 2500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அலுவலகத்தில் குவிந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (த-22)

## சேவை

கனடாவுக்கு குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு வேர்க் Visa, PR Visa, விசிட் Visa ஆகியவற்றுக்கான ஒழுங்குகளும் அத்துடன் எம்பஸியால் நிராகரிக்கப்பட்டதும் பெண்டிங்கில் இருக்கும் அனைத்து விசாக்களும் காலதாமதம் இன்றி நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் எம்மால் செய்து தரப்படும்.
0772484403, 0112363880
www. ricvisa. Com

## திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான கர வருடம் ஐப்பசித் திங்கள் 21 ஆம் நாள் (07.11.2011) திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில்

**"ராம்ணி"**

எனும் எமது விருந்தினர் விடுதி யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ராம்ணி விருந்தினர் விடுதி,
47-49, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நல்வரவை நாடும்:
ராம்ணி நிர்வாகத்தினர்.

(10124)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராமநாதன் சண்முகநாதன்
(ஓய்வுபெற்ற அதிபர், யா/அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)
திதி: 06.11.2011

வருடமொன்றானபோதும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சமெல்லாம்
நிறைத்து நிற்கின்றன
இறைவன் பாதம் தேடிச்சென்ற உங்கள் ஆத்மா
அமைதியாய் உறங்க இறைவனை
நாம் பிரார்த்திக்கின்றோம்

பிறப்பு: 1952.09.10
இறப்பு: 2010.10.18

இன்று (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் சிரார்த்த கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

என்றும் உங்கள் நினைவில்:
பரமேஸ்வரன் குடும்பத்தினர்

## YAMAHA

நவநாகரீக இளைஞர்களின் இன்றைய தேடல்

நெல்லியடியில் YAMAHA காட்சியறை

**கோலாகலத் திறப்பு விழா**

14.11.2011

உங்கள் YAMAHA மோட்டார் சைக்கிள் முன்பதிவுகளுக்கு இன்றே எமது யாழ் நகர் காட்சியறையை நாடுங்கள்



YBR 125 (NEW) - 174,000/=
SZ (NEW) - 199,000/=
FZ-16 - 239,900/=



FZ-S = Rs. 253,900/=
FAZER = Rs. 279,900/=

AMW (PVT) LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட முகவர்
**டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்**
(யாழ். சம்பத் வங்கி முன்பாக)
077 6623824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அதிகாரிகளே பதில் சொல்லுங்கள்

## அரச நிர்வாகத்தில் அரங்கேறும் சீர்கேடுகளுக்குப் பொறுப்பு யார்?

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் திணைக்களங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக தமிழ் அரசியல் தலைவர்களோ, பொது அமைப்புக்களோ, மனித உரிமை ஆர்வலர்களோ கண்டும் காணாமல் மௌனம் சாதிப்பது ஏன்? இப்போது வடக்கில் அரச ஊழியர்கள் மத்தியில் இது தான் சூடான விவாதம்.

வடக்கு மாகாண பட்டதாரிகளை மாகாண அமைச்சின் திணைக்களங்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடந்த வருடம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு போட்டிப் பரீட்சை நடத்தியது. 5,100 (ஐயாயிரத்தி நூறு) பட்டதாரிகள் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்து பரீட்சை எழுதினர்.

பரீட்சையில் பெற்றுக் கொண்ட உயர் புள்ளி அடிப்படையில் பலர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். பரீட்சை முடிவுகளும் சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளை உள்ளடக்கி தனித்தனியாகக் கடிதம் வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நேர்முகப் பரீட்சை இந்த வருடம் நடுப் பகுதியில் வடக்கு மாகாணப் பொதுநிர்வாக அமைச்சில் நடை பெற்றது. அதன் முடிவில் 272 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் 10 பேர் பதவிநிலைத் தரத்துக்கும் ஏனைய 262 பேரும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவிக்கும் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பத்திரிகைகளிலும் பெரியளவில் செய்திகள் வெளிவந்தன.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் 272 பட்டதாரிகளுக்கு வடக்கு மாகாணத் திணைக்களங்களில் நியமனம் கிடைக்க இருக்கின்றது என மக்களும் மனம் மகிழ்ந்தனர். இந்த நிலையில் நியமனம் வழங்குவது ஆளுநரால் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் திகதி அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இன்று வரை அந்தத் திகதி அறிவிக்கப்படவேயில்லை. மூன்று மாதங்கள் நிறைவடையப் போகின்றது; ஏன் நியமனம் வழங்கப்படவில்லை எனக் கேட்டால் உருப்படியாகப் பதில் சொல்ல எந்த அதிகாரிக்கும் திராணி இல்லை.

நியமனம் கிடைக்கும் எனக் காத்திருந்த பட்டதாரிகள் இலவு காத்த கிளிகளாகக் காத்துக் கொண்டே இருக்கின்றனர். இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார்? இது தொடர்பாக அவர்கள் அக்கறை கொள்ளாமல் இருப் பது ஏன்?

வடக்கு மாகாண அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர் பதவிகளுக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கு போட்டிப் பரீட்சை நடத்த வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிண்ணப்பங்களைக் கோரியிருந்தது. ஆயிரக் கணக்கானோர் அதற்கான கட்டணங்களைச் செலுத்தி விண்ணப்பித்திருந்தனர்.

திடீரென போட்டிப் பரீட்சை ரத்து செய்யப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சை மூலம் பதவி வெற்றிடங்களுக்கு ஆள் தெரிவு நடைபெறும். பரீட்சைக் கட்டணங்கள் உரியவர்களுக்கு மீளளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. சிற்றூழியர் பதவி போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரிய விடயத்தில் உள்வாரியாக உயர்பீடத்துடன் ஒத்துழைக்கவில்லை என்பதைக் காரணமாக வைத்தே வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். திவாகரன் எதுவிதப் பொறுப்புகளும் வழங்கப்படாமல் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டார் எனவும் தெரிகிறது.

மேற்படி சிற்றூழியர்கள் நியமனங்கள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் இடத்துத் திறமையானவர்கள் நியமிக்கப்படுவார்கள். இல்லையேல் அரசியல் நியமனங்களால் சேவைகள் எல்லாம் சீரழியும். அப்படித்தான் நடந்தது என்கிறார்கள். சிற்றூழியர்களுக்கு வெளிப்படையாக நேர்முகப் பரீட்சை நடத்தாமலேயே பட்டியல்கள் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டுவிட்டது என்கிறது உள் வீட்டுத் தகவல்.

கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்களுக்கு அவை இதுவரை மீளளிக்கப்படவும் இல்லை; நியமனம் வழங்கப்படவும் இல்லை. இவை அடிப்படை உரிமை மீறல்கள் இல்லையா? ஏன் பொது அமைப்புக்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

இந்த இரண்டு விடயங்களும் உதாரணத்துக்கு இங்கு முன்வைக்கப்படுகின்றன. பொதுமக்கள் தொடர்புபட்ட வடக்கு மாகாண நிர்வாகச் சீர்கேடுகள் என்பதால் இவை இங்கு பகிரங்கமாக அலசப்பட்டன...

சம்மந்தப்பட்ட உயர்நிர்வாகிகளோ வடக்கு மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களோ உரிய முறையில் இவற்றுக்குப் பொறுப்புக் கூற முன்வர வேண்டும். இல்லாவிடில் தமிழர்களின் அரசியல் உரிமை வழங்கலில் மட்டும் ஏமாற்றப்படவில்லை. நாளாந்த அரச கரும நிர்வாகச் செயற்பாடுகளிலும் ஏமாற்றப்படுகின்றார்கள். என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிடும். அதற்குத் தன்னைத் தமிழர் என்று கூறித் திரியும் ஓர் அமைச்சரும் தமிழ் அதிகாரிகளும்- தமது பதவிகளுக்காக - உடந்தை என்பது தமிழரின் கண்ணீர் வரலாற்றில் மற்றொரு துளி. ✸

**அவதானி**

---

# எதிர்ப்பார்களா? இல்லை மௌனமாக இருப்பார்களா?

இலங்கை வாழ் தமிழர் உரிமைகளுக்காக அகிம்சை வழியில் அறப் போர்நடத்தி ஒவ்வொரு தமிழர்களினது நெஞ்சங்களிலும் நீக்க மற அன்றும் இன்றும் என்றும் உயர்ந்து நிற்கின்ற தமிழினத்தின் தனிப்பெருந் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா உள்ளன் போடு போற்றப்படுகின்ற பெரு மதிப்புக் குரியவரான சா.ஜே.வே. செல்வநாயகத்தின் திருவுருச் சிலையின் தலை கொய்யப்பட்ட கொடூரச் சம்பவமானது ஈழத்தமிழர்களால் வேற்றுமையின்றிக் கண்டிக்கப்பட வேண்டியது.

தமிழினத்தின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்கும், கிழக்கு மாகாண தமிழன் வடமாகாணத் தமிழன் என்ற வேறுபாடுகளை நீக்கி வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களை ஒன்றுபட்ட சக்தியாகத் திரட்டி ஒரு குடையின் கீழ்கொண்டு வந்த ஒரே ஒரு தமிழ்த் தலைவர் தந்தை செல்வா.

தமிழீழமே முடிந்த முடிவு என்றும் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை என்ற கொள்ளையையும், உறுதியாக முன்வைத்தவர் ஆவர்.

1992 ஆம் ஆண்டு காலப்பகுதில் ஆட்சியில் இருந்த சிறிமாவோ பண்டார நாயக்காவின் தலைமையிலான அரசானது கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா,வண்ணை ஆனந்தன், சத்திய சீலன்,திசைவீரசிங்கம் உட்பட நாற்பத்திரெண்டு தமிழ் இளைஞர்களை சிறையில் அடைத்து, எந்த விதமான நீதி விசாரணைகள் இன்றி சித்திரவதைக்குள்ளாக்கியது. அவர்கள் சாகும் வரை உண்ணா விரதத்தை ஆரம்பித்தனர். நாள்கள் செல்லச் செல்ல அவர்களின் உடல் நிலைமை மோசமானது. அப்போது தந்தை செல்வா, ''இளைஞர்களே உண்ணா விரதத்தைக் கைவிடுங்கள்'' என மிகப் பவ்வியமாக வேண்டு கோள் விடுத்தார்.

அதனை அந்த இள்ளைஞர்கள் தட்டாமல் ஏற்றுக் கொண்டனர். தலைவரின் வேண்டுகோளையேற்று உண்ணா விரதத்தைக் கைவிட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினை 1974 ஆம் ஆண்டு வருட இறுதிப் பகுதியில் அப்போதைய பிரத மராக இருந்தவரான திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா திறந்து வைத்துவிட்டு கொழும்பு செல்லப் பலாலி விமான நிலையத்திலிருந்து புறப்பட முன்பு தமிழர்களின் உயர்பண்பாடு, நாகரிகம் , மரியாதை நிமித்தம் பலாலி விமான நிலையம் சென்று பிரதமரை வழியனுப்பி வைத்தவர் தந்தை செல்வா.

இவற்றை சிறீதளவேனும் அறியாத அமைச்சர் மஹிந்த சமரசிங்க ''தந்தை செல்வா என்பவர் யார்? எனக்கு அவரைத் தெரியாதே'' என்று மிக நையாண்டியுடன் கேள்வி தொடுத்து தமிழர்களின் மனதை மேலும் புண்படச் செய்துள்ளார்.

தமிழர்களின் இதயத்தை ஈட்டியால் குத்திய செயலாக உள்ள இச்சம்பவமானது சகல தமிழ் மக்களின் இருப்பையும் மேலும் பல மடங்கு கேள்விக்குறியாக்கியுள்ளது.

திருகோணமலை நகரில் தலை நிமிர்ந்து நின்ற தந்தை செல்வாவின் திருவுருவச் சிலையின் தலையை தீயவர்கள் துண்டித்தது போல் ஒவ் வொரு ஈழத் தமிழர்களின் தலையும் உருளுமா என்ற பயப் பீதி இன்று ஏற்பட்டுள்ளது.



வவுனியாவில் ஒரு சிலை, யாழ்ப்பாணத்தில் ஒரு சிலை, திருகோணமலையில் ஒரு சிலை தமிழர்களால் அமைக்கப்பட்டு அந்தத்தலைவருக்கு பிறந்த நாளும் மறைந்த நாளும் வருடா வருடம் நினைவுகூரப்பட்டு வருவதுகூட இந்த அரசுக்குத் தெரியாதா? எத்தனை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சிங்கள அமைப்புக்கள், எதிரணிக்கட்சித் தலைமைகள் மாறி மாறி வடக்கு கிழக்குக்கு பகுதிகளுக்குத் தினமும் படை யெடுத்து வருகின்றனர். இவர்களின் கண்களில் தந்தை செல்வாவின் திருவு ருவச்சிலை தெரியவில்லையா? இவர் யார் என்பது அறியவில்லையா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

இன்று தந்தைசெல்வாவின் திருவுருவச் சிலைக்கு நடந்தது போல்... நாளை சேர் பொன்.இராமநாதன் சிலைக்கும் உரும்பிராயில் உள்ள பொன். சிவகுமாரன் சிலைக்கும் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் ஏதுமிருக்கிறதா?

கிழக்கு மாகாண சபையில் உள்ள தமிழ் உறுப்பினர்களும் சரி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கீழ் வடக்கு, கிழக்கில் உள்ள நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றைச் சேர்ந்த அரசியல் நிர்வாகத்தினரும் ஒற்றுமையாக இச் சம்பவத்தை கண்டித்து ஒட்டுமொத்த எதிர்பினை அரசுக்கு உணர்த்த வேண்டும்.

**மூனாத்தானா**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நகரசபை, பிரதேச சபைகளை நிர்வகிக்கின்ற இளம் உறுப்பினர்களுக்கு தந்தை செல்வாவைப் பற்றிக் கூட அதிகமாக தெரியாத நிலையிருக்கின்றது என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மாகரண சபைத் தமிழ் உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நகர சபை, பிரதேச சபை அங்கத்தவர்கள் சபையைக் கூட்டித் தங்களது கண்டனத்தைத் தெரியப்படுத்துவார்களா? எதிர்ப்புகளை வெளிப்படுத்துவார்களா? அல்லது வாய்மூடி மௌனிகளாக இருப்பார்களா? ✸

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணுவில் மத்திய கல்லூரியை வென்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயா சம்பியன்

வலி.வடக்கு, நவ.06

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கோட்டச் சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இணுவில் மத்தியகல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய 5 ஆவது நிமிட இடைவெளியில் இணு வில் மத்தியகல்லூரி ஒரு கோலைப்பெற்று ஸ்கந்தவரோதயாக கல்லூரிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. இதனையடுத்து போட்டி மிகவும் விறு விறுப்பாக மாறிக் கொண்டது.

கோல் பெறும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்ட ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 20 ஆவது நிமிடத்தில் ஒருகோலைப் பெற்று போட்டியைச் சமப்படுத்திய நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இராண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் முக்கியம் வாய்ந்ததாக காணப்பட்ட நிலையில் இரு அணிகளும் துடிப்புடன் களமிறங்கி மோதிக் கொண்டன.

இரண்டாம் பாதி ஆட்டம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு சாதகமானதாக அமைந்தது. ஸ்கந்தா மூன்று கோல்களைப் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டநிறைவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4:1 என்ற கோல்கள் கணக்கில் இணுவில் மத்தியகல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (த-86)

# தேசியமட்ட ஹொக்கி அடுத்த வாரம் கண்டியில்

வலி.வடக்கு,நவ.6



அகில இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் நடத்தும் அகில இலங்கைப் பாடசாலை அணிகளின் ஆண்கள், பெண்களுக்கான தேசிய மட்ட ஹொக்கிப் போட்டிகள் அடுத்த வாரம் முதல் கண்டியில் நடைபெறவுள்ளது.

கனிஷ்ட பிரிவுகளுக்காக நடத்தப்படும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளை யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருமான நோயல் விமலேந்திரனுடன்உடன்தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆண்களுக்கான போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் இந்தாண்டில் 21 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பதுடன் வீராங்கனைகளுக்கான வயதெல்லை நிர்ணயிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

# இறுதியாட்டத்துக்கு இணுவில் மத்தி

வலி.வடக்கு, நவ.6

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இணுவில் மத்திய கல்லூரி வெற்றி பெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் இணுவில் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டதுடன் எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்ற வேகத்துடனும் விளையாடினார்கள்.

இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் அனைத்தும் கோல்காப்பாளர்கள் மற்றும் பின்னணி வீரர்களினால் முறியடிக்கப்பட்ட நிலையில் இரு அணிகளும் கோல்பெறவில்லை.

இதனால் ஆட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் வகையில் இரு அணிகளுக்கும் தலா 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இணுவில் மத்திய கல்லூரி முதல் மூன்று சமநிலை தவிர்ப்பு உதைகளையும் உரியமுறையில் உதைத்து கோல்களைப் பெற்றுக்கொண்ட போதிலும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டது.

இந்த நிலையில் இணுவில் மத்திய கல்லூரி 3:0 என்ற கோல்கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி பெற்று இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதிபெற்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மூன்றாம் இடத்துக்கான போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.6

13 வயதுப் பிரிவினர்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டி தொடர்பான கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

எனவே கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மத்தியஸ்தர்கள் அனைவரையும் தவறாது இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-23)

# காலிறுதிப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, நவ.6

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டக் காலிறுதிப் போட்டிகள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கும் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்துக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோத யாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்துக்கும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்துக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் அடுத்த வாரம்

வலி.வடக்கு, நவ.6

வலிகாமம் கல்வி வலயக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டங்களில் இருந்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் இப் போட்டிகளில் மோதவுள்ளன.

நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 'லீக்' முறையில் போட்டிகள் யாவும் நடைபெறவுள்ளதுடன் முதல் தடவையாக கோட்டமட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பாடசாலை அணிகளும் வலய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

குழு 'ஏ' பிரிவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், மாதகல் சென்.யோசெப் மகா வித்தியாலயம் , அராலி இந்துக் கல்லூரி,

குழு.'பி' பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,

குழு 'சி' பிரிவில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,

குழு 'டி' பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் ஆகிய்னவும் இடம்பெற்றுள்ளன. (த-86)

# சமநிலையில் முடிந்த ஆட்டம்

யாழ்ப்பாணம்,நவ.6

சென். ஜோன்ஸ் கல்லூரியின் மாணவ முதல்வர் சபை அணிக்கும் கல்லூரி ஆசிரியர் அணிக்குமான நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மாணவர் முதல்வர் சபை அணியை எதிர்த்து ஆசிரியர் அணி மோதிக் கொண்டன.

ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றதில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# யாழ்.மாவட்ட அணி வெற்றி



கனிஷ்ட பிரிவு அணியுடனான ஆட்டத்தின் போது

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நட்பு ரீதியிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்ட அணி மற்றும் கனிஷ்ட பிரிவு அணி ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற நட்பு ரீதியிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இராணுவ ஆட்லறிப் பிரிவு அணியை எதிர்த்து யாழ. மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கக் கனிஷ்டபிரிவு அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்க கனிஷ்ட பிரிவு அணி 99:63 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

நேற்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட் டத்திடலில் இடம்பெற்ற இராணுவ ஆட்லறிப் பிரிவு அணிக் கும் யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட அணிக்கும் இடை யிலான ஆட்டத்தில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 70:40 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)

# யாழ்.பாடசாலைகளுக்கிடையே விரைவில் ஹொக்கிப் போட்டி

வலி.வடக்கு ,நவ.6

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தால் 15 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகளை நடத்துவதற்கு யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கான ஆண்கள், பெண்களுக்கான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலை அணிகளை யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கச் செயலாளர் ப.தர்மகுமாரனுடன் உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(த-86)

# அரையிறுதியாட்டம்

வலி.வடக்கு,நவ.6

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் 16 வயதுப் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப் போட்டி அரையிறுதி ஆட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதவுள்ளன. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்தால் விலகினார்

பெட் கிண்ண ரெனிஸ் போட்டியின் இறுதிப் போட்டியில் இருந்து ரஷ்ய வீராங்கனை வேரா ஸ்வோனரேவா காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக இரட்டையர் பிரிவில் விளையாடி வரும் மற்றொரு ரஷ்ய வீராங்கனையான எலினா வெஸ்னினா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேரா ஸ்வோனரேவா விலகியதால், ஸ்வெட்லானா குஸ்நெட்சோவா ரஷ்ய அணிக்கு தலைமை தாங்குகிறார். அனாஸ்டாஸியா பாவ்லிசென்கோவா, மரியா கிரிலென்கோ ஆகியோர் ரஷ்ய அணியில் இடம்பெற்றுள்ள மற்ற வீராங்கனைகள்.

ரஷ்ய அணி இறுதி ஆட்டத்தில் செக்.குடியரசை சந்திக்கிறது. அந்த அணிக்கு பெட்ரா விட்டோவா தலைமை தாங்குகிறார். லூச்சி சபரோவா, லூச்சி ரடேகா, வீட்டா பெஸ்கே ஆகியோரும் அந்த அணியில் இடம்பெற்றுள்ளனர். இறுதி போட்டி மொஸ்கோவில் நடைபெறுகிறது. (15)

# சதமடிப்பார் சச்சின்

## நம்பிக்கையுடன் டோனி

டெல்லி பெரோஸ் ஷா கொட்லா மைதானத்தில் இன்று ஆரம்பமாகும் இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் தனது 100 ஆவது சதத்தை எடுப்பார் என்று அணித் தலைவர் டோனி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

'அது நடந்தே தீரும், அவர் இங்கு அதனைச் சாதிப்பார் என்று நம்புகிறேன், நாம் அதனைக் கொண்டாடிவிட்டு மேலே செல்ல வேண்டும்' என்றார் டோனி. ஒரு அணியாக இந்தத் தொடரை வெல்ல வேண்டும், தொடரை நன்றாகத் தொடங்க வேண்டும் என்பது அவசியம். நாங்கள் அவர் தனது 100 ஆவது சதத்தை எடுப்பதை எதிர்பார்க்கிறோம் என்றார் டோனி.

அவர் மேலும் கூறுகையில்;

இந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு புதுமுக வீரர்கள் களமிறங்குவர் என்று கூறிய டோனி பெயர்களைக் குறிப்பிடவில்லை. அநேகமாக அஷ்வின் இருப்பார் மற்றாருவர் வேகப்பந்து வீச்சாளராக இருக்கலாம்.

கும்பிளே போல் வீசும் ராகுல் ஷர்மா அணியில் இடம் பெறுவாரா என்ற கேள்விக்கு டோனி, அவர் இதுவரை நன்றாக விளையாடி வந்துள்ளார், ஆனால் நாங்கள் எங்கள் அணியாயினும், எதிரணியாயினும் ஒரு தனித்த வீரர் மீது கவனம் செலுத்துவதில்லை'' என்றார்.

மேற்கிந்திய அணியை சாதாரணமாக எடைபோட்டுவிடக் கூடாது என்று கூறிய டோனி அங்கு பிஷூ தவிரவும் நல்ல வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர் எனவே எச்சரிக்கை தேவை என்றார்.

இங்கிலாந்து தொடரை நினைக்க விரும்பவில்லை, முதலாம் இடம் என்பதை தக்க வைக்க நன்றாக விளையாடுவது அவசியம் இங்கிலாந்தில் காயங்கள் காரணமாக சிறப்பாக விளையாடவில்லை இருந்தாலும் இங்கிருந்து ஏன் மீண்டும் முதலிடத்தைப் பிடிக்க முடியாது? என்று கேட்டார் டோனி.

ஆட்டக்களம் பற்றி கூறுகையில் 3 ஆம் நாளிலிருந்து பந்துகள் திரும்பும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறினார் டோனி.

முன்னதாக 15 இந்திய வீரர்களும் பயிற்சியாளர் டன்கன் பிளெட்சரின் மேற்பார்வையில் களத்தடுப்பு பயிற்சி செய்தனர். பயிற்சி அளித்தவர் களத்தடுப்பு பயிற்சியாளர் ட்ரவர் பென்னி. லக்ஸ்மன் துடுப்பாட்ட பயிற்சியிலும் சேவாக் களத்தடுப்பு பயிற்சியிலும் ஈடுபட்டனர். (15)



# வாழ்நாள் தடை வேண்டும்

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத் தண்டனை மட்டும் போதாது, போட்டியில் பங்கேற்க வாழ்நாள் தடையும் விதிக்க வேண்டும் என்று, முன்னணி வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதற்கான நடவடிக்கையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

இங்கிலாந்துக்குஎதிரானலோர்ட்ஸ் டெஸ்டில் (2010) பாகிஸ்தான் வீரர்கள், கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது. இதில், குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட சல்மான் பட் (30 மாதம்), முகமது ஆசிப் (ஒரு ஆண்டு), முகவர் மசார் மஜீத் (32 மாதம்) ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் முகமது ஆமிருக்கு, 18 வயது என்பதால், இவரது தண்டனைக் காலத்தில் (6 மாதம்) சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் இருக்க வேண்டும் என்று, லண்டன் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் வொட்சன் கூறுகையில், இங்கிலாந்தில் பாகிஸ்தான் வீரர்கள் செய்த செயல், மிகவும் ஏமாற்றமாக உள்ளது. இந்த மூன்று வீரர்களும் கிரிக்கெட் உணர்வை குழிக்குள் தள்ளும் செயலை செய்துள்ளனர். இந்த தவறான செயலுக்கு, இவர்களுக்கு வாழ்நாள் தடையும் விதிக்க வேண்டும். மொத்தத்தில் சிறைத் தண்டனை அல்லது வாழ்நாள் தடை என்பது இவர்களுக்கு கடுமை யான தண்டனை என்பதில் சந் தேகம் இல்லை, என்றார்.


**இது போதாது:**

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் வோவ் கூறுகையில், இதுபோன்ற தீர்ப்புகள் இதற்கு முன் கிடைத்தது இல்லை. மற்றவர்களை விட, இளம் ஆமிருக்கு மிகவும் கடினமானது. சிறையில் இருக்கும் நாட்களில் இவர்கள் திருந்துவார்கள் என்று நினைக்கிறேன். மூளையாக செயல்பட்ட சல்மான் பட்டுக்கு இன்னும் அதிக அபராதம் விதித்திருக்க வேண்டும்.

**எச்சரிக்கை செய்தி:**

ஆஸ்திரேலிய வீரர்கள் சங்கத்தின் தலைவர் டிம் மே கூறுகையில், ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்புக்காக ஐ.சி.சி. கோடிக்கணக்கில் செலவிடுகிறது. இந்த நிலையில் பாகிஸ்தானின் மூன்று வீரர்கள் சிறைத் தண்டனை பெற்றிருப்பது சோகமான சம்பவம். இந்த தீர்ப்பு திருப்தி தருகிறது. ஏனெனில், அனைத்து விளையாட்டிலும் ஊழல் செய்யும் வீரர்களுக்கு இது எச்சரிக்கை செய்தியாக அமைந்தது, என்றார்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் சைமண்ட்ஸ் கூறுகையில், நான் விளையாடிய போதும் 'மட்ச் பிக்சிங்' இருந்தது. இப்போது கிடைத்துள்ள தீர்ப்பு மூலம் சூதாட்டம் விலகும் என்று நம்புகிறேன். இருப்பினும், கிரிக்கெட்டை விட்டு சூதாட்டத்தை விரட்டும் வேலைகள் மெதுவாகத் தான் நடக்கின்றன, என்றார். (15)



யுனிஸ் கான்

## பாகிஸ்தானுடனான டெஸ்ட் ஆட்டம்

# சமனிலை நோக்கி இலங்கை

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி 282 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்துள்ளது. அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக் 50, அப்துர் ரெஹிமான் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் இடம் பெற்று வருகின்றது. முதலாவது டெஸ்ட் சமநிலையிலும் இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் தொடரை சமப்படுத்த இலங்கை அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களம் புகுந்தது. சார்ஜா மைதானத்தில் வியாழக்கிழமை மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணி அணித்தலைவர் டில்ஷான் மற்றும் சங்ககாரவின் உதவியுடன் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையினை பெற்றுக் கொண்டது. இலங்கை அணி 153.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 413 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சங்ககார 144, டில்ஷான் 92, மஹேல, கௌசல சில்வா 39 ஓட்டங்களையும் ஹேரத் ஆட்டமிழக்காமல் 35 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் சுழற்பந்து வீச்சாளர் அஜ்மல் 4, வேகப் பந்து வீச்சாளரான உமர்குல் 3 மற்றும் யுனைட் ஹான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

